

கல்கி
1959
KALKI
ஜனவரி 4
30

# குதூகலமான மங்கை

அலுவல்களைச் சரிவரச் செய்துமுடிப்பவள் ...
விருந்துக்கும் வைபவத்துக்கும் முந்துபவள் —




அவள் உபயோகிப்பது புத்துணர்ச்சியூட்டுவதும்
சிறந்த எண்ணெய்கள் சேர்க்கப்பட்டதுமான
ஓ-டி-கோலோன் சோப் ...
மற்றும் உல்லாசமூட்டும் குளிர்ச்சியான வாசனைத்
திரவம் ஓ-டி-கோலோன்.

**டாடாவின் ஓ - டி - கோலோன்**
**மற்றும் ஓ - டி - கோலோன் சோப்**

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்



# கல்கி

## பொருளடக்கம்



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.








| | | |
|---|---|---|
| மலர் 18<br>இதழ் 23 | தமிழ்த்திரு நாடு தன்னைப் —பெற்ற<br>தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார் | விளம்பி௵<br>மார்கழி 20 |


# புது வருஷம் வருகிறது, ஜாக்கிரதை!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தெட்டாம் வருஷம் முடிந்து ஐம்பத்தொன்பதாம் வருஷம் பிறந்திருக்கிறது! இந்தப் புது வருஷத்தில் நேயர்களுக்கெல்லாம் நமது புது வருஷ வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்ற வருஷத்தை நினைத்துப் பார்த்து அந்த ஆண்டில் செய்த தவறுகளையெல்லாம் இந்த ஆண்டில் செய்யாமல் இருப்போமாக என்று இறைவனைப் பிரார்த்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் பழைய தவறுகளினால் இந்திய சர்க்கார் ஒரு புதுப்பாடமும் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. வர வரப் பிடிவாதம்தான் அதிகமாகி வருகிறது. எடுத்த காரியத்தில் காணும் குற்றம் குறைகளைச் சொன்னால் கோபம் தான் வருகிறது!

சில நாட்களுக்கு முன் நேருஜி தொழில்களையும் வியாபாரத்தையும் சர்க்கார் நடத்துவதை யாராலும் தடுக்க முடியாது என்று கடுமையாக எச்சரித்தார். தொழில்களையும், வியாபாரங்களையும் சர்க்கார் ஏற்று நடத்துவதில் ஆட்சேபணையில்லை! ஆனால் பொதுமக்களின் நன்மையைக் கருதி இவ்வாறு செய்யப்படுவதாகச் சொல்லிக்கொண்டு பொதுமக்கள் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவதைப் பார்க்கும்போதுதான் வியாபாரத்தில் சர்க்கார் புகுவது நல்லதல்ல என்று எச்சரிக்கை செய்ய வேண்டியிருக்கிறது.

சர்க்கார் சிமிண்ட் வியாபாரத்தில் புகுந்தது. சிமிண்ட் விலை ஏகத்தாறாக உயர்ந்தது. மாங்கனீஸ் கனிப்பொருள் ஏற்றுமதியில் தலையிட்டது. அதன் விளைவாகப் பல கனிகள் மூடநேர்ந்தது; வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது. இப்பொழுது உணவு தானிய வியாபாரத்தில் இறங்கப் போவதாகப் பயமுறுத்துகிறது. இந்திய அரசாங்கம். இவ்விஷயத்தில் நமது பிரதமர் நேருவும் மிகத் தீவிரமாக இருக்கிறார். அரிசி வியாபாரத்தைச் சர்க்கார் எடுத்துக் கொண்டே தீரும் என்று மிரட்டுகிறார். ஆனால் மக்கள் அரிசி ரேஷன் இருந்த நாட்களை இன்னும் மறந்து விடவில்லை. சர்க்கார் அதிகாரிகள் களத்து மேடுகளில் புகுந்து கொள்முதல் செய்த கொடுமையையும் இன்னும் மறக்கவில்லை. ஏழை எளிய விவசாயிகளின் வீடுகளில் புகுந்து பானையையும் சட்டியையும் உடைத்து நெல் பதுக்கி வைத்திருக்கிறார்களா என்று சோதனை போட்ட காலத்தையெல்லாம் மறந்து விடவில்லை. ரேஷன் கடைகளில் அரிசி வாங்கிச் சாப்பிட்ட பொது மக்களும் தங்கள் அனுபவங்களை மறந்து விடவில்லை. ஒருவாரம் கிடைக்கும் அரிசி வயிற்று வலி எடுக்கும், அடுத்த வாரம் கிடைக்கும் அரிசி பிசினைப்போல் குழையும். அதற்கு அடுத்த வாரம் கிடைக்கும் அரிசி வயிற்றுப்போக்கையே உண்டாக்கிவிடும்! உணவு தானிய கண்ட்ரோல் வந்தால் கூடவே கறுப்பு மார்க்கெட் பிசாசும் வந்து சேரும். இந்தத் தொல்லைகளிலிருந் தெல்லாம் தப்பிப் பிழைத்துச் சற்று நிம்மதியாக வாழும் மக்களை மீண்டும் இந்தச் சங்கடங்களுக்கு உட்படுத்தப் பார்க்கிறார்கள்.

இவற்றையெல்லாம் நேருஜி மறந்து மீண்டும் உணவு தானியக் கொள்முதலைச் சர்க்கார் செய்தேயாக வேண்டும் என்று பேசுகிறார்.

'இந்தமாதிரி நேருஜிக்கு அடங்கிய பிள்ளை கிடையாது' என்று காண்பித்துக் கொள்ளச் சென்னை சர்க்கார் நேருஜியின் கொள்கையை அமுல் நடத்தத் தயார் என்று ஒரு திட்டம் தயாரித்தார்கள். நெல் கொள்முதல் செய்ய இன்னின்னாருக்கு லைசென்சு வழங்கப்படும் என்பதாக அறிவித்தார்கள். அதன் விளைவாக இன்று தமிழ் நாட்டில் ஒரு அதிசயம் நிகழ்ந்து வருகிறது.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் உணவு தானிய விலை குறைந்து வருகிறது. நமது ராஜ்யத்தில் விலை குறைய வேண்டிய இந்தப் பருவத்தில், விலை ஏறிக் கொண்டிருக்கிறது! இதனால் அதிகமாகக் கஷ்டப்படுகிறவர்கள் ஏழை எளிய பாமர மக்கள். சர்க்கார் லைசென்சு என்ற வார்த்தைக்கே என்ன மகத்துவம் பாருங்கள்!

பிரிட்டனில் பேராசிரியர் கால்டோர் என்று ஒரு பொருளாதார நிபுணர். அவர் தான் முதன் முதலில் இந்திய சர்க்காருக்குப் பணம் திரட்டச் செல்வ வரி, செலவு வரி என்ற இரு புது வரி இனங்களை மேற்கொள்ளுமாறு ஆலோசனை சொன்னார். அத்துடன் அவர் நாட்டில் மூலதனம் சேர்ந்து தொழில்கள் பெருகும் வகையில் சலுகை காட்டி இவ் வரிகள் விதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர் கூறிய சலுகைகள் பற்றியெல்லாம் கவலைப்படாமல், உலகத்துக்கொரு புதுமையாகவுள்ள இந்த இரண்டு வரிகளைமட்டும் விதித்து விட்டு, மூலதனம் சேருவதற்குரிய வழி வகைகளே இல்லாமல் இந்திய சர்க்கார் செய்துவிட்டார்கள்.

இப்போது மீண்டும் அதே பேராசிரியரை இந்திய வரி முறைகளைப் பரிசீலனை செய்து தமது அபிப்பிராயம் கூறும்படி இந்தியசர்க்கார் கேட்டார்கள்.

இதற்கு அவர், இந்த இரண்டு வரிகள் தமது கருத்துக்கு முரணாக விதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை வற்புறுத்தாமல் இன்னொரு விசுவாமித்திர சிருஷ்டியைச் செய்து விட்டுப் போய் இருக்கிறார். அதாவது கூட்டுக் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்குப் "பிறப்பு வரி" என்று ஒரு வரி விதிக்கலாம் என்று ஒரு புது யோசனை சொல்லியிருக்கிறார்.

எப்படியிருக்கிறது கதை! பணத்துக்கு ஆலாகப் பறக்கும் சர்க்கார் இந்நிலையில் இவ்வரியையும் விதித்து விடுவார்களோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. செல்வம் சேமித்து வைத்தால் செல்வ வரி; செலவு செய்தால் செலவு வரி; இறந்துபோனால் எஸ்டேட் வரி; சொத்துக்கு உரிமையோடு குழந்தை பிறந்தால் பிறப்பு வரி. — இப்படிப் பிறவியிலிருந்து சாகும்வரை 'வரி வரி' என்று வரி விதித்து விட்டுப் போகிறார்கள். இப்படியெல்லாம் கசக்கிப் பிழிந்து திரட்டிய பணம் நல்ல படியாக, நாட்டுக்குப் பயன் அளிக்கும் வகையில் செலவிடப்படுகிறதா என்றால் அதுதான் இல்லை. பணம் வீண் விரயமாவதற்கு ஒரு கணக்கில்லை. ஒவ்வொரு ஆண்டிலும் சர்க்கார் வரவு செலவுத் தணிக்கையாளர் அளிக்கும் அறிக்கையைப் பார்த்தால் மனத்துக்கு வேதனை தருவதாகவே இருந்து வருகிறது.

நம் நாட்டில் நடக்கும் களேபரங்கள் போதாதென்று, இலங்கை சர்க்கார் வேறு ஒரு பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டிருக்கிறார்கள். இனி இலங்கையில் இந்திய லுங்கிகளை இறக்குமதி செய்ய அனுமதிக்கப் போவதில்லை என்று கூறியிருக்கிறார்கள். நமது நாட்டு, முக்கியமாக, தமிழ் நாட்டுக் கைத்தறி நெசவாளர்கள் அரை வயிற்றுக் கஞ்சி பெறுவது இந்த லுங்கி இலங்கைக்கு ஏற்றுமதியாகும் வர்த்தகத்தைப் பொறுத்துத்தான். இப்பொழுது அதற்கும் வந்தது வினை!

இப்படி எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும், ஐம்பத்தொன்பதாம் ஆண்டு கடும் சோதனைகள் நிரம்பிய ஆண்டாகத்தான் இருக்கும்போல் காண்கிறது.

மனித சரித்திரத்தை எடுத்துக் கொண்டால் மனிதன் எத்தனையோ இன்னல்களைக் கண்டு, அவற்றையெல்லாம் வெற்றி கண்டிருக்கிறான்! அப் பண்பு தொழிற்பட்டு, எத்தனை இன்னல்கள் வந்தாலும் கடந்து வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில்தான் நேயர்களுக்குப் புத்தாண்டு நல்வாழ்த்துக் கூறுகிறோம்.

## அழகை அநுபவிக்கும் அணங்கு

டிசம்பர் - ஜனவரி மாதங்கள் குளிர் காலந்தான். அந்த மாதங்களே கலை மாதங்களாகவும் திகழ்கின்றன. சென்னை நகரத்தில் இம்மாதத்தில் மூலைக்கு மூலை சங்கீத நிகழ்ச்சிகளும், நாட்டிய நிகழ்ச்சிகளும், நாடக நிகழ்ச்சிகளும், கலைக்காட்சிகளும், பொருட் காட்சிகளும் நிகழ்கின்றன. இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப ஓவியர் மணியம் ஒரு நவநாகரிக நாரீமணி பழங்காலச் சிற்பக் கலையை அநுபவிக்கும் அரிய காட்சியை இவ் வார அட்டைச் சித்திரமாக வழங்குகிறார்.


அந்த அழகி காணும் சிற்பம், 2000 வருடங்களுக்கு முந்தையது என்கிறார்கள் சரித்திர ஆராய்ச்சியாளர்கள். அந்த அழகியோ, இந்த இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவள். இப்படிப் பழமையையும் புதுமையையும் இணைத்து ஒரே சித்திரத்தில் வழங்கியிருக்கிறார் ஓவியர். நம்மை விட அதிர்ஷ்டசாலிகள் யார்?

## ராஜாஜியின் வேண்டுகோள்

ராஜாஜி அவர்கள் சில நாட்களாக உடல்நிலை சுகமின்றியிருக்கிறார் என்பது அனைவருக்கும் தெரியும். அவர் இன்னும் பூரண குணமடையவில்லை. அவருடைய பிறந்த நாளை யொட்டியும், பிறந்த தின விழாவை யொட்டியும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான வாழ்த்துக் கடிதங்களும் மற்றக் கடிதங்களும் வந்துள்ளன. அவற்றுக்கெல்லாம் பதில் எழுத முடியாத நிலையில் இருக்கிறார். இதற்காக அன்பர்கள் தம்மை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறார் ராஜாஜி.

# புது வருஷப் பரிசுகள்!

சில தலைவர்களுக்கு நமது கார்ட்டூன் சித்திரக்காரர் புது வருஷத்திய பரிசுகள் வழங்கலாம் என்கிறார்.



# குறிப்பிட்ட நோக்கத்தோடு

# சேமியுங்கள்



அத்தகைய சேமிப்புகள்

உங்கள் குழந்தையின் கல்வி



வளமான வாழ்வு தொடங்க அல்லது
திருமணத்திற்கு



உங்கள் வயோதிக காலத்
தேவைகளுக்கு



அல்லது ஒரு வீடு கட்ட

பயன்படும். மாதம் தவறாமல் சேமித்து விவேகமான முறையில் முதலீடு செய்ய வசதியானது உங்கள் அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் புதிய

## வளரும் மாதச் சேமிப்புத் திட்டம்

| | |
|---|---|
| மாதாமாதம் முதலீடு செய்யுங்கள் ▶ | ஒவ்வொரு மாதமும் ரூ. 5, ரூ. 10, ரூ. 20, ரூ. 50, ரூ. 100, அல்லது ரூ. 200. |
| ஒவ்வொரு மாதமும் கட்டும் ரூ. 10 க்கு உங்களுக்குக் கிடைப்பது ▶ | ஐந்து வருஷ முடிவில் ரூ. 650, பத்து வருஷ முடிவில் ரூ. 1,450. |
| முதலீட்டு எல்லை ▶ | ஒரு தனிப்பட்ட நபருக்கு ரூ. 12,000. இரண்டு வயது வந்தவர்கள் கூட்டாக ரூ. 21,000. |
| தொடர்ச்சியாகப் பணம் கட்ட முடியவில்லை என்றால் ▶ | (அ) 5 வருஷ திட்டத்தின் பேரில் 5 மாதங்களும், 10 வருஷ திட்டத்தின் பேரில் 10 மாதங்களும் தவணை முறிவு அனுமதிக்கப்படும். அதற்குத் தகுந்தபடி முதிர்வு தேதிகளும் தள்ளிப்போடப்படும் (ஆ) முதிர்ந்தவுடன் முதலீட்டிற்கு ஏற்ப பணம் கொடுக்கப்படும். |

உங்கள் தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கி அல்லது

## தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

தேவையான மற்ற விவரங்கள் தந்து மகிழ்வுடன் உங்களுக்கு உதவத் தயாராக உள்ளன.

DA-58/144

# அருள் வாக்கு

உலகம் முழுவதும் பரமாத்மா என்று சாஸ்திரம் சொல்லுகிறது. நாமே பரமாத்மா என்று சொல்லுவது ஒரு அகம்பாவமல்லவா! மற்ற மதங்களில் பகவானின் அருள் பிரார்த்திக்கப் படுகிறது. நாம் எல்லோரும் சுவாமி என்பது உசிதமாயில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் அத்வைத சாஸ்திரம் என்ன சொல்லுகிறது? பரமாத்மாதான் எங்கும் நிறைந்திருக்கிறார். அவர் தவிர வேறு இல்லை என்று சாஸ்திரம் கூறுகிறது. அவர் தவிர வேறு ஒன்றிருப்பின் பல சாமான்களில் அவர் ஒன்றாகி விடுவார். எல்லாம் அவராகி விடும்பொழுது நாம் மாத்திரம் வேறாக இருப்பதற்கில்லை. ஆனால் நாம் என்று ஒன்று தோன்றுகிறது. அதையும் பரமாத்ம ஸ்வரூபத்தில் கரைத்துவிட வேண்டும். நம்மிடத்தில் குழந்தை அன்பாக இருக்கிறது. அது க்ஷேமமாக இருப்பின் நம் பாடு எப்படியேனும் ஆகட்டுமென்று நினைக்கிறோம். அப்படியே அந்த மங்கள ஸ்வரூபம் இருந்தால் போதும். அதில் நான் என்னும் பாவத்தைக் கரைத்து விட வேண்டும். அப்படி நான் என்னும் பாவனை அற்று விட்டால் மிஞ்சி உள்ளது பரமாத்மா தான். அத்வைதத்தில் நான் என்னும் பாவனை கரைந்து விடுகிறது. அவர் தான் விஷ்ணு, சிவன், சக்தி எல்லாம்.

அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? தேகத்தை நாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். நகத்தைக் கிள்ளி விட்டால் அது வேறாகி விடுகிறது. நாம் அல்லாத வஸ்துவை நாம் என்று எண்ணுகிற நினைவு போக வேண்டும். உண்மையில் நாம் என்கிற வஸ்து கத்தியால் வெட்டப்பட மாட்டாது. நெருப்பிலிட்டால் எரியாது. அதுபோல் பரமாத்மாதான் நாம் என்கிற பாவனையைச் சாதனையில் கொண்டு வந்தால் சரீர அபிமானம் போய்விடும். பல பெரியோர்கள் சரீர அபிமானமின்றிப் பல வருஷங்கள் தியான யோகத்தில் இருந்ததாகக் கேள்விப் பட்டிருந்தோம். அந்தத் தத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டும். எல்லா வஸ்துக்களும் நாம் என்று நினைக்க வேண்டும். அகம் போய் விடும்போது அகம்பாவமும் போய் விடும். அதற்குள்ள சாதனை, நம் காலத்தை அர்ப்பணிக்க வேண்டும், ஈசனுக்கு. அவரைத் தியானிக்க வேண்டும். முதலில் நம் பொருள்களை, அதாவது நாம் உபயோகிக்கும் பொருள்களை அவருக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். இரண்டாவது நமது கர்மாக்களை, அதாவது நாம் செய்யும் சேவைகளை அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். முடிவில் நம்மையே கரைத்து அவருள் ஒன்றறக் கலக்க வேண்டும்.

கோயில்களில் பால் அபிஷேகம் செய்வது நஷ்டம் என்று சிலர் கூறுகின்றனர். அந்தப் பாலை இல்லாதவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் பசி அடங்கும் என்று வாதம் செய்கிறார்கள். நாம் பகவான் என்ற எண்ணம் வந்து விடின் இவையெல்லாம் நஷ்டமாகத் தோன்றாது. குழந்தைக்கு அசௌக்கியம் நேரிடின் நாம் பணத்தைத் திரணமாகக் கருதிச்செலவழிக்க வில்லையா? ஏனென்றால் நம் குழந்தை என்ற பாவனையால் நஷ்டம் தோன்றாது. ஒருவரிடம் எல்லையற்ற பிரியம் வைத்தால் அவருக்கு நாம் எல்லாவற்றையும் தயங்காமல் அர்ப்பணிக்கின்றோம். ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் எண்ணற்ற மகான்கள் அப்படித்தான் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணித்தார்கள்.

கோயில்கள் கட்டினதற்குக் காரணம் சொத்தைக் காட்டிலும் பகவானைப் பெரிதாக நினைத்ததுதான். சிற்பிகள் தங்களுடைய ஒப்பற்ற வித்தையை ஈசுவரனுக்கு அர்ப்பணித்தனர். கவிகள் அப்படியே பாமாலைகளால் இறைவனை அலங்கரித்தனர். அநுதினமும் ஐந்து நிமிடங்களாவது பகவந்நாம ஸ்மரணம் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் சிறிதளவு தர்ம கைங்கரியம் புரிந்தால் லோகத்தில் ஜனங்களின் கஷ்டம் நிவர்த்தியாகி விடும்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் ✧ காஞ்சி காமகோடி பீடம்

# இலங்கையின் நண்பர்

—கொழும்பு, டிசம்பர், 28உ

நாவலப்பிட்டித் தொகுதியின் பார்லி மெண்ட் அங்கத்தினரான திரு ஆர். இ. ஜயதிலகா என்பவர் இவ்வாரம் ஒரு முக்கியமான விஷயத்தை அம்பலப்படுத்தி அரசாங்கத்தின் வண்டவாளங்களை எடுத் துரைத்தார். சென்ற முப்பது ஆண்டு களுக்கு அதிகமாக 'செட்டிநாட் கார்ப்ப ரேஷ'னில் மானேஜராகப் பணிபுரிந்து இந் நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு அரும்பெரும் சேவைகள் செய்துள்ள திரு சொக்கலிங்கம் செட்டியாருக்கு நாடெங் கும் நடைபெற்றுவரும் கணக்கிலடங்காத பிரிவுபசார விருந்துக் கூட்டங்களிலொன் றில் திரு ஜயதிலகா பேசியபோது, "கைத் தொழில் வளர்ச்சிக்கு அந்நிய மூலதனம் வேண்டுமென்று கையில் பிக்ஷா பாத்தி ரத்துடன் உலகம் முழுதும் வலம் வரும் நமது மந்திரிகள் ஏற்கனவே இங்குபெரும் தொகையை முதலீடு செய்துள்ள இந்தியர் களை விரட்டுவது விந்தையிலும் விந்தையா யிருக்கிறது" என்று ஒரு சாட்டையடி கொடுத்தார்.

ஆயினும் பெரும்பாலான சிங்களப் பொது மக்களுக்கு இந்தியர்களிடம் துவேஷம் கிடையாதென்றும், இளை ஞர்கள் தங்கள் செல்வாக்கை உணரச் செய்யும்போது இலங்கை இந்திய உறவு நல்லபடியாக மாறியமையும் என்றும் கூறினர் திரு ஜயதிலகா. இந்தியாவுக்குத் திரும்பும் திரு சொக்கலிங்கம் செட்டியார் இலங்கையிடம் இந்தியாவின் நல்லெண் ணத்தை வளர்க்க இயன்றதை யெல்லாம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண் டார். இந்திய உதவி ஹை கமிஷனர் திரு பி. என். நந்தா பேசுகையில், வெளிநாடு களில் வசிக்கும் இந்தியர்கள் அந் நாட்டு மக்களுடன் தோழமையுடன் வாழ வேண்டுமென்பதுதான் இந்திய அரசாங் கத்தின் கொள்கையென்றும் அந்தக் கொள்கைக்கு அமையவும் இந்தியக் கலா சாரப் பண்பாடுகளுக்கு ஒரு உதாரண புருஷராகவும் திரு செட்டியார் இலங்கை யில் வாழ்ந்து காட்டியது இந்தியா முழு வதற்குமே பெருமையை அளிக்கிற தென்றும் கூறினர். இலங்கை இந்தியர் களிலே வேறு எவருக்கும் எந்தக் காலத் திலும் நடைபெற்றிராதமாதிரியான உப சாரங்கள் திரு சொக்கலிங்கம் செட்டியா ருக்கு நாடெங்கும் நடைபெறுவது எல் லாச் சமூகத்தவரிடையிலும் அவர் பெற் றுள்ள செல்வாக்கையும் நன்மதிப்பையும் எடுத்துக் காட்டுவதாக வுள்ளது. இந் நாட்டில் இன்ஜினீயரிங் தொழிலை ஆரம் பித்து முறையாக அபிவிருத்தி செய்த பெருமை அவரையே சார்ந்தது.

செட்டிநாட் கார்ப்பொரேஷன் ஊழி யர்கள் தென்னிந்தியப் பண்பாடுகளை அனுசரித்து நாதஸ்வர வாத்திய கோஷத் துடன் திரு செட்டியாருக்குக் கொழும்பு டவுன் ஹாலில் அளித்த ஒரு உபசாரம் மிக மிக உருக்கமா யிருந்தது. —ரஜனி

# சென்னையில் குதூகலம்

இந்திய சர்க்காரின் மத்திய உள்நாட்டு மந்திரி ஸ்ரீ கோவிந்த் வல்லபபந்த் சென்னையில் பல கூட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டார். அங்கெல்லாம் கூட்டத்தையும் காணும், மக்களிடையே உற்சாகத்தையும் காணும். ஆனால் ராஜாஜி ஜெயந்தி விழாவுக்குத் தலைமை வகித்த போது, அவ்விழா நடந்த மன்றம் முழுதும் நிரம்பி வழிந்ததோடு, வெளியில் தெருவில் எல்லாம் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமி நின்றதைப் பார்த்தபோது ராஜாஜியின் செல்வாக்கு எவ்வளவு, அவரிடம் தமிழ் மக்கள் எவ்வளவு அன்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்திருப்பார்.

இதையே அன்றையக் கூட்டத்தில் பேசிய சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் வெகு அழகாகக் குறிப்பிட்டார்:

"பத்து ஆண்டுகளுக்கு முன்பு ராஜாஜியின் எழுபதாவது பிறந்த தின விழா நடைபெற்றது. அப்போது அவர் வங்கத்தின் கவர்னராக இருந்தார். அதற்குப் பிறகு இப்போது பிறந்ததின விழா நடைபெறுகிறது. இப்போது அவர் ஒரு பதவியிலுமில்லை. இருந்தாலும் மக்கள் அவரிடம் அன்பு செலுத்துவது முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகியிருக்கிறது என்பதற்கு இந்தக் கூட்டம் ஒன்றே சான்று!" என்றார். இதை முழு மனத்துடன் ஆமோதிப்பது போல் எழுந்த கரகோஷம் விண்ணை இடித்தது என்று கூறுவது மிகையாகாது.

அன்று பேசிய நீதிபதி திரு பி. வி. ராஜமன்னார் அவர்கள், வெகு அழகாகப் பேசிச் சிறப்பாகமுடித்தார். அந்தமுடிவை மட்டும் இங்கு சொல்லலாம் என்று நினைக்கிறேன். "ராஜாஜியின் பெயர் ராஜ கோபாலாச்சாரியார். இதில் மூன்று பதங்கள் உள்ளன. ராஜ – கோபால - ஆசார்ய. இந்த மூன்று பதங்களுக்கும் பொருத்தமாகவே அவர் நடந்துகொண்டிருக்கிறார். பாரத நாட்டின் தலை சிறந்த ராஜ பதவியாகிய கவர்னர் ஜெனரல் பதவியை நிர்வகித்தார். கோபால என்றால் மாடுமேய்ப்பவன் என்று பொருள். 1952-ம் ஆண்டில் சென்னை சட்டசபையில் ஒற்றுமையும் ஒழுங்கும் இல்லாத பல கட்சிகள் கொண்ட மந்தையாக வந்தடைந்த போது, சிறந்த மாடு மேய்ப்பவனாக, இந்தக் கூட்டத்தை அடக்கி ஒழுங்குபடுத்திக் கொண்டு போனார். அவ்வகையில் கோபால என்ற பெயருக்கு ஏற்ப நடந்துகொண்டார். இன்று பாரதநாட்டுக்கும் உலகத்துக்கும் வழிகாட்டும் ஆசார்யராகத் தக்க சமயத்தில் அருளுபதேசம் செய்து வருகிறார்!" என்றார். கூடியிருந்த மக்களும் முழுமனத்தோடு அவர் கூறியதை ஒப்புக் கொண்டனர்.

இவர்கள் தவிர, சென்னை போலீஸ் மந்திரி திரு பக்தவத்ஸலம் அவர்கள் பேசினார். ராஜாஜியைத் தமிழ் மக்கள் அறிந்த நாள் முதல் தானும் நெருங்கிப்பழகி அறிந்திருப்பதாகப் பெருமிதத்துடன் கூறினார்.

தமது பாட்டனாரும் ராஜாஜியும் நெருங்கிய நண்பர்கள் என்றும், தமது பாட்டனார் ராஜாஜியை அந்த நாட்களிலேயே வியந்து கூறியவற்றையும் ரஸமாக ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசம் எடுத்துக் கூறினார்.

ஸ்ரீமான் எஸ். வை. கிருஷ்ணஸ்வாமி ராஜாஜி ஒரு வேதாந்தி என்பதைச் சாங்கோபாங்கமாக எழுதி வந்து வாசிக்கத் தலைப்பட்டார்.

திரு ம. பொ. சி. பேச எழுந்தவுடனேயே சபையில் குதூகலமும் வரவேற்பும் கண்டவுடன் திரு பந்த் அவர்கள் ம. பொ. சி. யைப்பற்றி அறிந்து கொள்ள உற்சாகம் காண்பித்தார். அவர் தமிழரசுக் கழகத்தின் தலைவர் என்றவுடன் தி. க., தி. மு. க. கழகங்களுடன் குழப்பிக்கொண்டார். அடிப்படையில் தமிழரசுக் கழகத்துக்கும் மற்றக் கழகங்களுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்க வேண்டியதாகி விட்டது. அதில் ம. பொ. சி.யின் பேச்சைக் கோட்டை விட்டேன். அதனால் என்ன? ம. பொ. சி. ராஜாஜியைப் பற்றி எப்படிப் பேசியிருப்பார் என்பதை விவரித்துச் சொல்லவும் வேண்டுமா?

இந்த விழா இவ்வளவு சிறப்பாக அமைந்ததற்குக் காரணம் திரு க. சந்தானம் அவர்கள்தான். அவர் பந்த் அவர்களைத் தலைமை தாங்க அழைத்ததின் பேரிலேயே திரு பந்த் வருவதற்கு இசைந்தார். அன்று க. சந்தானம் அவர்களே பந்த் அவர்களுக்கு வரவேற்புரை நல்கினார்.


திரு பந்த் அவர்கள் தமது தலைமையுரையில், "ராஜாஜி தேசத்துக்குத் தலைமைதாங்கிப் பல துறைகளில் செய்துள்ள சேவையின் காரணமாகவே நாம் இன்று இத்தகைய உயரிய நிலையில் இருக்கிறோம்" என்று கூறினார்.

கடைசியில் நன்றி கூறிய திரு எஸ். நாராயணஸ்வாமி அவர்கள், "இந்த வருஷத்தைவிட அடுத்த வருஷம்தான் சிறப்பு வாய்ந்தது. 81-வது பிறந்த நாள். ராஜாஜியின் சதாபிஷேகம் கொண்டாடப்பட வேண்டிய நாள். அதைத் தேசத்தின் பல பாகங்களிலும் சிறப்பாக நடத்தித் தேசியப் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டும்!" என்று கூறி முடித்தார்.

திரு குழிக்கரை பிச்சையப்பா அவர்கள் நாதஸ்வரத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். மாலை ஆறு மணியிலிருந்து, பந்த் அவர்கள் 7-45 மணிக்கு வந்து வரைக்கும் கர்ணாம்ருதமான கானத்தைப் பொழிந்து சபையோர் அலுத்துப் போகாமல் நாத வெள்ளத்தில் மிதக்கச் செய்தார்.

அன்று வந்திருந்தவர் அனைவரும் 'ராஜாஜி நீடூழி வாழ்க' என்று வாழ்த்திக் கொண்டே திரும்பினர்.—எஸ்.வி.எஸ்.



ராஜாஜி
ஜெயந்தி விழா
1
2
3
4
5
6






ராஜாஜியின் பிறந்ததின விழா சென்ற டிசம்பர் மாதம் 22-ம் தேதி சென்னை மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபா மண்டபத்தில் மத்திய மந்திரி திரு கோவிந்த வல்லப பந்த் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ் வைபவத்தில் பல பிரமுகர்களும் பொதுமக்களும் பெருந்திரளாக வந்து கலந்து கொண்டார்கள். இந்த விழாக் காட்சிகளை இப்பக்கங்களில் காணலாம்.

1. கல்கி அதிபர் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் பந்த் அவர்களுக்கு மலர்மாலை அணிவிக்கிறார். 2. விழாவுக்கு வந்திருந்த திரளான மக்களின் ஒரு பகுதி. 3. விழாவை நடத்த முக்கிய பொறுப்பேற்றுக் கொண்ட திரு சித்ரா எஸ். நாராயணசுவாமி, விழாவில் பேசிய ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசமும், தமது போலீஸ் மந்திரி திரு பக்தவத்ஸலமும். 4. திரு க. சந்தானம் விழாக் கமிட்டியார் சார்பில் திரு பந்த் அவர்களை வரவேற்றுப் பேசுகிறார். 5. ஆர். ஆர். சபா ஹாலில் கூடியிருந்த மக்களின் மற்றொரு பகுதி. 6. திரு ம. பொ. சி.யின் விசபர்ஜனை. 7. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி, ஸ்ரீமதி ராதா விசுவநாதன், இவர்களுடைய இறைவணக்கப் பாட்டுடன் விழா ஆரம்பமாயிற்று. 8. சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு ஏ. லட்சுமணசுவாமி முதலியார் பேசுகிறார். 9. தலைவர் திரு பந்த் பேசுகிறார். அவர் பக்கத்தில் அமர்ந்திருப்பவர்தான் நீதிபதி திரு பி.வி. ராஜமன்னார். 10. திரு எஸ்.ஒய். கிருஷ்ணஸ்வாமி தயாரித்துக் கொண்டுவந்திருந்த பிரசங்கத்தைப் படிக்கிறார்.





# ராம்தீர்த் யோகாஸ்ரமத்தின் சில செயல்கள்



SHRI YOGIRAJ UMESHCHANDRAJI



## ராம்தீர்த் பிராமி ஆயில் - ஸ்பெஷல் நெ. 1

கூந்தல் தைலம், மூளைக்கு ஒளஷதம், கண்களுக்கும் ஞாபக சக்திக்கும், ஆழ்ந்த நித்திரைக்கும் உடல் வலியைப் போக்குவதிலும், **ராம்தீர்த் பிராமி ஆயில்** யாவருக்கும், எக்காலத்தும் உகந்தது. கிடைத்தற்கரிய பலவித மூலிகைகளினால் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட **ராம்தீர்த் பிராமி ஆயில்** இப்பொழுது எல்லா இடங்களிலும் புதிய பாட்டிலில் கிடைக்கிறது.

பெரிய பாட்டில் விலை ரூ. 4/-; சிறியது ரூ. 2/-

எங்கும் கிடைக்கும்

**பலவித உன்னத மூலிகைகளினால் ராம்தீர்த் பிரம்மி எண்ணெய் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது**

### யோகாசன வரைவு படம்

ஆரோக்யமாகவும், திடமாகவும் திகழ யோகாசனங்களை விவரிக்கும் எமது அழகான ஆசனப் படத்திற்கு எழுதுங்கள். ரூ. 2.50 மணியார்டர் அனுப்பி இப்படத்தைப் பெற்றுக்கொள்ளலாம். வீட்டிலிருந்தே ஆசனங்களைச் சுலபமாகப் பழகலாம்.

**யோகாசன வகுப்புகள்:** காலை 7-30லிருந்து 9-30 மணி வரையிலும், மாலையில் 6-லிருந்து 7-30 மணி வரையிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பிரதி ஞாயிறுதோறும் காலை 10 மணிக்கு யோகாசன சொற்பொழிவுகள் உண்டு.

# ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

Phone: 62899 தாதர் - சென்ட்ரல் ரயில்வே - பம்பாய் -14 Grams: PRANAYAM, Dadar - Bombay

சென்னை டெப்போ: 4/441, தங்கசாலைத் தெரு, சென்னை-3

பாகவதமாகிய

# பக்தி வயல்

பௌராணிகர்

## 18. அஜாமிளன் சரிதம்

சுகர் பரீக்ஷித்துக்கு எழுகடல் சூழ்ந்த பூகோளத்தின் பிரிவுகளை ஒவ்வொன்றாக விரித்துச் சொன்னார். பின்னர் கங்கை பூமியை அடைந்த வரலாறு, சிவன் ஸங்கர்ஷண ரூபமான விஷ்ணுவைத் துதித்தது, பாரத நாட்டின் சிறப்பு, நட்சத்திர மண்டலம், சூரிய மண்டலம், கிரகங்களின் இருப்பும் போக்கும், திமிங்கில ரூபத்தில் (சிம்சுமாரம்) கடவுள் இம் மண்டலங்களைத் தன்னுடலாய்த் தோற்றுவிக்கும் தன்மை, கீழுலகங்கள், மானிடருக்குத் தண்டனை தருவதற்கென்ற நரகம் முதலியவற்றை வர்ணித்தார்.

பரீக்ஷித் சுகரை மறுபடியும் வினவினார்: "முக்தி அடையும் மார்க்கத்தையும், விண்ணுலகம் சென்று களித்திருக்கும் வழியையும், பாபம் செய்து நரகத்தில் விழுந்து வருந்தும் பல விவரங்களையும், பிரியவ்ரதன், உத்தான பாதர் என்ற மனுவின் மைந்தருடைய அரச பரம்பரையையும், மூவுலகின் வெவ்வேறு பிரிவுகளையும் எனக்கு எடுத்துரைத்தீர். துன்பங்கள் நிரம்பிய நரகத்தில் விழாத வண்ணம் வாழ்வை நடத்துவது எவ்விதம்? இதை விளக்க வேண்டும்" என்றார்.

சுகர் பதில் அளித்தார். "வாழ்க்கையில் செய்யும் தவறுக்கு அவ் வாழ்க்கையிலேயே திருத்தமும் செய்ய வேண்டும். இல்லையேல், மனம், மொழி, மெய் இம் மூன்றினால் பயின்ற 'பாவங்கள்' மனிதனை நரகத்தில் தள்ளித் தாளமுடியாத துயரத்தைத் தருகின்றன. ஆகவே, உடல் நோய்க்கு மருந்தளிக்கும் வைத்தியனைப் போல், இறப்பதற்கு முன், புலன்களுடைய திறமை குன்றாமல் இருக்கும்பொழுதே, மனிதன் தான் செய்த தவறுகளுக்குத் திருத்தத்தைத் தேடிக் கொள்வது நலம்."

அரசனுக்கு இச் சொல்லின் கருத்து விளங்கவில்லை. "தவறெனத் தெரிந்து ஒருதரம் திருந்தியும், மறுதரம் தவறையே தழுவி நிற்கும் மாந்தரை விட்டுப் பாபத்தின் பலன் எவ்வாறு விலகும்? இவர் பயிலும் பரிகாரம் குளித்துவிட்டு மண்ணைத் தன்மேல் தூவிக்கொள்ளும் மதயானையின் நீராட்டமாகவன்றோ இருக்கிறது?" என்றான்.

அதற்குச் சுகர் அரசனுக்கு ஒரு கதை சொல்லி நல்வழியைக் காண்பித்தார்:

"அரசே! நீ சொல்வது உண்மை. ஒரு செயலை மறு செயலால் அழிக்க முடியாது. மெய்யறிவு ஒன்றே தவறுக்குத் தளர்ச்சியில்லாத் திருத்தம். நல் உணவை அருந்துவோனை நோய் அணுகாது. பெரியோர்கள் புலன்களை அடக்கி, மனத்தை ஒருமுகப்படுத்தி, உண்மையே பேசி, நன்மையே செய்து, உள்ளும் புறமும் அழுக்கேறாது காத்து, மந்திரங்களை ஓதி, மூங்கிலைச் சாம்பலாக்கும் கானகத்து நெருப்பெனத் தங்கள் பாபங்களைப் போக்குகின்றனர்.*

"ஆயினும், வாசுதேவனைச் சரணடைந்து சிலர் பாபங்களை வேரோடு வெட்டி விடுகின்றனர். கண்ணனுடைய தொண்டரை அண்டி நிற்பது தவத்துக்கும் மேலானது. எப்பொழுதும் அச்சமில்லாப் புகலிடம் இதுவே. பரமனிடம் பக்தியில்லாப் பாவி பரிகாரங்களால் புண்ணியன் ஆக மாட்டான். நீரைக் கலந்து கள்ளைக் களங்கமறச் செய்ய முடியாது. கண்ணனின் தாமரைத் தாளை மனத்திலே வைத்துப் பாபங்களை முற்றிலும் முறித்தவர் கனவிலும் நமனை அஞ்சார்!

"கான்யகுப்ஜம் என்ற நகரத்தில் அஜாமிளன் என்று ஒரு அந்தணன் இருந்தான். நன்னெறி தவறி, ஒரு இழி குலத்துப் பெண்ணுடன் வாழ்ந்து வந்தான். சூதாடி வழிமறித்து அனைவரையும் ஏமாற்றி வாழ்நாளை வீணாக்கினான். பசியைத் தீர்க்கப் பிராணிகளை வதைத்தான். அப் பெண்ணிடம் மோகம் கொண்டு, ஈனத் தொழில் பல செய்து, அவளுக்குப் பிறந்த பிள்ளைகளிடம் குலவி

---

குறிப்பு: *காட்டுத் தீயில் சாம்பலான மூங்கில் புதரின் வேர் அடியோடு அழிவதில்லை; மழை பெய்ததும் மறுபடியும் முளைக்கும். ஒழுக்கத்தால் வரும் நன்மை அப்போதைக்கப்போது போதுமானது. வேரறுக்கும் வல்லமை இல்லாதது.

மகிழ்ந்து காலத்தைக் கழித்தான். அவனுக்குப் பத்துப் பிள்ளைகள் பிறந்தனர். கடைசி மகனுக்கு நாராயணன் என்று பெயர். தாயும் தந்தையும் அவனிடம் அளவிலா அன்பு பாராட்டினார்கள்.

“அஜாமிளனுக்கு வயது முதிர்ந்தது. எண்பத்தி எட்டு ஆண்டுகள் ஓடிப் போயின. தன் மகன் நாராயணனுடைய விளையாட்டைக் கண்டு களிப்புறுவான்; மழலைச் சொல் கேட்டு மகிழ்வான்; தான் உண்ணும்பொழுது மகனுக்கும் உணவளிப்பான்; பருகுங்கால் நீர் கொடுப்பான். இவ்விதம் காலம் கடந்து போய் அந்தணனுக்கு அந்திநாள் அண்டி விட்டது. ஆனால் அவ்வறிவிழந்த அஜாமிளன் அதை உணரவில்லை.

“இறக்கும் தருணம் வந்தது. அப்பொழுதும் அஜாமிளன் தன் கடைசி மகன் நாராயணனையே நினைத்தான். பயத்தைப் பெருக்கும் முகத்துடனும், முள்ளைப் போல் முளைத்திருக்கும் மயிருடனும், கையில் பற்றிய பாசக் கயிறுடனும், தன் முன் தோன்றிய மூன்று யமதூதர்களைப் பார்த்து, மனம் குழம்பி, வெளியில் விளையாடிக்கொண்டிருந்த நாராயணனைப் பெரும் குரலில் ஆவலோடு அழைத்தான். நாராயணனுடைய நாமத்தை யாரோ பேரரவம் செய்வதை ஹரியின் சேவகர்கள் செவியுற்றனர். உடனே அவ்விடத்துக்கு அவர்கள் ஓடோடியும் விரைந்தனர். வந்ததும் பணிப்பெண்ணின் புருஷனை அஜாமிளனுடைய உயிரை நெஞ்சத்தினுள்ளிருந்து கிழித்தெடுக்கச் சித்தமான யமதூதர்களை விஷ்ணுவின் வேலையாட்கள் தடுத்தார்கள். அப்பொழுது யமதூதர்கள் அவரிடம் சில கேள்விகளைக் கேட்டார்கள்.



“தர்மராஜனுடைய ஆணைக்குத் தடை செய்யும் நீங்கள் யார்? யாருடைய ஆட்கள்? எங்கிருந்து வந்தீர்? இவன் உயிரை நாங்கள் பறித்துப் போவதை ஏன் தடுக்கிறீர்கள்? தாமரைக் கண் வாய்ந்து மஞ்சள் பட்டுடுத்து, முடிசூடி, அலர் மாலை அணிந்து, காதில் குண்டலம் துலங்க, இளமை மாறாத உடலோடு, கை நான்கில் ஆயுதங்களும் சங்கும் சக்கரமும் தாமரையும் ஏந்தி, இருளை அகற்றும் காந்தியுடன் எங்கள் முன் வந்து, தர்மத்தைப் பாதுகாக்கும் யமனுடைய வேலையை நிறைவேற்றும் எங்களுக்கு ஏன் இந்தஇடையூறைச் செய்கிறீர்கள்?”

அதற்கு வைகுண்ட வாசிகள் பதில் கூறினார்கள்: “நீங்கள் தர்மராஜனுடைய சேவகரானால், தர்மத்தின் தன்மை என்ன, அதை அறிவது எவ்விதம், தண்டனை அளிப்பது எப்படி, எவரைத் தண்டிக்க வேண்டும், மானிடரில் அனைவருக்கும் தண்டனை அளித்தே ஆக வேண்டுமா? இல்லையேல் சிலருக்கு மட்டுமே தண்டனையா? இவையெல்லாம் எங்களுக்கு எடுத்துரைப்பீர்” என்றனர்.

யமதூதர்கள் தர்மத்தைத் தங்களுக்குத் தெரிந்த அளவு விவரித்தனர்: “மறை மொழிந்ததே அறம். மறையென்பது ஹரியே. உடலை அடைந்தவர் செயல் செய்தே தீருவார். தீமைக்குத் தண்டனை அனைவருக்கும் உண்டு. இவ்வுலகில் செய்த நற்செயலும் தீச்செயலும் அதே அளவில் வேறு உலகில் பயன் தரும். எல்லாம் அறிந்த யமதர்மராஜன் ஜீவர்களுடைய பின் பிறவியையும் முன் பிறவியையும் தம் மனத்தில் காண்கிறார். ஆனால் ஜீவனுக்கு நிகழும் பிறவி ஒன்று தான் தெரிகிறது. பதினாறு உறுப்புக்கள், அமைந்த லிங்க சரீரமானது (இதைப் புரஞ்சனன் கதையில் காண்க) ஜீவனை விடாமல் செயல்களில் ஏவிப் பிறவியைக் கொடுத்துத் துன்பச் சக்கரத்தில் சுற்ற வைக்கிறது. முன் வினையின் பயனாக ஜீவன் வெவ்வேறு உடல்களை அடைகிறான். புருஷனுக்கு இத் தாழ்மை, பிரகிருதியின் உறவால் வருகிறது. கடவுளிடம் வழிபட்டு இம் மாறுபாடு மறைகிறது.

“இந்த அஜாமிளன் மறை ஓதி நல்வழியில் நடந்து வந்தான். பெரியோரை வணங்கி, வந்தவரை உபசரித்து, அனைவருக்கும் அன்பனாய், செருக்கின்றி, ஓமங்களைக் கைவிடாது வாழ்ந்திருந்தான். ஒருநாள் தன் தந்தையிட்ட கட்டளையை மேற்கொண்டு பூவும் கனியும் சமித்தும் தர்ப்பங்களையும் சேமித்து வரக் காட்டுக்குச் சென்றான். அவ்விடத்தில், காம வெறி கொண்டு, கள்ளருந்தி மதி மயங்கி, தன் குலத்து மங்கையுடன் லீலை செய்யும் இழி குலத்து மனிதனைக் கண்டான். பெண்ணும், குடித்துக் கண் சுழல, நழுவிய ஆடையையும் அறியாது, பாடிக் களித்திருந்தாள். தழுவி நிற்கும் இவ்விருவரைக் கண்டதுமே அந்தணன் காமத்துக்காளாயினான். இவன் படித்ததெல்லாம் பறந்தது; சித்தம் கலங்கியது.


மங்கையின் மாயையில் மயங்கி மனத்தை அவளிடமே இழந்தான். தன் கடமையை மறந்தான். தன் தந்தையின் செல்வமெல்லாம் அவளுக்கே அர்ப்பணம் செய்தான். அவள் இன்புற்றுத் தன்னிடம் ஆசை வைத்தருளவே தந்திரங்கள் பல புரிந்தான். அவளுடைய கண் வீச்சில் கட்டுண்டு, குலத்தை நம்பி மணம் செய்து கொண்ட மனையாளைத் தள்ளி விட்டான். அவளிடம் பிள்ளைகளைப் பெற்றான். தந்தையின் செல்வம் சிதறிப் போனதும், கொடுஞ் செயல்கள் பல செய்து பணத்தைச் சம்பாதித்து, இவ் விழிகுலத்து மாதையும் அவளிடம் பிறந்த மைந்தரையும் காப்பாற்றினான். நல்லோர் இகழ நெறி தவறி நடந்த இப் பாவியை யமனிடம் அழைத்துச் சென்று தண்டனையால் பரிசுத்தமாக்குவதே எங்கள் கடமை" என்றனர்.

அதற்கு விஷ்ணுதூதர்கள் பின்வருமாறு பதில் அளித்தார்கள். "அந்தோ! தர்மம் தெரிந்தவரிடம் அதர்மம் தோன்றியிருக்கிறதே! வீணாக நல்லோரன்றோ தண்டிக்கப்படுகின்றனர்! இந்த மனிதன் ஹரியின் மங்களமான நாமத்தைத் தன்னை அறியாமல் உரைத்தான். அது இப் பிறவியில் செய்த பாபங்கள் மட்டுமின்றி எப்பிறவியில் செய்த பாபங்களையும் பஞ்சாய்ப் பறக்கச் செய்துவிடும். நான்கெழுத்துள்ள 'நாராயண' என்று நலம் தரும் சொல்லை நீங்கள் கண்டு கொள்வீர்! திருடினாலும், குடித்தாலும், நண்பரை வஞ்சித்தாலும், அந்தணரைக் கொன்றாலும், ஆசிரியன் மனைவிமீது ஆசையுற்றாலும், பெண்ணையோ, பசுவையோ, பெற்றோரையோ, வேந்தனையோ கொன்றாலும், வேறெந்தத் தீமையைச் செய்தாலும், நாராயணன் நாமத்தை நாவிலே எவன் உரைக்கிறானோ, உடனே அவனிடம் நாராயணனே தன் மனத்தைச் செலுத்துகிறான். அத்தருணம் தொட்டுப் பரமனின் பேரைப் பகர்ந்தவன், அவனுடைய அழியா ஆதரவுக்கு ஆளாகிறான். மறையறிந்தோர் மொழிந்துள்ள பல வழிகள் பாபத்தை ஓரளவே போக்கும்; ஹரியினுடைய நாமமோ செயற்பயனைத் தீர்த்து முக்தியை அளிக்கும்.

"வேறொருவரைக் குறித்தாலும் வேடிக்கையாய்ச் சொன்னாலும், பாட்டினிலோர் பாகமென்று அறியாமல் உரைத்தாலும், அவமானம் செய்திடவே அன்பற்று அலறினாலும், தடுக்கியோ, தடுமாறியோ, நோயால் நொந்தோ, காயத்தாலோ, அங்கம் முறிந்தோ, பாம்பு கடித்தோ, எக்காரணத்தைக் கொண்டும் தன் நினைவும் அற்றவனாய் ஹரியின் எப்பெயரைச் சொன்னாலும் அப்பொழுதே பாபங்கள் மட்டுமின்றி, பாபத்தின் வித்தான முன் தீமையின் பின்நினைவே அழிந்து போகும். தீச் சுடருக்குச் சூடும், மருந்துக்கு நோய் தீர்க்கும் வன்மையும் வாய்ந்திருப்பது போலவே, பரமன் பெயருக்குப் பாபத்தைப் போக்குவது தானாகவே இருக்கும் வல்லமையாம்."

இவ்வாறு பக்தியின் பெருமையை யமதூதர்களுக்குச் சொல்லி விஷ்ணு சேவகர்கள் அந்தணனைச் சாகாது காப்பாற்றினார்கள். பயம் தெளிந்த அஜாமிளன் வைஷ்ணவரை வணங்கினான். அனந்தனிடம் அன்பு மிகுந்து தான் செய்த பாபங்களை எண்ணி எண்ணி வருந்தினான். தான் கண்டது கனவோ, நினைவோ என்று தயங்கினான். தன்னுயிரை வாங்க வந்தவர் எங்கே





திருச்சூர் புஷ்பகிரி அக்ரகாரத்தில் பல ஆண்டுகளாக சர்வேயராகத் திறமையாகப் பணி புரிந்த திரு. டி. சூரியநாராயண அய்யர் அவர்களுக்கும், அவரது துணைவியாருக்கும் சமீபத்தில் பம்பாய் லயானில் சதாபிஷேக விழா இனிது நடைபெற்றது. உறவினர்களும், நண்பர்களும் கலந்து கொண்டு, சதாபிஷேகத் தம்பதிகளின் ஆசியைப் பெற்று மகிழ்ந்தனர்.

என்று திகைத்தான். ஏமாற்றி ஊன் வளர்த்த தான் எங்கே, மங்களத்துக்கெல்லாம் மூலமான ஹரியின் நாமம் எங்கே! இனிமேல் இந்தக் கண் மயக்கும் பிறவியில் விழக்கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டு, உடலுடன் உண்டான தொடர்பைத் தள்ளி விட்டு, ஹரித்வாரம் சென்றான். அங்கே யோகத்தில் அமர்ந்து, கடவுள்மீது மனத்தை வைத்தான். தான் முன் கண்ட விஷ்ணு தூதரை மீண்டும் கண்ணுற்றான். அவர்கள் அஜாமிளனை விமானத்தில் ஏற்றி வைகுண்டத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

நிற்க, யமதூதர்கள் யமனிடம் சென்று நடந்ததை எடுத்துரைத்தார்கள். "இவ்வுலகில் மனிதரின் செயலுக்குத் தகுந்தவாறு பலனைக் கொடுக்கும் அதிகாரிகள் எத்தனை பேர்? பலபேர்கள் இருந்தால் அவர்களுக்குத் தலைவர் யார்?" என்று யமனை வினவினார்கள்.

அதற்குத் தர்மராஜன் பின்வருமாறு பதில் அளித்தான் :

"நிற்பதும் நகருவதுமாய் இருக்கும் அனைத்துக்கும் ஈசன் நான் அல்ல. ஹரியே ஆவார். ஆக்கலும், ஆளுவதும், அழிப்பதும் அவருடைய கட்டளையின்படி வேறு தேவதைகள் செய்துவருகின்றனர். நானும், இந்திரனும், நிர்ருதியும், வருணனும், சந்திரனும், அக்னியும், சிவனும், வாயுவும், கதிரவனும் பன்னிரு ஆதித்யர்களும், சித்தரும், ருத்திரரும், சத்துவத்திலே ஊன்றியிருப்பினும், ஹரியின் உள் நிச்சயத்தை அறியாதவர். அவருடைய மாயையை மீறுதவர். பொருள்களைக் கண்ணுறும் கண்ணை அப்பொருள்கள் காண்பதில்லை. அது போலவே, தன்னுள் இருக்கும் கடவுளை ஜீவன் காண்பதில்லை. விஷ்ணுவின் தூதர்கள் பக்தரை மரணத்திலிருந்து விடுவிப்பதற்கு எங்கும் போவார்கள். ஹரியின் தர்மத்தை அறிந்தவர் பன்னிருவரே. பிரமன், நாரதர், சிவன், ஸனத்குமாரர், கபிலர், மனு, பிரஹ்லாதன், ஜனகர், பீஷ்மர், மகாபலி, சுகர், நான். ஹரியின் நாமத்தைச் சொல்வதால் வளரும் பக்தி யோகம்தான் எல்லாவற்றிலும் மேலான தர்மம். ஹரியினிடம் சரணடைந்த பெரியோரின் சரிதையைத் தேவரும் சித்தரும் பாடுகின்றனர். அவர்களை நாம் அணுக முடியாது. நாவிருந்தும் நாராயணன் நாமத்தைச் சொல்லாது, மனதிருந்தும் அவருடைய தாமரைத் தாள்களை எண்ணாது, தலையிருந்தும் அவரை வணங்காது, உடலிருந்தும் அவருக்கு உழையாது வீணாய்த் திரியும் பாபிகளை என்னிடம் அழைத்து வாருங்கள்."

அஜாமிளன் கதையின் பொருளை அனைவரும் கவனித்து அறிய வேண்டும். நாராயணன் நாமத்தின் பெருமையைப் புகட்டும் கதையென்று நாம் அதைக் கருதவேண்டுமேயன்றி, எந்தத் தவறையும் செய்யலாம், முடிவில் நாராயணன் நாமத்தைச் சொன்னால் போதுமென்று எண்ணக் கூடாது. முன் செய்த நற்செயல்கள் கூடி நின்று தான் தவறாகவாவது இறுதியில் நாராயணாவென்று அழைக்கச் சொல்லும். இல்லையேல் அந்த எண்ணமும் வாராது வருந்த வேண்டும். கடவுளுடைய நாமமானது பக்தியின் ஆரம்பமாகும். அவருடைய அன்புக்கு நாம் பாத்திரமானதும், அவரே அன்றுதொட்டு நமக்கு நல்வழியைக் காட்டுவார். ஆகையால் எப்பொழுதும் அவருடைய நாமத்தைச் சொல்லிக் கொண்டிருந்தால் நன்மையே வரும். இதுதான் அஜாமிளன் கதையின் கருத்து.

"எட்டாத தூரத்தில் நின்று வருந்தும் என்னைக் காத்திடுவாய், கண்ணா!" என்று பாஞ்சாலி அலறியபொழுது, "என்மீது கடன் ஏறியது. அதைத் தீர்ப்பது எனது கடமையாம்" என்று வேறிடத்தில் கண்ணனே கூறியிருக்கிறார். அருளோடு பெருநலமளிக்கும் அன்பனை இடைவிடாது எண்ணினால் எக்காலத்திலும் நன்மையை நல்கியே தீருவான் என்பதுதான் இந்தக் கதையின் கருத்து.

# தாயுமானவர்

க. நா. சுப்ரமண்யம்

நமக்கெல்லாம் வேதாந்தம் நன்றாகவே வரும் என்பது உண்மைதான். ஆனால் வேதாந்தம் என்றால் ஓடி ஒளிந்து கொள்கிறவர்கள் நினைப்பதுபோல் வேதாந்தத்தைத் தவிர வேறு ஒன்றும் வராது என்பதில்லை என்பதும் நாடறிந்த உண்மைதான். வாழ்க்கை வழிகளிலே, தத்துவ மத சமய நெறிகளிலே முன்னேறியது போலவும், தமிழர்கள் பல ஞான, விஞ்ஞானத் துறைகளிலும் முன்னேறினார்கள் என்பதும், அலுவலகங்களில் அடிமைப்பட்டு வேலை பார்ப்பது முதற்கொண்டு சுதந்திரமாக இயங்கிச் செயலாற்றுவது வரையிலும் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டுப் பெயர் பெற்றவர்கள் தான் தமிழர்கள் என்பதும் இந்த இருநூற்றைம்பது வருஷத்திய சமீபகால சரித்திரத்தை நோக்கும்போது நமக்குத் தெரியவரும். வேதாந்தம் செயல்படுவதற்கும் உதவ முடியும் என்பதை வேதாந்தத்தைக் குறை கூறுபவர்கள் கவனிப்பதில்லை.

தாயுமானவர் வேதாந்தி. துறவியும் ஆனவர். ஆனால் தானே ஈடுபட்ட துறையில் வெற்றி கண்டவர் என்று தான் சரித்திரம் சொல்கிறது. மதுரையில் ராணியாக ஆண்ட மீனாக்ஷி தன்னையே அர்ப்பணித்துக் கொள்ள முன் வந்தபோது, தாயுமானவரின் வேதாந்தம் வெற்றி பெற்றது. வேதாந்தியல்லாத வேறு ஒருவனாக இருந்தால் ராணியின் காதலுக்கு வசப்பட்டு, சில மாதங்களோ, சில வருஷங்களோ, அல்லது சில நாட்களோ சுகமாக வாழ்ந்துவிட்டுச் செத்து மடிந்திருப்பான். அழகான ராணி எதிர்ப்பட்டு 'என்னை ஏற்றுக் கொள்' என்று சொல்லும்போது, 'வேண்டாம்' என்று சொல்லி விட்டு, ஊரைவிட்டே ஓடிப் போகத் துணிகிற துணிச்சல் ஒரு வேதாந்திக்குத்தான் வரும். தாயுமானவர் என்கிற வேதாந்திக்கு அது நன்கு கைவந்தது என்றும், அவர் கவியாக உருவாக இச்சம்பவம் உதவியது என்பதும் வெளிப்படை. மீனாக்ஷியின் சரித்திரத்தை அறிந்தவர்களுக்குத் தாயுமானவர் செய்தது தான் சரியான காரியம். இல்லாவிட்டால் தாயுமானவர் என்கிற பெயரே தமிழ் நாட்டில் இருந்திராது என்பதும் நன்றாகவே புரியும்.

இப்படித் துணிந்து செயலாற்ற ஒரு வேதாந்திக்கு உதவிய ஒரு தத்துவத்தை நாம் சற்றேறக்குறைய நூறு வருஷங்களாகவே ஏதோ குறை கூறிக் கொண்டு, சிறுமைப்படுத்தி நம்முடைய விஞ்ஞான லோகாயத வளர்ச்சியைப் பற்றிப் பெருமை பாராட்டிக் கொண்டு வருகிறோம். விஞ்ஞானமும், லோகாயதமும் எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை வேதாந்தமும் என்கிற தத்துவத்தை நாம் உணருவதில்லை. உண்மை வேதாந்தமே அதைத்தான் வற்புறுத்துகிறது. போலி வேதாந்திகளுக்கெல்லாம் பதில் சொல்லுகிறமாதிரித் தான் தாயுமானவரின் கவிதைகள் அமைந்திருக்கின்றன. இந்த இருநூற்றைம்பது வருஷங்களில் பழகு தமிழில் உள்ள எந்தக் கவியையும் விடத் தாயுமானவரின் கவிதைகள் தமிழர்களின் மனத்தை அதிகமாகக் கவர்ந்திருப்பதாக நாம் நினைத்தால் அது தவறாகாது. ஒரு வார்த்தைக்குள்ளும் அகப்படாத ஒரு தத்துவத்தைப் பல வார்த்தைகளில் பிணிக்க முயன்ற தாயுமானவரைப் புதுத் தமிழ் இலக்கியத்துக்கு அடிகோலித் தந்த தமிழ்ப் பெரியார்களில் ஒருவராக நாம் கணித்துப் பார்ப்பதில் தவறில்லை என்றே சொல்ல வேண்டும்.

தாயுமான சுவாமிகளின் வாழ்க்கைக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே வாழ்ந்து தன் ஒரு நாவலால் தமிழுக்கு வளம் தந்த ராஜமையரின் வாழ்க்கைக்கும் பலவிதங்களிலும் ஒற்றுமையுண்டு. தாயுமானவரும் அல்பாயுசில் மாண்டு போனவர்தான். 1706ல் பிறந்தவர். 35 வயதுவரை உயிருடன் இருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஒரு சிலர் அவர் 38வது வயது வரை இருந்ததாகக் கொள்கிறார்கள். அவர் 17ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். 1659ல் இறந்தார் என்றும் ஒரு வரலாறு உண்டு. கல்வி கேள்விகளில் அவரும் ராஜமையரைப் போலவே நவீன வாழ்வுக்கேற்ற வசதிகளெல்லாம் படைத்தவர்தான். விஜயரகுநாத சொக்கலிங்க நாயக்கரின் கணக்குப்பிள்ளையாகத் திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்தவர் அவர் தகப்பனார். ராணி மீனாக்ஷியைப் பற்றிய கதையைச் சாதாரணமாக உண்மையெனத்தான் கொள்வது வழக்கம். மீனாக்ஷியைப் புறக்கணித்துவிட்டு ராமேசுவரம் போன தாயுமானவர் பின்னர் திருமணம் செய்துகொண்டு, சிறிது காலம் இல்லறம் நடத்தி விட்டுப் பிறகு துணிந்து துறவறம் பூண்டதாகத் தெரிகிறது. தமது வேதாந்த முடிவுகளைத் தாயுமானவர் கவிதையாக எழுதினார். ராஜமையர் ஆங்கிலத்தில் வசனமாக எழுதினார். வேதாந்தமாகப் பார்க்காமல் இலக்கியமாகப் பார்க்கும் போது என்னைப் பற்றிய வரையில் தாயுமானவருக்கு ஒரு முக்கியமுண்டு என்பதும், அதேபோல் ராஜமையருக்கும் ஒரு முக்கியமுண்டு என்பதும் தெரிகிறது.

வியாக்கியான கர்த்தாக்களையும் சங்கேதப் பதங்களையும் தகர்த்தெறிந்து கவிதை செய்யத் துணிந்தவர் என்று தாயுமானவரைக் கொள்வதில் தவறில்லை. அவரையும் வியாக்கியானம் செய்து, அவருடைய சாதாரணப் பதங்களையும் சங்கேதப் பதங்களாக மாற்றி விட்டார்கள் என்ப

ஆம தமிழ்ப் பண்டிதர்களின் பெருமை. ஆனால் எந்த விதமான உதவியுமில்லாமல் தாயுமானவர் பாடல்களைப் பாடல்களாகப் படித்து நம்மால் அறிந்து கொள்ள முடிகிறதென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். இப்படிப் புரியும்படியான கவியாக இருந்ததனால், மற்ற எல்லாத் தமிழ்க் கவிகளையும் விடத் தாயுமானவருடைய கவிதை வேகம் தமிழர்களுக்கு இந்த இருநூறு வருஷங்களும் உகந்ததாக இருந்திருக்கிறது என்பது மட்டும் அல்ல: நேரடியாகவும் இலக்கிய ரீதியிலே பிரயோசனப்பட்டிருக்கிறது என்றும் சொல்ல வேண்டும். பதிப்புகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால் தாயுமானவர் பாடல்கள் மட்டும், அச்சுப் புஸ்தகங்கள் தமிழ் நாட்டிலே தோன்றின காலத்திலிருந்து இன்றுவரை அதிகமாக அச்சாகி யிருக்கிறது என்று சொல்லக் கூடிய அளவில் இருக்கும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அவருடைய உவமைகளும், வார்த்தைச் சேர்க்கைகளும் மற்ற எந்தக் கவியினுடையதையும் விட அதிகமாகத் தமிழர்களுடைய பழக்கத்திலிருந்து வந்துள்ளது என்றும் சொல்லலாம்.



சிங்கப்பூர் காகன் நகரில் சமீபத்தில் நடத்தப்பட்ட கலை விழாவின் போது, பைன் ஆர்ட் சொஸைட்டியார் நடத்திய "தேரோட்டி மகன்" என்ற தமிழ் நாடகத்தில் ஒரு காட்சி.

தமிழுக்குக் காம்பீர்யம் அளிப்பதற்காக நிதானித்து ஒரு முன்கூட்டிய திட்டத்துடன் தாயுமானவர் தம் கவிதைகளில் சம்ஸ்கிருத மொழி வார்த்தைகளையும் கலந்து கையாண்டார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்தக் கலவை இவரிடம் அமைந்தமாதிரித் தமிழில் வேறு எந்தக் கவியிடமும் அமைந்ததில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பலருடைய திறத்தால் கேலிக்கும் கிண்டலுக்கும் இலக்கான ஒரு நடை இவருடைய கவிதையிலே திறமையாகத் தாளம் போடுகிறது. அமைதியும் அணியும் அழகும் பொருந்தியிருக்கிறது. தமிழில் பிறமொழிச் சொற்கள் சேர்க்கக் கூடாது என்று இன்று வாதிப்பவர்கள் கூட, தாயுமானவர் மாதிரி சேர்க்க முடியுமானால் சேர்க்கலாம் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் செய்வார்கள்.

வேதாந்தத்தைச் செய்யுளில் வடித்துத் தந்த தாயுமானவரைக் கவியாக, இலக்கிய கர்த்தாவாக மதிப்பிடுவது சரியல்ல என்பதுதான் இத்தனை நாளும் நம்மிடையே வழக்கிலிருந்து வந்து விட்ட மனோபாவம். அது சரியல்ல என்று சொல்லுவதுபோலும் வேதாந்தத்தை உட்பொருளாக வைத்துக் கவிதை செய்வது சிரமமான காரியம் என்று ஒப்புக் கொள்ளும்போது கூட, அந்தச் சிரமமான காரியத்தைத் தாயுமானவர் பிரமாதமாகவே செய்திருக்கிறார் என்று ஒப்புக் கொள்ளத்தான் தோன்றுகிறது. டாண்டே என்கிற இத்தாலிய கவி தன் காலத்திய விஞ்ஞான அறிவையும், கிறிஸ்துவ வேத ஆகமங்களையும் அடிப்படையாக வைத்துத்தான் தமது மகா காவியமான "தேவ நாடக"த்தை எழுதினார். அதற்காக, இது கிறிஸ்தவ வேத ஆகமத்தைப் பின்பற்றியது, ஆகவே இது கவிதையாகாது என்று ஒதுக்கிவிட முடியுமா? அப்படி ஒதுக்கி விடுபவர்கள் இலக்கியத்தின் ஒரு அற்புதமான இலக்கிய அனுபவத்தை இழந்து விடுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். வேதங்களில் உபநிஷத்துக்களும் இந்த மாதிரிக் கவிதையாகவே போற்றப்படுகிற பகுதிகள்தான். விவிலிய நூல் மதநூல்தான் என்றாலும் கூடப் பல மொழிகளிலும், முக்கியமாக ஆங்கில மொழியில், இலக்கியமாகவே பயன் தந்து வந்திருக்கிறது.

"சும்மா இருப்பதே சுகம்" என்று வேதாந்தபரமாக நம்பாதவர்களும்கூட, தாயுமானவரை இலக்கியமாக அறிந்து அனுபவிக்கத் தவறிவிடக் கூடாது: அப்படி அனுபவிக்கத் தவறி விடுபவர்கள் முக்கியமானதொரு ரஸ அனுபவத்தை இழந்து விடுகிறார்கள். வேதாந்தத்தைக் கவிதையாக ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் பக்தியே கவிதையாகிய திருவாசகத்தைக் கவிதையாக ஏற்றுக் கொள்ள



'காமகோடி' பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ எ. கோபாலய்யரின் அறுபதாண்டு நிறைவு விழா சமீபத்தில் வெகு விமரிசையாகக் கும்பகோணத்தில் நடைபெற்றது. காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் போனிலுடை அனுப்பிக் கௌரவித்தார்.

முடியுமோ? நல்லது, தீயது என்று உலக வாழ்வை வரையறுத்துச் சொல்லும் திருக்குறளை ஏற்றுக் கொள்ள முடியுமோ? வேதாந்தத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களும் கூடத் தாயுமானவரைக் கவியாக ஏற்றுக் கொள்ள முடியும்.

தாயுமானவர் வேதாந்தக் கவி. அவருக்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின் வாழ்ந்த ஜோதிராமலிங்கம் பக்திக் கவி. இந்தக் காலத்தில் வாழ்ந்த மற்ற எந்தக் கவியையும் விட இவர்கள் இருவரும் இன்றையப் புதுத் தமிழ் இலக்கியத்தைச் சமைத்துத் தர நமக்கு உதவியிருக்கிறார்கள் என்று சொல்லலாம். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பாரதியாரால் இவ்வளவு கவிதை எப்படிச் செய்ய முடிந்தது என்றால் அதற்கு முன்னோடிகளாக இவர்கள் இருவரையும் சொல்ல வேண்டும். பண்டிதர்களையும் அரும்பத அகராதிகளையும் தாண்டிக் கவிதை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் தாயுமானவருக்கே உண்டாகி விட்டது என்பது அவருடைய கவிதையைப் படிக்கும்போது நமக்கே தெரிகிறது. கண்ணெதிரில் விந்தை செய்யும் சூரியாஸ்தமனக் காட்சியைக் காணக் கண்ணாடி தேவையா என்ன?

இந்த மாதிரியான ஒரு இலக்கியக் கண்ணோட்டத்துடன் யாரும் தாயுமானவரையும் அவர் கவிதையையும் இதுவரை பார்க்க முயன்றதில்லை என்பது உண்மைதான். ஆனால் அதற்காக இனியும் அப்படிப் பார்க்காமலிருக்க வேண்டிய அவசியமில்லையே. ஒரு இருநூறு வருஷங்களாகப் பழகு தமிழ்க் கவிதையாகத் தாயுமானவரின் பாடல்கள் தமிழர்களிடையே வழக்கில் இருந்து வந்திருக்கின்றன. இந்த வழக்கு நமக்கு ஒரு மனோபாவத்தையும் ஒரு மரபையும் சிருஷ்டித்துத் தந்திருக்கிறது. புதுத் தமிழ் மரபிலே தாயுமானவர் கவிதைக்கு மிகவும் முக்கியமான இடமுண்டு. வேதாந்தமாக மட்டும் இதுவரை அதை யெல்லாம் மதித்துவர அறிந்துகொண்டிருந்த நாம் இவரை இலக்கியமாகவும், கவியாகவும் மதிக்கத் தெரிந்து கொள்ள வேண்டியது மிகமிக அவசியம். வேதாந்தமாக மட்டும்தான் தாயுமானவர் கவிதைகள் நம்மைக் கவர்ந்து வந்திருக்கின்றன என்று சொல்ல முடியாது. கவிதையாகவும், உவமைகளாகவும் உருவகங்களாகவும் நம்முடைய வாழ்வோடு ஒட்டி வந்துவிட்டவர் தாயுமானவர். வேதாந்தத்தில் நம்பிக்கையற்றவர்களும் தாயுமானவரைக் கவியாக அறிந்து கொள்ளலாம் என்பதுதான் விஷயம். ஷேக்ஸ்பியருடைய நாடக உலகம் செயற்கையானதுதான்; ஒரு கோணத்திலிருந்து பார்க்கும்போது அது உண்மையானதே யல்லதான்; ஆனால் அதனால் அவருடைய நாடகங்களுடைய இலக்கிய மதிப்பு பாதிக்கப்படுவதில்லையே. அதே போலத் தாயுமானவருடைய கவிதை மதிப்பையும், கவி இதயத்தையும் நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். புதுத் தமிழ் இலக்கியவளத்தைச் சாத்தியமாக்கிய அம்சங்களில் அதுவும் ஒன்று.




# லிப்கோ

## குறைந்த விலைச் சிறு பதிப்புகள்

கலை மிக்க தமிழ்ப் பெரு நூல்களின்
சுருக்கங்கள் (கையடக்க அளவில்)




1 வள்ளுவர் வாய்மொழி (குறள் மூலம்)
2 பொய்யாமொழிக்குப் பொழிப்புரை
3 வள்ளுவர் வகுத்த வழி (குறள் விளக்கம்)
4 வள்ளுவர் காட்டிய ஏர்
5 வள்ளுவர் கண்ட காதலர்
6 வள்ளுவர் காட்டிய இல்லறம்
7 நாலடியார் (மூலம்)
8 நாலடியார் (தெளிவுரை)
9 பிற்கால நீதி நூல்கள் (மூலம்)
10 கடையெழு வள்ளல்கள்
11 இலக்கியச் சோலையிலே
12 பாரதியும் பைந்தமிழும்
13 வருக! வாழ்க! (அழைப்பும் வாழ்த்தும்)
14 சிலப்பதிகாரம்
15 சிலப்பதிகாரப் பெண்டிர்
16 மணிமேகலை
17 சீவக சிந்தாமணி
18 நள வெண்பா (மூலம்)
19 நள வெண்பா (சுருக்கம்)
20 அரிச்சந்திர புராணம்
21 குசேலோபாக்கியானம்
22 பன்னிரு ஆழ்வார்கள்
23 சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
24 திருவிளையாடற் புராணம்
25 பெரிய புராணம்
26 திருஞானசம்பந்தர்
27 திருநாவுக்கரசர்
28 சுந்தரர்
29 மாணிக்கவாசகர்
30-36 கம்பரது இராமாயணம் (7 நூல்கள்)
37-41 வில்லிபுத்தூராரின் மகா பாரதம் (5 நூல்கள்)
42 சில தனிப்பாடற் காட்சிகள்
43-44 கந்த புராணம் (2 நூல்கள்)
45 குமரேச சதகம் (மூலம்)
46 வளையாபதி
47 குண்டலகேசி
48 நந்தனார்
49 பட்டினத்து அடிகள்
50 தாயுமான அடிகள்
51 இராமலிங்க அடிகள்
52 தசாவதாரம்
53 கம்பன் கண்ட பிரகலாதன்
54 தெய்வத் திருமணங்கள்
55 பழந்தமிழ்க் காதல் காட்சிகள்
56 தோத்திரத் திருப்புகழ்
57-59 சுகர் சொன்ன கதை - பாகவதம் (3 நூல்கள்)
60 பாரதியார் பாடல்கள் – சில பொறுக்கு மணிகள்
61 அறப்பளீசுர சதகம் (மூலம்)
62 ஈசன் அருள் பெற்ற இளங்கன்றுகள்
63 புத்தி தரும் பக்தி தரும் சக்தி தரும் முக்தி தரும் புராணக் கதைகள்
64 மணிவாசகரும் மணிவாசகமும்

நூல் நிலையங்களுக்கேற்ற 'லிப்கோ'வின் பிற புத்தக விவரங்களுக்கு எழுதுக.

*தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை-17; எம். தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ், சென்னை-1; எஸ். கிருஷ்ணஸ்வாமி & கம்பெனி, தெப்பக்குளம், திருச்சி-2; எம். நடனசுந்தரம் பிரதர்ஸ், புதுமண்டபம், மதுரை; ஏ. கே. சந்திரய்ய செட்டியார், கோட்டை, சேலம்-1; வி. ஆர். நடராஜன் & ஸன், கோயமுத்தூர்; கவிஞர் பதிப்பகம், 241, ராஜ வீதி, கோயமுத்தூர்; எஸ். எம். ஜெகநாதம், நாகர்கோயில்; ஹிக்கின் பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், மௌண்ட் ரோடு, சென்னை-2; ரெயில்வே ஸ்டால்கள்; மற்றும் அநேக புத்தகக் கடைகள்.*


★ காங்கிரஸ் பொருட்காட்சி, தேனாம்பேட்டை : லிப்கோ ஸ்டால் நெ. 208




## ஒவ்வொன்றின் விலை அணா 4 தான்!



# இருட்டில் உங்களது துணைவன்



எஸ்ட்ரேலா

பாட்டரீஸ்




அணையாத வெளிச்சத்திற்கு எப்பொழுதும் எஸ்ட்ரேலாவை உங்கள் டார்ச்சில் உபயோகிக்கவும் நீடித்த உழைப்பு பிரகாசமான வெளிச்சம்

**எஸ்ட்ரேலா பாட்டரீஸ் லிட்.,**

பம்பாய் - மதராஸ் - டில்லி - கல்கத்தா - கான்பூர்

---



# பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

## (பிரைவேட்) லிமிடெட்

3. சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414 ... ம த ர ஸ் - 5
தந்தி: 'EVERMANS'... போன்: 85834

சேரக் கடைசி தேதி 8-1-1959 ... முதல் ஏலத் தேதி 10-1-1959

| 25 மாதங்கள் | மாதாந்திர சீட்டுகள் (2-வது சனிக்கிழமை ஏலங்கள்) | 25 அங்கத்தினர்கள் |
|---|---|---|

| வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை | வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை |
|---|---|---|---|---|---|
| B | ரூ. 100/- | ரூ. 2,500/- | E | ரூ. 20/- | ரூ. 500/- |
| C | ரூ. 50/- | ரூ. 1,250/- | F | ரூ. 15/- | ரூ. 375/- |
| D | ரூ. 25/- | ரூ. 625/- | G | ரூ. 10/- | ரூ. 250/- |

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப் படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம். மானேஜிங் டைரக்டர்

டெல்லி கிளை ஆபீஸ்கள்: B-5, பிளாக் III, ஆஸப் அலி ரோடு, புது டெல்லி-1. 10197, அஜ்மல்கான் ரோடு கரோல்பாக், புது டெல்லி-5 ● பெங்களூர் கிளை ஆபீஸ்: "ஜெயகத் பில்டிங்ஸ்", கிம்லர் ஜுபிலி பார்க் ரோடு, பெங்களூர்-2 ● பம்பாய் கிளை ஆபீஸ்: "விஜய விஹார்" 17-A, கைலாஷ்-மாதுங்கா எஸ்டேட் (கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்) பம்பாய்-22

**எங்கள் சேவை உங்களுக்குத் தேவை**

# கனா பிரதமர் என்குருமா

“மகாத்மா காந்தி அடிகளை நாங்களும் எங்களைப் போன்ற ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்க மக்களும் எங்களுக்காகவே அவதரித்த புண்ணிய புருஷர் என்று கருதுகிறோம். அவர் காட்டிய சுதந்திரப் பாதையில் சென்று, அவர் அனுஷ்டித்த ஒத்துழையாமை முறையைப் பின்பற்றி, ரத்தமின்றி, கத்தியின்றி மனக்கசப்புமின்றி, அன்னிய ஆட்சியிலிருந்து எங்கள் நாடு விடுதலை யடைந்திருக்கிறது. அவருடைய பிறந்த நாளை நாங்கள் கொண்டாடுவதில் வியப்பில்லை யல்லவா?”

இப்படிச் சொன்னவர் யார் என்று நினைக்கிறீர்கள்? இந்தியரல்ல, ஆங்கிலேயருமல்ல. அமெரிக்கருமல்ல; ஆசியாக்காரரும் அல்ல. வடஆப்பிரிக்காவின் தென் பகுதியில் அட்லாண்டிக் சமுத்திரக் கரையோரத்திலிருக்கும் கனா என்னும் ஒரு சிறிய ராஜ்யத்தின் பிரதம மந்திரி. அந்த நாட்டின் விடுதலைக்கும் அரசியல் முன்னேற்றத்துக்கும் அரும் பாடுபட்ட தலைவர் டாக்டர் க்வாமே என்குருமா இப்போது இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்.

இந்தியாவின் நட்பைக் கவர்ந்த நாடு கனா. 1956-ஆம் ஆண்டு செப்டம்பர் 18-ல் இது சுதந்திரமடைந்தது; ஐரோப்பிய ஆட்சியாளர்கள் கையிலிருந்து தான். அதாவது ஆங்கிலேயரிட மிருந்துதான். நீக்ரோக்கள், ஸஹாரா பாலைவனம், புலி, சிங்கம் வாழும் அடர்ந்த காடுகள் இம்மூன்றுமேதான் ஆப்பிரிக்காவிலிருக்கும் பொருள்கள் என சாதாரணமாக எண்ணி வரும் அந்த நாட்டிலும் மக்களிடையே சுதந்திர உணர்ச்சியை யூட்டி, அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டே தீருவோம் என்ற தீவிர இயக்கத்தைப் பரப்பிய பெருமை கனாவைச் சாரும். 1939-ம் ஆண்டில், தென்பகுதியிலுள்ள தென் ஆப்பிரிக்க யூனியன் தவிர, லைபீரியா என்ற ஒரே ராஜ்யம்தான் சுதந்திர மடைந்திருந்தது. இன்று, பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின் எட்டு நாடுகள் சுதந்திர மடைந்துவிட்டன. இன்னம் பல நாடுகள் சுதந்திர வாயிலில் நிற்கின்றன. இந்நாடுகளின் முன்னணியில் நிற்கிறது கனா. கனாவின் முன்னணியில் நிற்கிறார் டாக்டர் என்குருமா.




டாக்டர் க்வாமே என்குருமா

கனா என்பது வட ஆப்பிரிக்காவில் 92,000 சதுர மைலுள்ள ஒரு சமவெளிப் பிரதேசம். ஜனத்தொகை 50 லட்சம் தான். இவர்கள் எல்லோரும், சுமார் 16,000 பேர்களைத் தவிர, ஆப்பிரிக்கர்களே. நிர்வாகத்துக்காக ஐந்து பெரும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது இந்நாடு. கிழக்குப் பிராந்தியமும் மேற்குப் பிராந்தியமும் முற்காலத்தில் ஆங்கிலேயர்களின் கோல்ட்-கோஸ்ட் காலனியாக இருந்தவை. **ஆஷண்டி**; வடபிராந்தியம்; ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்த டோகோலாந்து பிரதேசம் - இவ்வைந்தும் சேர்ந்தது கனா.

இதன் உண்மை சரித்திரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் செல்லுகிறது. ஆனால் இதன் நவீன காலசரித்திரம் 700 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே ஆரம்பிக்கிறதென்று சொல்லலாம். மேற்கு சூடான் பகுதியிலிருந்து, அந்த ராஜ்யம் சிதைவுண்ட காலத்தில், பல பகுதியினர் தெற்கு நோக்கி வந்தனர். இப்படி வந்த கோஷ்டியில் **ஆடான்ஸி, அக்வாமு, அக்ரர்** என்ற மூன்று குடியினர் முக்கியமானவர்கள். பதினைந்தாம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர் தங்கவயல்களைத் தேடி இந்த இடத்தை அடைந்து ஒரு நிரந்தரமான வியாபார ஸ்தலத்தையும் ஏற்படுத்திக் கொண்டனர். ஒருவரைப் பார்த்து மற்றவர்கள் வந்தார்கள். 1553 ல் ஆங்கிலேயர்கள் வந்தனர். பிறகு பிரெஞ்சுக்காரர்கள் வந்தனர். ஸ்பெயின் தேசத்தவர் வந்தனர். கடற்கரை முழுதும் சின்னஞ்சிறு கோட்டைகள் சிதறிக் கிடந்தன.

தங்கத்தை நாடி வந்ததால் “**கோல்ட் கோஸ்ட்**” என்றே இந்தப் பிரதேசத்துக்குப் பெயர் வைத்தனர். ஐரோப்பியர்கள் வைத்த பெயர். தங்கம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், தங்கத்தை விடச் சிறந்த வியாபாரம் சீக்கிரத்தில் ஐரோப்பியர்களுக்குக் கிடைத்தது. அதுதான் அடிமை வியாபாரம். நீக்ரோக்களை இங்கிருந்து வெளிநாடுகளுக்குக் கப்பலேற்றிச் சென்று அடிமைகளாக விற்றுப் பணம் சம்பாதிக்கும் இழிவான தொழில். ஐரோப்பிய நாடுகள் ஒன்றோடொன்று போட்டியிட்டு இவ்வியாபாரத்தை மும்முரமாக நடத்தின. இப்படி நடந்த வியாபாரத்தின் சின்னங்களாகச்




சிதைந்து போன பல கோட்டைகள், இன்றும் 500 மைல் நீளமுள்ள தென் கடற்கரையில் காட்சி அளிக்கின்றன.

அடிமை வியாபாரத்துக்கும் ஒரு விடிவு காலம் ஏற்பட்டது. ஆனால் 200 ஆண்டுகளுக்குப்பின் 1821-ம் ஆண்டில் ஆங்கிலேய கம்பெனிகளை ஆங்கிலேய சர்க்கார் தன் ஆதிக்கத்தில் எடுத்துக்கொண்டது. விக்டோரியா ராணி இந்தியாவுக்கு ஒரு சாசனம் வழங்கியதுபோல் அவர்களுக்கும் வழங்கினார். விளைவு: அரசியல் ஆதிக்கம் ஆங்கிலேயர் கையில்; சுதந்திரமாக வாழ்ந்து வந்த மக்களுக்கு அடிமை வாழ்க்கை.

இரண்டாவது யுத்தகாலம் வரை இந்த நிலை நீடித்தது. அதன் பிறகுதான் சுதந்திர இயக்கம் நாட்டில் வலுப்பெற்றது. இயக்கத்தை முன் நின்று நடத்தியவர் டாக்டர் என்குருமா. உடனே ஸர் ஹென்லி கௌஸியின் தலைமையில் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. இதுதானே ஆங்கிலேயர் கையாளும், ராஜதந்திரம். 'கோல்ட் கோஸ்டு'க்கு ஒரு புது அரசியல் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் டாக்டர் என்குருமாவுக்கு இது திருப்தியளிக்கவில்லை.

கனாவின் தலைநகரான அக்ராவில் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு அமெரிக்கா சென்று பட்டம் பெற்றவர். பென்ஸில்வேனியாவிலுள்ள லிங்கன் சர்வகலாசாலையில் நீக்ரோ சரித்திரப் போதகாசிரியராகக்கூடச் சிலகாலம் பணியாற்றியிருக்கிறார். தனது செலவுக்கான பணத்தைத் தாமே சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆவலில் என்குருமா பல சில்லறை வேலைகள் செய்திருக்கிறார். அந்த நாட்களில்தான் அவருடைய தேசிய உணர்ச்சி உருப் பெற்று வளர ஆரம்பித்தது.

அமெரிக்காவில் ஆரம்பித்தது இங்கிலாந்தில் முதிர்ச்சியடைந்தது. ஆமாம்! இந்திய சுதந்திர இயக்கம் லண்டனிலும் உருப்பெற்றதுபோல், மேல் படிப்புக்காக லண்டன் சென்ற டாக்டர் என்குருமா ஐக்கிய ஆப்பிரிக்கா இயக்கத்துக்குக் காரியதரிசியாக ஆனார். தேசியம் கொழுந்துவிடத் தொடங்கியது.

1947-ல் தம் சொந்த நாடு திரும்பிய டாக்டர் என்குருமா கோல்ட்கோஸ்டு கன்வென்ஷன் கட்சிக்கு எதிராக ஜனநாயகக் கட்சியை ஆரம்பித்தார். பிரசார வேகத்தால் 1950-ல் சிறைவாசம் கிடைத்தது. ஆனால் புகழ் ஓங்கியது. ஜெயிலில் இருந்த போதே, 1951-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேர்தல் வெற்றிக்குப்பின் சிறையிலிருந்து விடுதலை கிடைத்தது. அந்தத் தேர்தலுக்குப் பிறகுதான் சட்டசபை முழுதும் ஆப்பிரிக்கர்களே இருக்க வேண்டுமென்ற முறை ஏற்பட்டது.

இவ்வாறு ஒற்றுமை நிறுவியபிறகே தான் நாட்டின் சுதந்திரம் கைமேல் கிட்டியது. தனித்தனியாக இருந்த பிராந்தியங்கள் ஒன்றாக இணைந்தன. பழைய கோல்ட் கோஸ்டு தற்போதைய கனாவாகக் காட்சி யளிக்கிறது.

கனாவில் சுரங்கச் செல்வம் மிகுதியாக உள்ளது. காடுகள் அடர்ந்த பிராந்தியங்களில் தேக்குமரச் செல்வமும் உண்டு. கோகோவும் ரப்பரும் மிகுதியாக உற்பத்தி செய்ய வகை இருக்கின்றன. இவை யனைத்தையும் அபிவிருத்தி செய்ய ஐந்தாண்டு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வைக்க அன்னிய உதவியும், ஆள்பலமும், இதர அரசாங்கங்களின் நல்லுறவும் அவசியமல்லவா? இதைச்சம்பாதித்திருக்கிறார் டாக்டர் என்குருமா மிக நல்ல முறையில். 1958 மார்ச்சு மாதத்தில் பதினொரு ஆப்பிரிக்க நாடுகள் அக்ரா நகரில் மகாநாடு கூடி டாக்டர் என்குருமாவைத் தலைவராக ஏற்படுத்திக் கொண்டன. இம்மகாநாட்டின் மூலம் மத்திய ஆப்பிரிக்க நாடுகளுக்குள் முன்பின் சரித்திரத்திலேயே கேட்டிராத ஒற்றுமையை ஏற்படுத்தி விட்டார். பல நாடுகளுக்குத் தாமே சென்று நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டார். ஸ்தானிகராலயங்கள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்ற ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் விஜயம் செய்தார். இப்போது இந்தியாவுக்கு வந்திருக்கிறார்.

இவ்வரலாற்றிலிருந்து நமது சரித்திரப் போக்குக்கும் கனாவின் சமீபகாலத்திய சரித்திரப் போக்குக்கும் எவ்வளவு நெருங்கிய ஒற்றுமை இருக்கிறதென்பது தெளிவாக விளங்கும். —எம். எஸ். சிவசாமி


வசீகர வதனத்திற்கு
ரெமி அழகு சாதனங்கள்
AVRA-589
இலங்கையில் கிடைக்குமிடம்: AVRA Ltd., Colombo
ரேடியோ ஸிலோன் :—41.72 மீட்டரில் "ரெமி நகைச்சுவை நாடகம்"
வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6-30 லிருந்து 6-45 வரை

## அத்தியாயம் 14

# கொடும்பாளூர் உடன்படிக்கை

கோநாட்டின் பெருநகரமாகிய கொடும்பாளூர் அன்று வைகறையிலிருந்தே புதுமணப் பெண்போல் அழகு பொலிந்து விளங்கியது. அரண்மனைச் சுற்றுப்புறங்களும், வீதிகளும் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கோட்டைக்கு வரும் அகன்ற வீதியில் அங்கங்கே மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடிநின்றார்கள். உயர்ந் தோங்கி நின்ற பெரிய மலையைப் போன்ற கோட்டையின் பிரதான வாசலில் பூரண கும்பங்களோடும், பொற்பாலிகைகளுடனும், அரண்மனையைச் சேர்ந்த உடன் கூட்டத்துப் பெருமக்கள் சூழக் கொடும்பாளூர் மன்னன் நின்று கொண்டிருந்தான். யாரோ மதிப்புக்குரிய பெரியவர்களை மரியாதையாக வரவேற்பதற்காக எதிர்பார்த்துக் காத்திருப்பது போல் தென்பட்டது. கோட்டைச் சுவரின் மேலே பக்கத்துக்கு ஐந்து பேராக நுழைவாயிலின் இருபுறமும் நின்றுகொண்டு திருச்சின்னம் எனப்படும் நீண்டு வளைந்த இசைக் கருவியையும், முரசங்களையும் முழக்கிக் கொண்டிருந்தனர்.

இந்த மகத்தான வரவேற்பு ஏற்பாடுகள் எல்லாம் யாருக்காக, எதன் பொருட்டு,– என்று நேயர்களுக்குச் சந்தேகமாக இருக்கிறதல்லவா? இதுவரை கதையுடனும், கதாபாத்திரங்களுடனும் தென்பாண்டி நாட்டுப் பகுதிகளிலும், கடற் பிரதேசத்திலுமே சுற்றிக் கொண்டிருந்து விட்டோம். கதையின் தொடக்கத்தில் ஒரே ஒரு முறை உறையூரில் நடந்த வடதிசையரசர் சதிக் கூட்டத்தையும், அதன் விளைவாக நாகைப்பட்டினத்திலிருந்து மகாராணியையும், குமார பாண்டியனையும் கொலை செய்யவும் தென்பாண்டி நாட்டு நிலையை அறியவும், ஒற்றர்கள் அனுப்பப்பட்டதையும் காண்பதற்காகப் பாண்டி நாட்டு எல்லையைக் கடந்து செல்ல நேரிட்டது. இதுவரை இந்த வரலாற்றுப் பெரும் கதையில் நமக்கும், கதைக்கும் வேண்டிய தன்மையான மனிதர்களை மட்டுமே அதிகமாகச் சந்தித்துக் கொண்டு வந்தோம்: எதிரிகளையும் சந்திக்க வேண்டாமா? உறையூரில் முன்பு சந்தித்தபின் இப்போது இரண்டாவது முறையாகக் கொடும்பாளூரில் சந்திக்கப் போகிறோம்.

ஆம்! சோழ கோப்பரகேசரி மகா மன்னர் பராந்தகரும், பாம்புணிக் கூற்றத்து அரசூருடையானும் இன்னும் இதுவரையில் நமக்கு அறிமுகமாகாத பரதூருடையான் கீழைப் பழுவூர்க்கண்டன் அமுதன் என்னும் இருவரும், அன்று காலை கொடும்பாளூருக்கு வருகிறார்கள். அதற்காகத்தான் அத்தனை வரவேற்பு ஏற்பாடுகள். அன்று உறையூரில் நடந்த கூட்டத்துக்குப் பிறகு தென்திசைப் படையெடுப்பைப் பற்றிய மேல் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வதற்காக இந்த இரண்டாம் கூட்டத்தைக் கொடும்பாளூரில் கூட்டியிருந்தான் அதன் சிற்றரசன். சோழ நாடும், பாண்டி நாடும் சந்திக்குமிடத்தில் இரண்டையும் இணைக்கும் நிலப்பகுதி போல் விளங்கிய கோனாடும் அதன் ஆட்சிப் பொறுப்பும் கொடும்பாளூரானிடம் இருந்தன.

தங்கள் நகரத்துக்கு வரும் சோழனையும், மற்றவர்களையும் ஆசை தீரக் கண்டு களிப்பதற்குத்தான் கோநாட்டு மக்கள் கொடும்பாளூர் அரண்மனைக்கும், கோட்டைக்கும்,





போகும் சாலையில் அவ்வாறு திரண்டு கூடியிருந்தார்கள். சாலையின் கிழக்குக் கோடியில் நான்கு குதிரைகள் புழுதியைக் கிளப்பிக்கொண்டு பாய்ந்தோடி வந்தன. எல்லோருடைய கண்களிலும் ஆவல் நிறைந்திருந்தது. திருச்சின்னங்களும், முரசங்களும் திசைகள் அதிர ஒலித்தன. கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த சிலர் வருகிற மன்னர்களுக்குத் தங்கள் மனக் களிப்பையும், ஆர்வத்தையும் தெரிவித்துக்கொள்ள எண்ணி முன்னேற்பாடாக வாங்கிக் கொண்டு வந்திருந்த மலர்களை வாரித் தூவினர். சிலர் பெரிய பெரிய வெண்தாமரைப் பூக்களையும், செந்தாமரைப் பூக்களையும் தூக்கி எறிந்தபோது அவை வெண்ணிறமும், செந்நிறமும் பொருந்திய புறாக்கள் பறந்துபோகிற மாதிரிப் போய்க் குதிரை மேல் செல்லும் அரசர்கள் மேல் விழுந்தன. சோழனையும், ஏனையோரையும் வரவேற்று வாழ்த்தும் குரல்கள் கடலொலிபோல் அதிர்ந்தன.

உடலை ஒட்டினாற் போன்று இறுக உடையணிந்திருந்த நான்கு ஆடல் மகளிரிடம் பூரண கும்பங்களைக் கொடுத்து முன்னிறுத்தினான் கொடும்பாளூர் மன்னன். இன்னும் சில கன்னிகைகள் பொற்பாலிகைகளை ஏந்தி அழகு படையெடுக்க நிற்பது போல் அணிவகுத்து நின்றனர். மங்கல விளக்குகளை உயர்த்திப் பிடித்தனர். பனைமரக் கொடிகள் எங்கும் பட்டொளி வீசிப் பறந்தன. குதிரைகள் கோட்டை வாசலில் வந்து நின்றதும், அவற்றின் மேலிருந்தவர்கள் சிரித்த முகத்தோடு கீழே இறங்கி எல்லோருக்கும் வணக்கம் செலுத்தினர். கொடும்பாளூரான் ஆசையோடு ஓடி வந்து சோழனை மார்புறத் தழுவிக் கொண்டான். பின்பு மற்ற மூவரையும் அதேபோல் மார்புறத் தழுவி வரவேற்றான்.

"புலியின் பாதுகாப்பில் இந்தப் பனைமரம் வளர்ந்து வருகிறது. சோழ மண்டலப் பேரரசின் அன்பும், ஆதரவும் இந்தப் பனைமரத்துக்குக் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும்" – மலர்ச்சியும், சிரிப்பும் கொஞ்சிக் குழையும் முகத்துடனே இப்படிக் கூறிக்கொண்டே கொடும்பாளூரான் சோழனுக்கு மாலை சூட்டினான். மற்றவர்களுக்கு உடன் கூட்டத்துப் பெரு

மக்களும், அமைச்சர்களும் மாலையிட்டனர்.

எல்லோரையும் உள்ளே அழைத்துக் கொண்டு சென்றான் கொடும்பாளூரான். சோழனுக்குப் பக்கத்தில் நடந்து சென்ற அவன், "அரசே! நாம் நாகைப்பட்டினத்திலிருந்து கடல் மார்க்கமாக அனுப்பிய ஆட்கள் தெற்கேயிருந்து ஏதேனும் இரகசியச் செய்திகள் அனுப்பினார்களா? அவர்கள் போன காரியம் என்ன ஆயிற்று?" — என்று காதருகில் மெல்லக் கேட்டான்.

"அதைப் பற்றி நம்முடைய தனிக் கூட்டத்தில் விரிவாகப் பேசிக் கொள்ளலாம்" என்று சுருக்கமாக மறுமொழி கிடைத்தது, சோழனிடமிருந்து. உரிமை கொண்டாடி ஆர்வத்தோடு கேட்ட தன் கேள்விக்கு அங்கேயே, அப்போதே சோழன் விடை சொல்லாதது கொடும்பாளூர் மன்னனுக்குக் கொஞ்சம் வருத்தத்தை யளித்தது.

கொடும்பாளூர் அரண்மனையில் மிக ரகசியமானதொரு பகுதியில் ஐந்து அரசர்கள் சந்தித்தார்கள். முன்னையக் கூட்டத்தைக் காட்டிலும் இது முக்கியமான கூட்டமாகையினால் அமைச்சர்கள், பிரதானிகளைக் கூட இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு விடவில்லை.

சோழன் கூட்டத்தைத் தொடங்கி வைத்தான். உறையூரில் சந்திக்கும்போது நாம் மூவரா யிருந்தோம். இப்பொழுது



கொடும்பாளூரில் ஐந்து பேராக வளர்த்திருக்கிறோம். இது நம்முடைய எண்ணத்தின் வெற்றிக்கு ஒரு சிறிய அறிகுறிதான். காவிரிக் கரையிலிருந்து காந்தளூர்ச் சாலை வரை அவ்வளவு பிரதேசமும் சோழப் பேராட்சி ஒன்றுக்கே உட்பட்டிருக்க வேண்டும் என்பதில் நம்மையெல்லாம் காட்டிலும் கொடும்பாளூர் அரசருக்கு அவா அதிகம். மூன்று பேராக இருந்த நாம் ஐந்து பேராக வளர்ந்திருப்பது கூட அவருடைய முயற்சியின் விளைவேயாகும். கிழைப்பழுவூர்க் கண்டன் அமுதனையும், பரதூருடையானையும் நாம் நல்வரவு கூறி நம்முடைய கூட்டணியில் சேர்த்துக் கொள்வோம். அவ்வாறு சேர்த்துக் கொள்வதில் உங்களில் யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்காதென்று எண்ணுகிறேன்......"

கருத்து மாறுபாடு இல்லை என்பதற்கு அடையாளமாக எல்லோரும் தலையை ஆட்டித் தங்கள் இணக்கத்தைக் காட்டினர்.

"நம்முடைய நோக்கமெல்லாம் சோழ நாட்டுக்குத் தெற்கே வேறு ஒருவருடைய ஆட்சிக்கு உட்பட்ட வேறொரு நிலப்பரப்பு இருக்கக் கூடாதென்பதுதான். அதற்கு ஒத்துழைக்க எத்தனை பேர் சேர்ந்தாலும் நம்மோடு அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்" என்று கொடும்பாளூரான் அந்தக் கருத்தை ஆதரித்தான்.

சோழன் மேலும் கூறலானான்: "கூடியவரை போர் செய்து துன்பப் படாமலே நம்முடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டு விடலாம் என்று உறையூரில் நடந்த கூட்டத்தில் தீர்மானம் செய்தோம். கொடும்பாளூர் மன்னர் அன்று உறையூரில் கூறிய திட்டப்படி இளவரசன் இராசசிம்மனையும், மகாராணி வானவன்மாதேவியையும் சூழ்ச்சியால் அழித்து விடுவதற்கும், மகாமண்டலேசுவரரை நம் கைக்குள் போட்டுக் கொள்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தோம். கப்பல் மார்க்கமாக நம் ஆட்களைத் தென்பாண்டி நாட்டுக்கும் ஈழத் தீவுக்கும் அனுப்பினோம். ஆனால் அந்தப் பழைய ஏற்பாடுகளெல்லாம் நமக்கு எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி யளிக்கவில்லை." இடையில் அரசூருடையான் குறுக்கிட்டு ஏதோ கேட்கத் தொடங்கவே சோழன் பேச்சுத் தடைப்பட்டது.

"அந்தச் சூழ்ச்சிகள் வெற்றியளிக்குமென்றுதான் அவற்றைச் செய்தோம். இல்லையானால் உடனே படையெடுப்புக்கு வழி செய்வதைத் தவிர வேறு முயற்சியில்லை."

"அவசரப்படாதீர்கள். நான்தான் ஒவ்வொரு விவரமாகச் சொல்லிக் கொண்டு வருகின்றேனே! எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட பின் அவரவருடைய கருத்துக்களைச் சொல்லுங்கள், போதும். நாம் நாகைப் பட்டினத்திலிருந்து கப்பலில் அனுப்பிய ஆறு ஆட்களில் மூன்று பேரைத் தென் மேற்குக் கோடியிலுள்ள விழிஞம் துறைமுகத்தில் இறக்கி விட்டு விட்டு மற்ற மூவரோடு கப்பல் ஈழ நாட்டுக்குப் போய் விட்டதாம். விழிஞத்தில் இறங்கிய நம் ஆட்களான செம்பியன், இரும்பொறை, முத்தரையன் ஆகிய மூவரும் தென்பாண்டி நாட்டுக்குள் புகுந்து கன்யாகுமரிக் கோயிலில் வானவன் மாதேவியின் மேல் வேலை எறிந்து கொல்ல முயன்றிருக்கிறார்கள். முடியவில்லை. நாம் இடையாற்றுமங்கலம் நம்பியிடம் கொடுக்குமாறு அனுப்பியிருந்த ஓலையை நம் ஆட்களோடு போரிட்டுத் தளபதி வல்லாளதேவன் கைப்பற்றிக் கொண்டு விட்டானாம். வடதிசைப் பேரரசுக்கு உட்பட்டு நம்மோடு சமரசமாக அடங்கியிருக்க விரும்பினால் திருப்புறம்பியத்தில் வந்து நம்மைச் சந்திக்குமாறு இடையாற்றுமங்கலம் நம்பியைக் கேட்டுக் கொண்டு அந்த ஓலையை எழுதியிருந்தோம் நாம். வானவன் மாதேவியைக் கொலை செய்ய இயலாததனாலும், இடையாற்று மங்கலம் நம்பி இதுவரையில் சந்திக்க வாராததனாலும் அந்தத் திட்டம் இனிமேல் பயன்படாது. எனினும் நம்முடைய ஒற்றர்கள் மூவரும் இன்னும் தென்பாண்டி நாட்டு எல்லைக்குள்ளேதான் மறைவாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து எனக்கு அடிக்கடி போதுமான செய்திகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன."

"குமாரபாண்டியனைக் கொல்லுவதற்காக ஈழ நாட்டுக்குப் போனவர்கள் என்ன ஆனார்கள் என்பது பற்றித் தாங்கள் ஒன்றுமே கூறவில்லையே?"

அதுவரையில் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த கொடும்பாளூர் மன்னன் தன்னுடைய சந்தேகத்தைக் கேட்டான்:

"அவர்களைப் பற்றித்தான் எனக்கும் இதுவரை ஒரு தகவலும் கிடைக்கவில்லை. விரைவில் திரும்பி வரு



தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.

வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர்கள் வந்தால் நாகைத் துறைமுகத்தில் இறங்கியதும் உடனே இங்கே வருமாறு கூறி யிருக்கிறேன். தாமதமின்றி இங்கே கூப்பிட்டுக் கொண்டு வருவதற்குத் துறைமுகத்துக்கே ஆட்களை அனுப்பி எதிர்பார்த்துக் கொண்டு காத்திருக்கச் செய்திருக்கிறேன்."

"தென்பாண்டி நாட்டில் சுற்றிக் கொண்டிருக்கும் நம் ஒற்றர்கள் போதுமான செய்திகளை அவ்வப்போது அனுப்பிக் கொண்டிருப்பதாகச் சொன்னீர்களே. அந்தச்செய்திகளையெல்லாம் நாங்களும் அறிந்து கொள்ளலாமோ?"

அரசூருடையானின் இந்தக் கேள்விக்குச் சோழன் சிரித்துக் கொண்டே பதில் கூறினான்:

"நம்முடைய புதிய நண்பர்கள் இருவரும் ஒன்றும் பேசாமலே உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சேர்த்துக் கேட்பது போல் பழைய நண்பர்கள் கேள்விகளைக் கேட்கிறார்கள். யோசனைகளைக் கூறுகிறார்கள். நம் அரசூருடைய சென்னிப் பேரரையர் கேட்பதற்கு முன் தென்பாண்டி நாட்டிலிருந்து ஒற்றர்கள் மூலம் கிடைக்கும் செய்திகளை நானே விரிவாகச் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். அதற்கு முன்னால் உங்களையெல்லாம் கலந்தாலோசித்துக் கொள்ளாமல் நான் செய்திருக்கும் ஒரு சில செயல்களுக்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். 'நாம் மிக விரைவில் படையெடுத்துவிடப் போகிறோம்' என்ற பெரும் பீதியைத் தென்பாண்டி நாடு எங்கணும் உண்டாக்குவதற்காக ஒரு தந்திரம் செய்தேன். நம் வீரர்களை வணிகர்கள் போலவும், தலயாத்திரை செய்பவர்கள் போலவும் நிறைய அனுப்பியிருக்கிறேன். தென்பாண்டி நாட்டின் வடக்கு எல்லையான கரவந்தபுரத்துப் பகுதிகளில் நம் ஆட்கள் திடீர் திடீரென்று கலகங்களையும், குழப்பங்களையும் செய்து போர் நெருங்கி வருவது போல் அச்சுறுத்துகிறார்கள். கொற்கையில் நடந்த முத்துக்குளி விழாவின் போது நம்மிடமிருந்து போன ஆட்கள் உண்டாக்கிய கலவரம் தென்பாண்டி நாட்டையே நடுங்கச் செய்திருக்கிறது. வட எல்லைக் காவலனும், கரவந்தபுரத்து அரசனுமாகிய பெரும் பெயர்ச் சாத்தன் அஞ்சிப் போய் மகா மண்டலேசுவரருக்குத் தூது அனுப்பி விட்டான். அந்தத் தூதன் மகாமண்டலேசுவரரிடமிருந்து கரவந்தபுரத்துக்கு வாங்கிக் கொண்டு போன பதில் செய்தியை நம் ஆட்கள் எப்படியோ கைப்பற்றி, இங்கே எனக்குக் கொடுத்தனுப்பி யிருக்கிறார்கள்.



அதில் முக்கியமான விவரம் ஒன்றுமில்லாவிட்டாலும், உண்மையிலேயே நாம், இன்றோ நாளையோ படையெடுத்து வந்துவிடப் போகிற மாதிரி எண்ணி அரண்டு படை ஏற்பாடுகளைத் தயார் செய்யும் முனைப்பு தெற்கே உண்டாகி விட்டது என்று அறிந்துகொள்ள முடிகிறது. இதேபோல் கரவந்தபுரத்துக்கும் அரண்மனைக்கும் நடக்கும் செய்தித் தொடர்புகளைக் கண்காணித்தோ, கைப்பற்றியோ அனுப்ப வேண்டுமென்று நம் ஆட்களுக்குக் கூறி அனுப்பியிருக்கிறேன். சாமர்த்தியமும் திறமையும் போதாத காரணத்தினால், நம் ஆட்களில் சிலர் அகப்பட்டு விட்டனர். அவர்கள் கரவந்தபுரத்துச் சிறைச்சாலையில் சிக்கி விழித்துக்கொண்டிருக்கிறார்களாம்..."

"புலி வருகிறது, புலி வருகிறதென்று பயமுறுத்திக் கொண்டிருப்பதனால் மட்டும் நமக்குப் பயன் என்ன? படையெடுத்துப் போய்விட வேண்டியதுதான்."

பேசுவதற்குக் கூச்சப்படுகிறவனைப் போலப் பேசாமல் உட்கார்ந்திருந்த கண்டன் அமுதன் மேற்கண்டவாறு உடனே படையெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினான்.

"நிதானமாகச் செய்வோம். இன்று ஒரு நாளில் செய்துவிட முடிகிற முடிவில்லை இது. இங்கே கொடும்பாளூரிலேயே தங்கி இன்னும் இரண்டு மூன்று நாட்கள் ஆலோசனை செய்து முடிவுக்கு வருவோம். அதற்குள் நமக்கு ஏதாகிலும் நம்பிக்கையூட்டும் புதிய செய்திகள் தெற்கேயிருந்து கிடைத்தாலும் கிடைக்கலாம்."
—சோழன் விட்டுக் கொடுக்காமல் பதில் சொல்லிச் சமாளித்தான். அதன் பின் சோழனும், கொடும்பாளூர் மன்னனும் சிறிது தொலைவு தள்ளிப்

போய் நின்று தனியாகத் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டு திரும்பவும் பழைய இடத்துக்கு வந்து எல்லாரோடும் அமர்ந்தார்கள்.

அப்படி அமர்ந்தவுடன் தனக்கே சொந்தமான முரட்டுக் குரலில் கனைத்துக்கொண்டு ஏதோ இன்றியமையாத விஷயத்தைப் பேசுகிறவனின் முகச் சாயலோடு தொடங்கினான் கொடும்பாளூரான்:

"நண்பர்களே! நம் எல்லோருக்கும் நோக்கமும், நினைவும் ஒன்றானாலும் அரசும், ஆட்சியும், வேறு வேறாக இருப்பவை. '**ஒன்றாற்றல் உள்ளும் தவறு உண்டு அவரவர் பண்பறிந்து ஆற்றாக் கடை**' என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். எல்லா வகையிலும் ஒருவருக்கொருவர் முழு மனத்தோடு ஒத்துழைப்பதென்று முதலில் நாம் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். இன்று கொடும்பாளூர் அரச மாளிகையின் ஒரு மூலையில் நம் ஐவருக்குள்ளே செய்து கொள்ளும் இந்த உடன்படிக்கை தான் எதிர்காலத்தில் தமிழ் வழங்கும் நிலம்முழுதும் சோழ நாடாக ஒருமை பெற்று விரிவடையினும் நம்மைப் பிரிக்க முடியாத உடன்படிக்கை. கை விரல்கள் ஐந்து. ஆனால் கை ஒன்று தான். தனித் தனியாகச் சொந்த நன்மைகளைப் பொருட்படுத்துவதில்லை என்றும், வெற்றிகள் அடைந்தால் அந்த வெற்றிக்காகத் தனித் தனியே பெருமைப் படுவதில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும். நமது கூட்டணியின் மாபெரும் படைக்கு அரசூருடையாரையும், பராதூருடையாரையும் தளபதிகளாக்கி மற்ற மூவரும் போர்த் தலைவர்களாக இருக்கட்டும் என்றே மதிப்புக்குரிய சோழ மன்னர் கருதுகிறார். இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்குகிறோம் என்பதற்கு அடையாளமாக வாள்களை உறை கழித்து நீட்டிச் சத்தியம் செய்வோம்" என்று சொல்லிக் கொண்டே தன் வாளை உருவி நீட்டினான் கொடும்பாளூரான். அடுத்த கணம் மற்ற நான்கு கைகளும் ஒரே சமயத்தில் வாள்களை உருவும் ஒலி உண்டாயிற்று. ஐந்து வாள்கள் நுனி கூடி உறவாடுவதுபோல் கூடாரமிட்டுக்கொண்டு நின்றன. அந்த வாள்களின் நுனி கூடுமிடத்தில் எங்கிருந்தோ ஒரு வண்டு பறந்து வந்து உட்கார்ந்தது. பாண்டியர் பலத்தையே அடித்து வீழ்த்துகிறவனைப் போல் கடுப்போடு அந்த வண்டை அடித்துத் தள்ளினான் கொடும்பாளூரான். "அரசே! அவசரமாக ஒரு ஒற்றன் வந்திருக்கிறான்" என்று சோழனை விளித்துக் கூறிக்கொண்டு உள்ளே வேகமாக வந்த ஒரு வீரன் முகத்தில் போய் விழுந்தது அந்தச் செத்த வண்டு.

## அத்தியாயம் 15

# சுசீந்திரம் கைமுக்குத் தண்டனை

துணைவிர பண்டிதர் வந்து உரையாடி விட்டுப் போன மறுநாள் காலை மகாராணி வானவன் மாதேவிக்கு அரண்மனையில் இருப்புக் கொள்ளவில்லை. அரசபோக ஆடம்பரங்களின் நடுவே எல்லோரும் வணங்கத் தக்க நிலையில் இருந்தும் உள்ளத்தின் ஏதோ ஒரு பகுதி நிறையாமலே இருந்து கொண்டிருந்தது. நிறைந்த வசதிகள், நிறையாத நெஞ்சம், உயர்ந்த எதிர்கால நினைவுகள், உயராத நிகழ்காலச் சூழ்நிலை,—இப்படித் தவித்துக் கொண்டிருந்தது அந்தப் பேருள்ளம். அந்தத் தவிப்பை மாற்ற விலாசினியும், பகவதியும் உடன் இருந்தது எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. அந்த ஒரே ஆறுதலும் இப்போது இல்லை.

அன்று விடிந்ததும் வானவன்மா தேவிக்கு விலாசினி திடீரென்று தந்தையோடு ஊருக்குச் சென்று விட்ட செய்தி தெரிந்தது. பகவதியாவது அரண்மனையில் இருப்பாள் என்று எண்ணி அவளை அழைத்து வரச் சொல்லி வண்ண மகளை அனுப்பினார் மகாராணி. பகவதி அரண்மனை எல்லையிலேயே காணப்படவில்லை என்று அறிந்ததும் அவருக்குப் பயமும் கவலையும் உண்டாயிற்று. புவனமோகினியின்மூலம் அந்தச் செய்தியை மகாமண்டலேசுவரருக்குச் சொல்லி அனுப்பினார்.

கோட்டாற்றுத் துறவி எழுதிக் கொடுத்து விட்டுப் போன அந்தப் பாடலைத் திரும்பத் திரும்பப் பாடச் சொல்லிக் கேட்க வேண்டுமென்று தோன்றியது மகாராணிக்கு. உலக வாழ்வின் அடிமூலத்துக்கும், அடிமூலமான கருத்தை அந்தப் பாட்டுக்குள் பொதித்து வைத்திருப்பதாக அதைக் கேட்கும்போதெல்லாம் அவ

ருக்கு ஒரு மனத்தோற்றம் உருவாயிற்று.

குமார பாண்டியனைப் பற்றி மகாமண்டலேசுவரர் வந்து கூறிய விவரங்கள் அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்திருந்தன. மகனைப் பற்றிய கவலை, மகன் ஆள வேண்டியதாயிருந்தும் அவனால் ஆளப்படாமல் இருக்கிற நாட்டைப் பற்றிய கவலை, மலர் போன்ற உள்ளம் கொண்ட மகாராணிக்கு இத்தனை கவலைகளையும் சற்றே மறந்து புனிதமான சிந்தனைகளில் ஈடுபட அந்தப் பாடல் உதவி செய்தது. விலாசினியாவது, பகவதியாவது உடனிருந்தால் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருக்கலாம். அல்லது ஆடல் பாடல்களின் சுவையான அனுபவத்தில் தன்னை மறக்கலாம். அவர்களும் அரண்மனையில் இல்லை. மகா மண்டலேசுவரர் அந்தப்புரப் பகுதிக்குள் அதிகம் வருவதில்லை. அன்று குமார பாண்டியனைப் பற்றிய உண்மை நிலைகளை அவர் வந்து தனிமையில் கூறிய போதே, மகாராணிக்குத் தாங்க முடியாத துயரம் அழுகையாகப் பொங்கிக் கொண்டு வந்தது. வீணாக அடிக்கடி மகாராணியாரைச் சந்திக்கச் சென்று எதையாவது கூறி அவர் மனத்தை உணர்ச்சி நெகிழுமாறு புண்படுத்தக் கூடாதென்றுதான் அரண்மனைக்குள்ளேயே இருந்தும் அதிகமாக மகாராணியைக் காணாமல் இருந்தார் மகாமண்டலேசுவரர். கோட்டாற்றுப் பண்டிதரையும் நினைத்த போதெல்லாம் வரவழைத்து அவர் பெருமை குறையும்படியாக நடந்து கொள்ள முடியாது.



சொன்னதைக் கேட்கவும், கேட்டதைக் கொடுக்கவும் எத்தனை பணிப் பெண்களோ இருந்தார்கள். யார் இருந்தால் என்ன? யார் போனால் என்ன? நாட்டுக்கெல்லாம் அரசி கூட்டுக்குள் கிளியாக உள்ளம் குலைய வேண்டியிருந்தது. மண்ணின் உலகத்தில் பாண்டி நாட்டுக்குத் தேவியாயிருக்க முடிகிறது. மனத்தின் உலகத்திலோ ஏழையிலும் ஏழை போல் வெறுமை சூழ்கிறது. ஒரே சுவைக் கலப்பற்ற தனிமை! உள்ளும் புறமும், நினைவும், கனவும், எங்கும், எதுவும் சூனியமாய்ப் பாழ்வெளியாய்ப் போய் விட்டது போன்ற தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கும் தனிமை அது. ஏழை கந்தல் துணிகளை இழுத்துப் போர்த்திக் குளிரைப் போக்கிக் கொள்ள முடியாதது போல் வலுவில்லாத நினைவுகளால் மனத் திடம் கிட்ட மாட்டேனென்கிறது.

மகாராணி அந்தப் பெரிய மாளிகையில் சிறிதும் நிம்மதியின்றி இருந்தார். குமார பாண்டியனைப் பற்றிய நினைவுகள், நாட்டின் எதிர்காலம், போர் வருமோ என்ற பயம் எல்லாம் ஒன்றாய்க் கூடி நின்று, 'ஓடு! ஓடு!' என்று அந்தத் தனிமையிலிருந்து எங்கோ துரத்துவது போல் இருந்தது. சொற்களின் பொருள் வரம்புக்குள் இழுத்துப் பிடித்து விளக்க முடியாத ஒரு தாபம் — ஆத்மதாபம், அகன்ற மாளிகையின் நீண்ட இடங்களைக் கடந்து உயர்ந்த மதில்களுக்கு அப்பால் எட்ட முடியாத உயரத்துக்குப் போய் விடவேண்டும் என்று உந்தித் தள்ளுவதுபோல் உள்ளத்தில் குமுறியிட்டது.

"தேவி! உணவருந்துவதற்கு எழுந்தருள வேண்டும்" என்று ஒரு பணிப்பெண் வந்து அழைத்தாள். மகாராணி பதில் சொல்லவில்லை.

"நீ போய் வண்ண மகள் புவனமோகினியை வரச்சொல்" — பணிப்பெண் உணவருந்துவதற்கு அழைத்ததையே காதில் போட்டுக் கொள்ளாமல் அவளை வேறொரு பணிக்கு ஏவினார் மகாராணி. சிறிது நேரத்தில் வண்ண மகள் வந்தாள்.

"புவனமோகினி! நான் உடனே தாணுமாலய விண்ணகரத்துக்குப் புறப்பட வேண்டும். சுசீந்திரத்துக்குச் சிவிகை ஏற்பாடு செய். நீயும் உடன் வர வேண்டும்."

முன் தகவல் இல்லாமல், உணவருந்தாமல், திடீரென்று இப்படி மகாராணி கோவிலுக்குப் புறப்பட வேண்டுமென்று கூறியதைக் கேட்டுப் புவனமோகினி திகைத்தாள்.

"தேவி! தாங்கள் இன்னும் உணவைக் கூட முடித்துக் கொள்ளவில்லையே? அதற்குள்..."

"பசி இப்போது வயிற்றுக்கு அல்ல. ஆன்மாவுக்கு! கேள்வி கேட்டுக் கொண்டு நிற்காதே. போய் உடனே ஏற்பாடு செய்."

வண்ணமகள் பதில் பேச வாயிழந்து சிவிகை ஏற்பாடு செய்வதற்காகச் சென்றாள். படைவீரர்கள் துணை வராமல் தனியாக மகாராணி எங்கும் புறப்படக் கூடாதென்று அன்று கன்னியாகுமரியில் வந்த ஆபத்துக்குப் பின் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் அப்போதிருந்த மனநிலையில் யாருக்கும் தெரியாமல், யாருடைய பாதுகாப்பும் இன்றிச் சுசீந்திரத்துக்குப் போய் வர முடிவு செய்திருந்தார் மகாராணி. மகா மண்டலேசுவரருக்கோ, மெய்க்காவற் படைவீரர்களுக்கோ தன் புறப்பாட்டைப் பற்றி அவர் தெரிவிக்கவே இல்லை. பரிவாரங்கள் புடைசூழ ஆரவாரம் நிறைந்த அரச மரியாதைகளோடு கோயிலுக்குச் செல்வது "நான் மகாராணி...... எனக்குப் பெருமை, பீடு, பதவி எல்லாம் உண்டு" என்று பெருமையை அநாவசியமாக அறிவித்துக் கொண்டு போவது போல் வெறுப்பை உண்டாக்கிற்று. அவர் எண்ணினார்:

"உலகத்தின் கண்களுக்கு நான் பாண்டிமா தேவி. இராசசிம்மனின் கண்களுக்கு அன்னை. ஆனால் தெய்வத்தின் கண்களுக்கு நான் ஒரு அபலைப் பெண். எளியவன் செல்வந்தனுக்கு முன் இரவல் நகைகளையும், ஆடை அணிகளையும் பூண்டு தன்னைப் பெரிதாகக் காண்பித்துக் கொள்ள முயல்வது போல் அபலையாக இருந்து கொண்டு அரசியாகப் பெருமை கொண்டாடக் கூடாது."

சிவிகையில் புவனமோகினி ஒருத்தியை மட்டும் துணைக்கு ஏற்றிக் கொண்டு தனிமையாகப் புறப்பட்டார் வானவன்மாதேவி. கோட்டையின் இரண்டு வாயில்களிலுமிருந்த காவல் வீரர்கள், "ஐயோ! இப்படி மகாராணி தனிமையாகப் போகிறார்களே?" என்று வருந்தத்தான் முடிந்தது. தடுப்பதற்கு அவர்கள் யார்? எல்லாப் பெருமையும் உள்ளவள் இல்லாதவள் போல் போக விரும்பும் போது யார்தான் அதைத் தடுத்து நிறுத்த முடியும்?

அது நன்றாகப் பட்டுத் திரையிட்டு மூடப் பெற்ற சிவிகையாதலால் சுசீந்திரத்தை அடைகிறவரையில் அதில் மகாராணி வானவன்மாதேவியார் போகின்றார் என்ற பெரிய உண்மை இடைவழி ஊர்களில் இருந்த மக்களுக்குத் தெரியாமலே போய்விட்டது. தெரிந்திருந்தால் எவ்வளவு பெரிய கோலாகலமான வரவேற்புக்கள் கிடைத்திருக்கும்? எத்தனை ஆரவாரமும் மக்கட் கூட்டமும் சிவிகையின் இருபுறமும் நிரம்பி வழிந்திருக்கும்? அந்த மாதிரிச் சாலைகளில் எத்தனையோ செல்வக் குடும்பத்துப் பெண்கள் அந்த மாதிரிப் பல்லக்குகளில் போவது வழக்கம். அதுபோல் நினைத்துக் கொண்டு அதை விசேடமாகக் கவனிக்கவில்லை மக்கள். சிவிகை சுமந்து செல்வோருக்கும் யாரிடமும் கூறக் கூடாது என்று முன்னெச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது.

தாணுமாலய விண்ணகரத்தின் கோபுரவாயிலில் மகாராணியும், புவனமோகினியும் இறங்கிக் கொண்டார்கள். கோயில் முன்புறமும், உள்ளேயும் கூட்டம் அதிகமாக இருந்தது.

"தேவி! இன்றைக்கு இந்தக் கோவிலில் உள்ள தெய்வ நீதி மண்டபத்தில் ஏதோ ஒரு முக்கியமான வழக்கில் தீர்ப்புக் கூறிக் '**கைமுக்குத் தண்டனை**' நிறைவேற்றப் போகிறார்களாம். இவ்வளவு கூட்டமும் கைமுக்குத் தண்டனையைக் காண்பதற்குக் கூடியிருக்கிறது" என்று புவனமோகினி விசாரித்துக் கொண்டு வந்து கூறினாள். சாதாரண உடையில் சாதாரணப் பெண்கள் போல் கூட்டத்துக்குள் புகுந்து சென்ற அவர்கள் யாருடைய பார்வைக்கும் படாமல் தப்பியது வியப்புத்தான்.

"புவனமோகினி! இந்தக் கோவிலுக்கு வந்தால் மட்டும் ஒரு சிறப்பு. இங்கே படைத்துக் காத்து அழிக்கும், முப்பெருங் கடவுளரின் ஒன்றுபட்ட அம்சத்தைத் தெய்வமாக வணங்குகிறோம்" — மகாராணி வண்ணமகளிடம் கூறிக்கொண்டே சந்நிதிக்கு முன் சென்று வணங்கினார். அர்ச்சகர் அருகில் வந்து பார்த்து அடையாளம் கண்டு கொண்டார். அவருக்குக் கையும், காலும் பதறி நடுங்கின.


"தேவி! இதென்ன கோலம்......? இப்படித் தனியாக..." சரியாகப் பேச முடியாமல் வாய் குழறியது அவருக்கு. ஆள்காட்டி விரலை இதழ்வாயிற் பொருத்திப் பேசாமல் இருக்குமாறு அர்ச்சகருக்குச் சாடை காட்டினார் மகாராணி. அவர் அடங்கினார். கை கூப்பி வணங்கிக் கொண்டே நெடு நேரம் நின்றிருந்தார் மகாராணி. முகத்திலும், கண்களிலும், தெய்வீக நிலை ஒளிர்ந்தது. உலகத்தை மறந்த பெரு நிம்மதியில் நினைக்கும் ஒரு அருள்

இன்பம் சிறிது நாழிகை தொடர்ந்தது. வழிபாடு முடிந்தது.

"அர்ச்சகரே! இன்று ஏதோ கைமுக்குத் தண்டனை நடைபெறுகிறதாமே? வரும்வழியில் இருந்த கூட்டத்தைப் பார்த்து இவள் விசாரித்துக் கூறினள். அது என்னவென்று விவரம் சொல்லுங்கள்." மகாராணி கேட்டார்.

"தேவி! தங்களுக்குத் தெரியாத தொன்றும் இல்லை. நாஞ்சில் நாட்டின் எப்பகுதியில் தெய்வக் குற்றம், ஒழுக்கக் கேடு முதலிய பேரநீதிகள் செய்தவர்மீது அவ்வநீதிக்கு ஆளான எவர் வழக்குத் தொடர்ந்தாலும் அவ் வழக்கைப் பன்னெடுந் தலைமுறைகளாக இந்தக் கோவிலில் உள்ள தெய்வநீதி மன்றத்தார் நீர விசாரித்துத் தீர்ப்புக் கூறி வருகிறார்கள். குற்றம் செய்தவர்கள் 'கைமுக்குத் தண்டனை' பெறுகிறார்கள். இக் கோவில் தெய்வ நீதிமன்றத்தார் கைமுக்குத் தண்டனைக் கென்றே ஒரு பெரிய நெய்க் கொப்பரையும் பொன்னுற் செய்த நந்திச்சிலை ஒன்றும் வைத்திருக்கின்றதைத் தாங்கள் அறிவீர்கள். தண்டனைக்குரியோராகத் தீர்ப்புப் பெறுவோர் கொப்பரை நிறையக் காய்ந்து கொதிக்கும் நெய்க்குள் கையை விட்டு, அடியில் கிடக்கும் பொன் நந்தியை வெளியே எடுக்க வேண்டும். தென் பாண்டி நாட்டிலேயே பெரிதாக நினைக்கப்படும் இந்தத் தண்டனை கடந்த நான்கைந்து ஆண்டுகளில் எவருக்குமே அளிக்கப்படவில்லை. அதாவது 'கைமுக்குத் தண்டனை' பெறும் அளவுக்கு இந்தச் சில ஆண்டுகளில் இந்தப் பகுதியில் யாரும் குற்றம் செய்யவில்லை.

"சென்ற திங்களில் திருவட்டாறு ஆதிகேசவ விண்ணகரத்தில் வழிபாட்டுரிமை பெற்ற சோழிய அந்தணர் ஒருவருடைய புதல்வன் அதே விண்ணகரக் கோயிலின் விலைமதிப்பற்ற பொன் அணிகலன்களைத் திருடிக் கொண்டு யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் திடீரென்று எங்கோ மறைந்து விட்டான். சோழிய அந்தணர் தம் மகன்தான் திருடிச் சென்றிருக்கிறான் என்பதனை அறிந்து கொண்டு விட்டார். புதல்வன் செய்த குற்றமே என்று தயக்கமின்றிச் சுசீந்திரம் தெய்வ நீதிமன்றத்தாருக்கு அக் குற்றத்தை அறிவித்து விட்டார் அவர். எனினும் குற்றம் செய்த சோழிய இளைஞன் அகப்படவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் காந்தளூரில் ஒரு பொற்கொல்லன் வீட்டில் விண்ணகரத்துப் பொன் நகைகளை அழித்து உருக்கி விடுவதற்கு முயன்று கொண்டிருந்தபோது அந்தச் சோழிய இளைஞனைப் பிடித்து விட்டார்கள். இன்று தீர்ப்புக் கூறுகிறார்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் நடைபெறும் 'கைமுக்குத் தண்டனை' யாகையால் மக்கள் திருவிழாக் கூட்டம் போல் பார்ப்பதற்குக் கூடி விட்டார்கள். கைமுக்கு மண்டபத்துப் பக்கம் போவதற்கே பரிதாபமாக இருக்கிறது" என்றார் அர்ச்சகர். (தொடரும்)



கோல்கேட்-பாமாலிவ் என்றால் சோப்புகள், அழகுப் பௌடர்கள், பற்பசைகள் என்ற அளவுக்கு இந்தச் சொற்கள் பெயர்பெற்று விளங்குகின்றன. இக்கம்பெனியின் உயர்தர நிர்வாகத் தலைவராகத் திரு வேணுகோபால் லக்ஷ்மண் கோடிகால் என்பவர் உயர்த்தப்பட்டிருக்கிறார் என்ற செய்தி பலருக்கு உவகையளிக்கும். இதுகாறும் அமெரிக்கரே தலைமை வகித்து நடத்தி வந்த இந்தக் கம்பெனியின் தலைமைப் பதவிக்கு முதன்முதலாக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் திரு வி. எல். கோடிகால்தான். இக்கம்பெனியிலேயே விற்பனையாளர் பதவியிலிருந்து பலவகை அந்தஸ்தில் உழன்று கம்பெனியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வந்துள்ள திரு கோடிகால் இப்போது தலைவர் பதவிக்கு வந்திருப்பது அவரிடம் காணும் திறமைக்கும் நிர்வாக சாமர்த்தியத்துக்கும் அயல்நாட்டிலுள்ள இக்கம்பெனியின் தலைமைக் காரியாலயம் அளிக்கும் பாராட்டு. இவர் தலைமையில் இந்தக் கம்பெனி மேன்மேலும் அபிவிருத்தியடையும் என்று எதிர்பார்க்கலாம்.

# யந்திரங்களின் வெற்றி ஒலி...

1957ல் ப்ஹ்ரீனிலிருந்து ஸ்ரீ பல்பீர்சிங் ஜம்ஷெட்பூர் வந்த போதுதான் ரூ 100 மில்லியன் செலவில் புதிய ப்ளூமிங் மில் நிறுவுவதற்கான இடம், சிறுமலையை வெட்டி, காடுகளை அழித்துச் சமதளமாக்கப்பட்டிருந்தது. இது, டாடா ஸ்டீலின் 2 மில்லியன் டன் விரிவான திட்டத்தின் ஓர் முக்கிய அமிசமாகும்.


இன்று இப்புதிய 46" ப்ளூமிங் மில் இந்தியாவிலே மிகப் பெரியது. இது, 2 மில்லியன் டன் உற்பத்தி செய்யும் சக்தி வாய்ந்தது: ப்ளூம்கள், ஸ்லாப்கள் மூலம் தண்டவாளங்கள், ப்ளேட்டுகள், தகடுகள், கட்டிட நிர்மாண எஃகுப் பொருள்கள் ஆகியவற்றையும் இன்னும் பிற பல பொருள்களையும் உற்பத்தி செய்வதற்குத் தயாராக விருக்கிறது.

சூயஸ் தகராறு காரணமாக, வெளியிலிருந்து முக்கிய சப்ளை வருவதில் தாமதம், பிற கஷ்டங்கள் ஆகியவை ஏற்பட்டிருந்தும், சிரத்தை மிகுந்த ஸ்ரீ பல்பீர்சிங் போன்றவரின் பெரு முயற்சியால் இப்ப்ளூமிங் மில் துரிதமாகப் பூர்த்தி பெற முடிந்தது. இந்த வகையில் அவரும் நூற்றுக் கணக்கான இந்தியர்களும், அமெரிக்க, ஜெர்மானிய தொழில் நிபுணர்களின் உதவியோடு இம்மகத்தான ப்ராஜெக்ட் மூலம் எஃகுப் பொருள்கள் உற்பத்திக்கும், இந்தியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கும் இரவு பகலாக உழைத்தார்கள்.

## டாடா ஸ்டீல்

**இரு மில்லியன் டன் உற்பத்திக்கு**

TN 3122



The Tata Iron and Steel Company Limited




# அதிசயத் திருடன்

ஒரே ஒரு ஊரில் அதிசய நகரம் என்று ஒரு பட்டணம் இருந்ததாம். அந்தப் பட்டணத்தை ஆண்ட அரசனும் ஓர் அதிசய மன்னனும். அதிசய மன்னனின் குடிமக்களும் அதிசயமாகத்தானே இருப்பார்கள்? அதிசய மக்கள் வாழும் நாட்டில் இருக்கும் திருடனும் அதிசயத்திருடனாய்த் தானே இருக்க வேண்டும்? ஆம், அவன் உண்மையிலேயே அதிசயத் திருடன் தான். ஒரு தடவை கூட யார் கையிலும் சிக்கிக் கொள்ளவில்லை யல்லவா? அந்த அதிசயத் திருடனுக்குப் புத்தி புகட்டுவதற்கு ஒரு அதிசயச் சாமியார் வருகிறார். ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள துர்க்குணங்களில் ஒன்றையாவது கைவிட வேண்டும் என்னும் அவரது அறபோதனையும் அதிசயமானதுதான்.

அதிசயத் திருடன் திருடிக் கொண்டேயிருந்து திருந்தி விட்டான் என்று கதையை முடிக்க முடியுமா? அப்புறம் அதில் அதிசயம் என்ன இருக்கிறது?

அவனைப் பூ விற்கும் ஓர் அதிசயப் பெண் காதலிக்கிறாள். அவன் அரசனின் கட்டாயக் கல்வி உத்தரவை மீறிய குற்றத்துக்காக அரசவைக்கு அழைத்துச் செல்லப் பட்டதும், அங்கு அவன் அரசனும் அதிசயிக்கும் வண்ணம் அரிய தமிழில் அறிவுரை நிகழ்த்தியதும் ஓர் அதிசயம்தான்.

அதிசய மன்னனின் போக்கு, படத்தின் முதல் பாதிவரையில், அதிசயமாகவும், அசட்டுத்தனமாகவும், முட்டாள்தனமாகவும் இருக்கிறது. இடைவேளைக்குப் பிறகு அதிசயிக்கத்தக்க முறையில் மாறுகிறது. குருட்டுப் பிச்சைக்காரனாக மாறு வேஷம் பூண்டு திருடனுடன் சேர்ந்து கொண்டு அரண்மனையில் திருடும் கட்டத்திலிருந்து கடைசி வரையில் அவர் பாகம் வேஷப் பொருத்தத்துடன் நன்றாயிருக்கிறது.

மன்னனாக நடிக்கும் தங்கவேலு நன்றாய் நடித்திருக்கிறார். மாறு வேஷத்தில் அவர் திறமை நன்கு வெளிப்படுகிறது.

பிறகு, இந்த அதிசய மன்னனின் மந்திரியான டி. எஸ். பாலையாவைப்பற்றிக் கூற வேண்டும். அவர் வில்லன் வேஷம் போடுவதில் வில்லாதி வில்லன். இந்தப் படத்தில் அவர் நடிப்பு பிரமாதம். அவர் அடிக்கடி கூறும் 'நீலகலகண்டம்' ஒன்றே போதும்.

அதிசயத் திருடனின் பாகம் ஜெமினி கணேசனுக்கு மிகவும் அதிசயமாகத்தான் பொருந்துகிறது. இதுவரையில் ஆடை அணிகள் கலுங்காமல் நடித்து வந்த கணேசன் இந்தப் படத்தில் முற்றிலும் புது 'மேக்கப்'பில் நடிக்கிறார். பாஷையும் கொச்சையாக மாறி விடுகிறது. ரொம்ப உருக்கமாகவும் நடித்திருக்கிறார். பூக்காரப் பெண் கௌரியின் இதயத்தில் தனக்கு இடம் இருக்கிறது என்று அறிந்ததும், மரண தண்டனையையும் மறந்து புளகாங்கித முற்று மகிழ்ந்த அதிசயத் திருடனைப் பார்க்க மிகவும் உருக்கமாயிருந்தது.

கௌரியாக நடிக்கும் சாவித்திரி ஆரம்பம் முதல் கடைசி வரையில் நன்றாக நடிக்கிறார். ஆனால் அளவுக்கு மீறிய வசனங்கள் அவர் பேசியிருக்க வேண்டாம். அதுவும் இந்தப் படத்தின் அதிசயங்களில் ஒன்று.

தாந்தன்

ஹாஸ்ய நடிகை முத்துலக்ஷ்மி கம்பீரமான ராணியாக நடித்திருப்பதையும் அதிசயத்தில் சேர்க்க வேண்டியதுதான்.

அதிசயத் திருடனின் சகோதரியின் மகள் பச்சையும் ஓர் அதிசயப் பெண்தான். திரைக் கதையுடன் சம்பந்தம் இருந்தும் இல்லாமலும் இருக்கும் பாத்திரம் பச்சை. ஆகவே, நாமும் அதைப் பற்றிச் சொல்லியும் சொல்லாமலும் விட்டு விடுவதுதான் நல்லது.

அறபோதனை அருளும் சாமியாராக வரும் நாகையாவும் ஓர் அதிசயமான பாத்திரம்தான். திருடன் திருந்துவதற்காக அவன் கையைச் சுற்றிக் கொண்ட நாகத்தை அவர் முருகன் நாமத்தைச் சொல்லி விடுவிப்பதும் அதிசயம்தான்.

பொழுது புலர்ந்த பின்பும் தூங்கும் மகாராஜாவைத் தட்டியெழுப்பும் பணிப் பெண்கள் பாடும் "விடிந்ததே மகாராஜா, விழித்திடும் ராஜா" என்னும் பாட்டும் அதிசயமானதுதான்.



ஆனால் நடனத்துக்குப் பின்னணியாகப் பாடப்படும் "மச்சான் மச்சான்" பாட்டு மாத்திரம் அதிசயமானதல்ல; ஆனால் சகிக்க முடியாத சங்கடம் தருவது.

அதிசயத் திருடன் [தெருவில்] ஆடிக் கொண்டு பாடும் பாட்டும் அதிசயமானதல்ல; "சபாஷ் மீனா"வில் இதே மாதிரி ஒரு பூக்காரியும், அந்தப் பூவைத் தெருவில் பாட்டு பாடிக் கொண்டு விற்கும் அவள் காதலனும் வருகிறார்கள். அந்தப் படம் இன்னும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் அதே காட்சியை இந்தப் படத்தில் சிறிதும் முன் யோசனையின்றிப் புகுத்தியிருப்பது அதிசயம்தான். (ஒருவேளை தகுந்த முன் யோசனையுடன்தான் அந்தக் காட்சியைப் புகுத்தினார்களோ என்னவோ? அப்படியிருந்தால் அதிசயப்படுவதற்கு இல்லை.)

இந்தப் படத்தில் ஒரே ஒரு பாட்டைத் தவிர மற்றதெதுவும் நன்றாயில்லை. மெட்டையும் சேர்த்தே கூறுகிறேன்.

அந்த அதிசயப் பாட்டு எதுவோ என்று கேட்கிறீர்களா?

"எல்லா விளக்கும் விளக்கல்ல
சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு";

என்னும் திருக்குறள்தான்.

இரவு நேரத்தில் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது இடையில் தூங்கி யெழுந்தால், ரயிலில் நாம் முன்னேக்கிப் போகிறோமா, அல்லது பின்னேக்கிப் போகிறோமா என்று சந்தேகம் வந்து விடும். இந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது எனக்கு அந்த நிலைதான் ஏற்பட்டது.

கதை புதுமாதிரியானது; பாத்திரங்களும் புதுமையானவைதான். கூடிய வரையில் நடிகர்களும் நன்றாகவே நடிக்கின்றனர். பின்பு ஏன் படம் வெற்றியடையவில்லை? இந்தக் கேள்விக்குப் படாதிபதியினால் பதில் சொல்ல முடியுமானால் அது பெரிய அதிசயம். இத்தகைய சிந்தனைக்குரிய கேள்வியைப் படாதிபதி ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள ஆரம்பித்தால் நிச்சயம் நம் வெள்ளித் திரையில் அதிசயங்கள் நிகழத் தொடங்கி விடும்.

'அதிசயத் திருடன்' என்று எழுத வேண்டியதை வல்லொற்று இல்லாமலே 'அதிசய திருடன்' என்று விளம்பரங்களில் போட்டிருக்கிறார்கள். இதில் அதிசயம் ஒன்றும் இல்லை. 'பொது கூட்டம்' என்று அறிஞர்கள் பேசும் கூட்டத்தைப் பற்றியே விளம்பரம் செய்யும் பொழுது பட விளம்பரங்களைப் பற்றிக் கேட்பானேன்?

சாதாரணமாகத் திருடர்கள் ஜனக் கூட்டம் அதிகமாகப் புழங்கும் இடங்களில்தான் அதிகமாக வலைய வருவார்கள். அங்கேதானே அவர்கள் தொழில் வளம் பெற்றுப் பெருகும்?

ஆனால் இவன் சாதாரணத் திருடனல்லவே? அதிசயத் திருடனல்லவா? ஆகவே, "அதிசயத் திருட"னுக்குக் கூட்டமேயில்லை யென்று குறைப்பட வேண்டியதில்லை. அது நியாயமும் அல்ல!

ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு யாவும் நன்றாயிருக்கின்றன. புல்லையாவின் டைரக்ஷனைப் பற்றிச் சொல்லுவதற்கு விசேஷமாக ஒன்றுமில்லை.

திருடனுக்குத் தண்டனை விதித்த பிறகு, படம் அத்தனை மெதுவாக, அடிமேல் அடிவைத்துப் போவதை, 'சஸ்பென்ஸ்' என்று கூற முடியாது; சங்கடம் என்றுதான் கூற வேண்டும்.




நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் விளங்க

"கோகுல்" ஸாண்டால் & ஸாண்டல்வுட் பவுடர்

# டி.எஸ்.ஆர் & கோ

## கும்பகோணம்

சென்னை தேனும்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியிலுள்ள எமது ஸ்பெஷல் ஸ்டாலுக்கு விஜயம் செய்யுங்கள்

A. K. GOPALS CO.




## 63

திடீரென்று உயிருக்கு ஆபத்து வந்து மரணம் எய்துவதைப் போல் மனிதனுடைய அறிவு திடீர் என்று மாய்வது காமம், கோபம் இந்த இரண்டில் ஒரு விபத்தினால்.

கோபம் வந்து விட்டால் படித்த படிப்பும் அடைந்த அறிவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகின்றன. கோபத்தை உயிருக்கு நேரக் கூடிய ஒரு விபத்தைப் போல் கருதி விலக்க வேண்டும்.

யார்மேல் உனக்குக் கோபம்? உனக்குக் கீழ்ப்பட்ட ஒருவன்மேல் கோபமா? அதைத்தான் அடக்க வேண்டும். உன் கோபத்தைச் செலுத்த முடியாத ஒருவர்மேல் உனக்குக் கோபமாயின் அதனால் ஒரு தீங்கும் உண்டாகாது. உன் கோபம் அவரை என்ன செய்யும்? ஆனால் உனக்கு அடங்கிய ஒருவன்மேல் நீ கோபங் கொண்டால், அவனுக்குத் தீமை இழைக்கத் தோன்றும். அதுவே அபாயம். அதை விலக்க வேண்டும். கோபத்தைக் காத்தேன் என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானால் உன் கோபம் செல்லக் கூடிய இடத்தில், அதாவது உனக்குக் கீழ்ப்பட்டவர்கள் இடத்தில் உண்டாகும் கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டும்.

**செல்இடத்துக் காப்பான்**
**சினம்காப்பான் அல்இடத்துக்**
**காக்கின்என் காவாக்கால்**
**என் ?**

உனக்குக் கீழ்ப்படாத ஒருவனிடம், அதாவது நீ அவனுக்குக் கீழ்ப்பட்டவனாய் இருக்கும் ஒருவனிடம், கோபம் கொள்வதனால் உனக்குத்தான் தீமை நேரும். உனக்கே மனத்தில் வேதனை, உனக்கே நஷ்டம். அதனால் அதைச் செய்யாதே. உன் கோபத்தால் ஒருவனுக்குத் தீமை செய்யக் கூடிய சந்தர்ப்பத்தில் அப்படிச் செய்யாமல் கோபத்தைத் தவிர்ப்பது மிகவும் அவசியம். பிறர் உனக்குச் செய்யும் தீமையைக் காட்டிலும் நீ பிறருக்குச் செய்யும் தீமையே உனக்குப் பெரிய நஷ்டம்! கோபத்தையும் பாபத்தையும் வளர்த்துக்கொண்டே போகும். தான் அனுபவிக்கிற தீமை அதோடு நிற்கலாம். பிறர் உன்னால் அடைகிற துன்பம் பூமியில் நட்ட விதைபோல் செடியாகி மரமாகி வளரும்.

**செல்லா இடத்துச்**
**சினம்தீது செல்இடத்தும்**
**இல்அதனின் தீய**
**பிற.**

* * *

கோபத்தால் என்ன பயன் உண்டு? அது மகிழ்ச்சியைக் கொல்லும் ஒரு துஷ்ட மிருகம். மனித குலத்துக்கு ஒரு பயனும் தராதது கோபம். வாழ்க்கையில் சிரிப்பும், சந்தோஷமும்

நிறைந்திருக்க வேண்டியது. அதை விட்டுக் கோபத்துக்கு இடம் கொடுத்தால் அது பெரும் பகையாகி அவற்றைக் கொன்றுவிடும்.

நகையும் உவகையும்
  கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ
  பிற.

[சினத்தின்—சினத்தைக் காட்டிலும் பெரிய]


பிறர் தீமை ஒருபுறம் இருக்க, உன் நன்மையைக் காக்கவேண்டாமா? அதற்காகவே யாயினும் சினத்துக்கு இடம் கொடாதே. உன் நன்மையை நீ காப்பாற்றிக் கொள்ள விரும்பினால், சினம் காப்பாய். கோபமே உனக்குச் சத்துரு. தானே தனக்கு ஒரு பகைவனாவதற்கு வழியாகும் கோபம்.

தன்னைத்தான் காக்கின்
  சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும்
  சினம்

கோபத்தினால் ஒரு லாபமுமில்லை. அது கௌரவத்தையும் தராது. பொருளும் தராது. துன்பம்தான் அதன் விளைவு. இதற்கு மிகப் பொருத்தமான உபமானம் கொடுத்துச் சொல்லுகிறார் முனிவர்.

சினத்தைப் பொருளென்று
  கொண்டவன் கேடு
நிலத்துஅறைந்தான் கைபிழையாது
  அற்று.

நிலத்தை அறைந்தால் நம் கைதான் வலிக்கும். எவ்வளவுக்கு எவ்வளவு பலமாக அறைகிறோமோ, அவ்வளவு நாம் நோவு அடைகிறோம். இது நிச்சயம். கோபம் கொள்ளுகிறவனுடைய செய்கை இத்தகையது. தன்னைத்தான் துன்பப்படுத்திக் கொள்கிறான். அதனால் என்ன சுகம்? என்ன பயன்? நிலத்தை அறைவதைப் போல் தன் மனத்தைத் துன்பப்படுத்திக் கொள்கிறான்.



## வேலை கிடைக்க வழி!

தற்போது தஞ்சை மாவட்டத்தில் மட்டும் சுமார் எழுநூறு பயிற்சி பெற்றும் வேலை கிடைக்காத ஆசிரியர்கள் உள்ளனர். இம்மாவட்டத்திலுள்ள பதினேரு பள்ளிகளினின்றும் ஆண்டுதோறும் சுமார் தொள்ளாயிரம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வெளியேறுகின்றனர். இக் கணக்குப்படி வருகின்ற 1959 மார்ச்சு மாதத்தில் 900 பேர்கள் ஆசிரியர்களாக வெளிவருவார்கள். இதனால் ஆசிரியர்களிடையே ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் வளருமே தவிர நீங்காது.

இரண்டு ஆசிரியர்கள் உள்ள ஒரு பள்ளியில் எழுபத்தொன்றுக்கு மேற்பட்ட சராசரி வருகை இருந்தால்தான் மூன்றாவது ஆசிரியரை நியமிக்க முடியும். இந்தப் பள்ளி ஐந்து வகுப்புகள் உள்ள பள்ளியாக இருந்து அறுபத்தைந்திலிருந்து அறுபத்தொன்பது வரை சராசரி வரக்கூடிய பள்ளியாகவும் இருந்து விட்டால் மேலும் தொல்லைதான். இரண்டு ஆசிரியர்களே ஐந்து வகுப்புக்களையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வகுப்பிலோ, அல்லது இரண்டு வகுப்புகளிலோ, நாற்பதுக்கு மேற்பட்ட சராசரிவருகை உள்ள ஒரு உயர்நிலை துவக்கப் பள்ளியை எடுத்துக் கொள்ளுவோம்.

| | சராசரி வருகை |
|---|---|
| முதல் வகுப்பு | 40 |
| இரண்டாம் வகுப்பு | 40 |
| மூன்றாம் வகுப்பு | 30 |
| நான்காம் வகுப்பு | 25 |
| ஐந்தாம் வகுப்பு | 20 |
| ஆறாம் வகுப்பு | 20 |
| ஏழாம் வகுப்பு | 20 |
| மொத்த சராசரி வருகை | 195 |

இப்பள்ளியில் முதலிரண்டு வகுப்புகளும் செக்ஷன் பிரிப்பதற்கான தகுதியைப் பெற்றிருந்தாலும் பிரிக்க முடியாது. ஏனெனில் பள்ளியின் மொத்த சராசரி வருகை 195தான் (195/35 = 5-25/35). எனவே இப்பள்ளியில் ஆறு ஆசிரியர்கள்தான் பணியாற்ற முடியும். ஆனால் இப் பள்ளியிலுள்ள வகுப்புப் பிரிவுகளோ முதலிரண்டு வகுப்புகளிலும் நான்கு (முதல் 'ஏ' 'பி', இரண்டாம் 'ஏ' 'பி') மற்ற வகுப்புகள் ஐந்தாக ஒன்பது ஆசிரியர்கள் வேலை பார்க்க வேண்டிய பள்ளிதான். ஆயினும் 1: 35 என்ற விகிதத்தின் காரணமாக ஆறு பேர்கள்தான் வேலை பார்க்க முடியும். எனவே அரசியலார் 1: 20 என்பதாக ஆசிரியர் மாணவ விகிதத்தைக் குறைத்து விட்டு, எங்களுக்கு வேலை கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.


சீர்காழி
11-12-58

கந்தையன், ராமதாஸ்
தஞ்சை மாவட்ட வேலை கிடைக்காத ஆசிரியர் சங்கம்

## கல்வி இலாகா கவனிக்குமா?

சென்னை அரசாங்கத்தின் புதிய கல்வி கொள்கைப்படி, ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலையிலும் இவ்வளவு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்தான் செகண்டரி கிரேடு சம்பள விகிதப்படி வேலை பார்க்கலாம் என்று வரையறுத்திருக்கின்றனர். அதன்படி அநேக செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு ஸ்கேல் கிடைக்காமல் எலிமெண்டரி கிரேடு ஸ்கேலில் வேலை பார்க்க நேரிட்டது. பின்னர் 1-4-56 க்கு முன் செகண்டரி கிரேடு விகிதம் வாங்கியிருந்தால் அவர்கள் எங்கு வேலை பார்த்தாலும் அதே விகிதத்தைப் பெறலாம் என்று ஒரு திருத்தம் கொடுத்தார்கள். அதன்படி அநேக செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு நன்மை கிட்டியது. ஆனால் என்னைப் போன்ற பல வருடங்களாக ஒரே பள்ளியில் வேலை பார்த்து வரும் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்து இந்த வருஷம் மார்ச்சு மாதம் செகண்டரி கிரேடு பாஸ் செய்தவர்களுக்கும், சர்க்கார் சட்டப்படி, கடைசிப் பரீட்சைத் தேதிக்கு மறுதினம் முதல் அதாவது 27-4-58 முதல் செகண்டரி கிரேடு விகிதம் கிடைக்கப் பெற்று இதுவரை வாங்கி வந்தோம்.

சமீபத்தில் இந்த அக்டோபர் மாதம் வந்த மற்றொரு உத்தரவின் மூலம் எங்களுக்கு அந்த விகிதம் கிடையாது என்று ஏற்பட்டு விட்டது. அத்துடன் நிற்காமல் 27-3-58முதல் நானது அக்டோபர் வரை, கொடுத்து வந்த வித்யாசத்தையும் அதாவது சுமார் ரூ. 108 யும் பிடித்து விட்டார்கள். ஒரு ஏழை ஆரம்ப ஆசிரியர் இரண்டு மாதச் சம்பளத்தைத் தியாகம் செய்தால்தான் இந்த ரூபாய் நூற்றி எட்டையும் ஈடு செய்ய முடியும். எங்களுக்கு முன்னறிவிப்பின்றியே பிடித்து விட்டார்கள். இரண்டு மாதங்கள் சம்பளமின்றியே வேலை செய்ய வேண்டும். 1-4-56க்கு முன் நாங்கள் அந்தச் சம்பள விகிதத்துக்கு அருகதை உள்ளவர்களாகி விட்டோம். பின்னர் அந்தச் சம்பளத்தை எப்பொழுது பெற்றால் என்ன? இதனால் என்னைப் போன்ற துர்ப்பாக்கியமான ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு விகிதம் இப்பொழுது வேலை பார்க்கும் பள்ளிகளில் கிடைப்பது அரிது. ஏனெனில் அங்கு செகண்டரி கிரேடு ஸ்தானம் காலியேற்




பட்டுக் கிடைத்தால்தான் உண்டு. இல்லாவிடில் பல வருஷங்களாக வேலை பார்க்கும் பள்ளிகளை விட்டு செகண்டரி கிரேடு விகிதம் கிடைக்கும் பள்ளிகளாகப் பார்த்துப் போகவேண்டி வரும். என்னைப் போன்று இந்த வருஷம் செகண்டரி கிரேடு தேர்வு பெற்ற ஆசிரியர்கள் ஒரு சிலர்தான் இருப்பார்கள். அவர்கள் விஷயத்தில் சர்க்கார் கருணை கூர்ந்து நீதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிடில் பல வருஷ சேவைக்குப் பின் வேறு இடங்களில் வேலை தேடிக்கொண்டு அலைய வேண்டிய நிலை ஏற்படும்.

மேலூர்
13—12—58 ஆர். தேவநாராயணன்

## சிறு நிலச்சுவான்தார் அவதி

சிறு நிலச்சுவான்தாரர் 4, 5 ஏக்கருக்குக் கீழ்ப்பட்டவர்கள் 60% இருக்கிறார்கள். இந்தச் "சிறு நிலச்சுவான்தாரர்கள்" உழுது பயிரிடும் குடியானவர்களைக் காட்டிலும் ஏழைமைப் பட்டவர்கள். (1) இவர்கள் 4, 5 ஏக்கருக்குக் கீழ்ப்பட்டவர்கள் குத்தகைக்கு இதற்கு முன்பு விட்டிருந்தாலும் சொந்தத்துக்கு விவசாயம் செய்யக் கேட்டால் குத்தகைதாரர் ஒருவித ஆட்சேபணையும் கூறாமல் பூமியை நிலச்சுவான்தாரர் வசம் ஒப்படைத்து விடவேண்டும்.

(2) 4, 5 ஏக்கருக்குக் கீழ்ப்பட்டுள்ளவர்களுக்கும் இதையே நம்பி வாழ்பவர்களுக்கும் குடியானவர் பாதுகாப்பு மசோதா, நியாயவார மசோதா, நிலச் சீர்திருத்தங்கள் இந்த மூன்று சட்டங்களிலிருந்தும் பூரண விலக்கு அளிக்க உடனே ஆவன செய்ய வேண்டும்.

திருமாநிலையூர்
9—12—58 எஸ். நாகராஜன்

## நீலகிரியில் அவசரச் சட்டம்

நீலகிரியில் சுமார் 18,000 ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கு சாகுபடி செய்கிறார்கள். சிலரைத் தவிரப் பெரும்பான்மையோர் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யுமிடத்தில் தேவைக்கேற்ற சாமை, கேழ்வரகு, கோதுமை இவைகளைப் பயிர் செய்து ஜீவனம் நடத்தி வருகிறார்கள். இம்மக்களை அவசரச் சட்டத்தின் மூலம் அல்லல்படுத்தியுள்ளது சென்னை அரசு.

"மண்ணரிப்புத் திட்டம்" சட்டம் கொண்டு வந்த நாள் முதல் இன்று வரை மக்களுக்கு விரிவாகத் தெரிவிக்கவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன் இச்சட்டம் தனி பட்டாதாரர்களுக்கு மட்டும் சலுகை கொடுத்தார்கள். மற்றக் கூட்டு நிலங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. நீலகிரியில் நூற்றுக்கு எழுபத்தைந்து சதம் கூட்டுப் பட்டாதாரர்கள். ஆதலால் குறிப்பிட்ட நிலங்களை மட்டும் செய்தார்கள். மற்ற இடங்களைக் கவனிக்கவில்லை.

ஆனால் இவ்வருடம் ஆறுமாதத்துக்கு முன் சர்க்காரிடமிருந்து சில விவசாயிகளுக்குச் சர்க்கார் அறிக்கை என்னும் நகல் கொடுத்தார்கள். அதன் சாராம்சம்:

"நீர் உம்முடைய பூமியைச் சமம் செய்யாததனால் அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? அறிக்கையைக் கண்டவுடன் விளக்கம் கூற வேண்டும்." சர்க்கார் சுற்றறிக்கை விவசாயிகளுக்குத் திடீரென்று கிடைத்ததனால் ஏதும் செய்யாமல் தவித்துள்ளார்கள்.

உணவு தானியம் பற்றாக்குறை மாவட்டமாகிய நீலகிரி வாழும் மக்களின் ஜீவாதாரம் கார்போக உருளைக்கிழங்கு, சாமை, ராகி இவைகளே. மேலும் வருஷத்தில் சுமார் ஆறுமாத காலத்துக்கு அவைகளையே நம்பி வாழ்கின்றனர். தொழில் வளர்ச்சி இல்லாத நீலகிரியில் இப்புதிய சட்டத்தினால் உணவு தானியம் நின்று விட்டால் பட்டினியும், பஞ்சமும் தலைவிரித்தாடும். அறிக்கை வருவதற்கு முன் தானிய வகைகளும் கிழங்கும் சாகுபடி ஆகிவிட்டன. சிலர் விளக்கம் கூறினார்கள். சிலர் விளக்கம் கூறவில்லை. யாது கூறினும் சாகுபடி செய்த இடத்தை என்னதான் செய்ய இயலும்? அரசாங்கம் அறிக்கை தந்த ஆறு மாதங்களுக்குப் பிறகு தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் கடுமையாகத் தண்டனை வாங்கிக் கொடுத்துள்ளார்கள்.

நீலகிரி
11-12-58 ஜே. ராமண்ணா
காரியதரிசி, விவசாய சங்கம்.

## ஆரம்ப ஆசிரியர் பென்ஷன் திட்டம்

ஓய்வுபெறும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு 1-4-55 முதல் பென்ஷன் கிடைக்கும் என உத்தரவாகி அதன்படி ஓய்வுபெற்ற பலர் விண்ணப்பங்கள் ஜில்லா கல்வி அதிகாரிகள்மூலம் சென்னை அக்கௌண்டெண்ட் ஆபீசுக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இதுவரை 55-வது வயதில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரும் பென்ஷன் பணம் பெற்றதாகத் தெரியவில்லை.

இது விஷயமாய்ச் சட்டசபைகளில் "தாமதமின்றி உடனுக்குடன் பென்ஷன் உத்தரவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்று கூறி வருகிறார்கள். ஆனால் பலன் ஒன்றும் காணோம்.

மோசிப்பாளையம்
10—12—58 பு. சிவராம சாஸ்திரி

# படித்துப் பாருங்கள்

## முத்துக் குவியல்

இந்தத் தொகுதியிலிருக்கும் முதல் கதை "அனில்" முதல்தரமான கதை. நிகழ்ச்சிக் கோணங்களைக் கொண்டு கதை புனைவது அவ்வளவு சிரமமான காரியமல்ல. ஆனால் மனித உள்ளங்களில் எழும் எண்ணங்களை வைத்துக் கொண்டு கதை புனைவது ஓர் அரிய கலை. கதையை முழுவதும் கூறாமல் உள்ளப் போராட்டத்தை மாத்திரம் உருவாக்கி விட்டுக் கதை தானே உருவாகும்படி செய்திருப்பது பாராட்டுக்குரியது.

"சலனம்" என்ற கதை பழையதானாலும் புது மெருகுடன் பிரகாசிக்கிறது. கதைக்குப் புது விதத் திருப்பம் கொடுத்திருப்பது நன்றாயிருக்கிறது. "புத்தகத் திருடன்" என்னும் கதை ஓர் உணர்ச்சிக் குவியல். "அஞ்ஞானம் விட்டது" என்ற கதையில் பல உள்ளங்களில் ஓடும் பலவித எண்ணங்களை ஆசிரியர் நன்கு எடுத்துக் காட்டுகிறார். அதில் வரும் அனந்தராம அய்யர் ஒரு சிறந்த கதா பாத்திரம். "லட்சியச் சிதைவு" ஒரு நல்ல கதை.

விதம் விதமான பாவங்களையும், உள்ளப் போராட்டங்களையும் கொண்ட பல முத்து முத்தான சிறுகதைகள் அடங்கியிருக்கும் இத்தொகுதிக்கு 'முத்துக் குவியல்' என்ற பெயர் மிகவும் பொருத்தமானது.

எழுதியவர்: "விஜயஸ்ரீ", பிரசுரம்: இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட், 14, சுங்குராம செட்டித் தெரு, சென்னை: விலை: ரூ. 2-00.

## வீர வனிதை

காதலுக்கும் கடமைக்கும் இடையே நிகழும் போரைப் புறப்படலமாகக் கொண்டு பல கதைகள் வெளிவந்திருக்கின்றன. இந்திய சுதந்திரப் போரை நிலைக்களனாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள 'வீர வனிதை' என்னும் கதையும் காதலுக்கும் கடமைக்கும் இடையே நிகழும் போரைச் சித்திரிப்பதாகவே அமைந்திருக்கிறது. ஆயினும் அனசூயா என்னும் பெண், தாந்தியாதோபேயின் சாதுர்யமான கடிதத்தின் மூலம் எப்படிக் கடமையிலே கருத்தைச் செலுத்துகிறாள், தன் உயிரைப் பலி கொடுத்து 'வீர வனிதை' யாகி வீரர்களுக்கு உணர்ச்சிப் பெருக்கை ஊட்டுகிறாள் என்னும் கருத்து அழகுபடச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

'கல்பனா', 'ஜிகினா ரவிக்கை' முதலிய கதைகள் பெண் உள்ளத்தின் பண்பைப் பாங்காகச் சித்திரிக்கின்றன. தையற்கலையில் சிறந்து விளங்கிய ஜோதபாய் மன்னர் அனசாஜியின் மனத்தில் இடம் பெற்ற விதம் அவனது காதல் ஈடேறுமற் போன காரியம் ஆகியவை உள்ளத்தை உருக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

'பிரதிபா' என்னும் சரித்திரத்தைப் பின்னணியாகக் கொண்ட கதையில் ஹைதரின் உன்னத நோக்கமும், உயர்ந்த பண்பும் நல்ல முறையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமதி கு.ப. சேதுஅம்மாள் எழுதியுள்ள இந்தக் கதைத் தொகுதியில் ஏழு கதைகள் அடங்கியுள்ளன.

பிரசுரம்: மின்னொளி பதிப்பகம், 29, சின்னத்தம்பித் தெரு, சென்னை—1: விலை: ரூ. 1-25.

## வைதிக தர்மவர்த்தனீ

தர்மப் பிரசாரம் செய்து தர்மத்தை வளர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் நடந்து வரும் இந்த மாதாந்திர சஞ்சிகை பன்னிரண்டாண்டுகள் முடிந்து பதின்மூன்றாம் ஆண்டில் பிரவேசித்திருக்கிறது. சஞ்சிகை சிறியது—பக்கத்தையும் அளவையும் கொண்டு பார்த்தால். ஆனால் அடங்கியுள்ள விஷயம் பெரியது. புராணத் தத்துவங்களை விளக்குவதுடன், உபயோகப்படக்கூடிய ஆயுர்வேதம், சங்கீதம் போன்ற பல புது அம்சங்களும் இப்போது சேர்க்கப்பட்டுள்ளன. ஆஸ்திகர்கள் அனைவராலும் ஆதரவளித்துக் காப்பாற்றப்பட வேண்டிய சஞ்சிகை என்பது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி "நிறுத்தாதே, தொடர்ந்து நடத்து" என்று கட்டளையிட்டிருப்பதிலிருந்து தெரிய வரும். ஆசிரியர் ஸ்ரீவத்ஸ வே. சோமதேவ சர்மாவின் தளராத ஊக்கம் மேன்மேலும் வளரட்டும்.

தனிப் பிரதி அணா 7; வருட சந்தா ரூ. 5; காரியாலயம்: கடவாசல், வடகால் அஞ்சல், சீர்காழி வழி, தஞ்சை ஜில்லா.

## தேன்மொழிகள்

தேன் நாக்குக்கு மட்டுந்தான் இனிக்கும். இப் புத்தகத்தில் பொதிந்துள்ள விஷயங்களோ அமிருதம் போன்றவை. படிக்கத் தெவிட்டாதவை, சிந்தனையைத் தூய்மைப் படுத்துபவை. ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் பக்தர்களுடன் சம்பாஷித்துக் கொண்டே அரிய உபதேசங்களையும் தர்ம சூக்ஷ்மங்களையும், வாழ்க்கை விதிகளையும், தத்துவ ரகசியங்களையும் பொழிந்துஅருளியிருக்கிறார். பல சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த சம்பாஷணைகளிலிருந்து ருசிகரமாகவுள்ள பல அம்சங்களைத் திரட்டித் தொகுத்து ஆங்கிலத்தில் 1935 ஆம் ஆண்டில் திரு ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் "From the Master's Lips" என்ற தலைப்புடன் வெளியிட்டார். இதே விஷயம் பின்னர் குரு-

சிஷ்ய ஸம்வாதரூபமாக 1956-ஆம் ஆண்டில் "Dialogues with the Guru" என்ற பெயரில் பிரசுரிக்கப்பட்டது. இப்போது இது தமிழில் "தேன்மொழிகள்" என்று வெளி வருகிறது.

பன்னிரண்டு அத்தியாயங்களாகப் பிரசுரிக்கப்பட்ட இந்தப் புத்தகத்தில் சுமார் 40 தனி விஷயங்கள் பற்றி ஆசார்யாளுடைய கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஹிந்து மதம், கடவுளின் உபயோகம், ஸத்யோபாசனை, உண்மை பக்தி, அத்வைதம் போன்ற சமய சம்பந்தமான விஷயங்களைத் தவிர, நவீன வித்தியாப்யாசம், விவாகச் சீர்திருத்தம், மதப் பிரசாரம், மத விஷயத்தில் நடுநிலைமை வகித்தல் முதலிய சமூக விவகாரங்களைப் பற்றியும் பல அரிய விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன. குரு சிஷ்ய சம்வாத ரூபமாக அமைந்துள்ள இந்தப் புத்தகம் கிரேக்க ஞானி ஸோக்ரதர் தம் சிஷ்யர்களுடன் நிகழ்த்திய சம்பாஷணையை ஞாபகப் படுத்துகிறது. சாதாரண மக்களுக்கு ஆஸ்திகர்கள் நாஸ்திகர்கள் இரு பாலாருக்குமே பயன்படக்கூடியது இப் புத்தகம்.

தொகுத்தவர்: திருநெல்வேலி ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர், பிரசுரித்தோர் ஸ்ரீவாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம். விலை: ரூ. மூன்று.

# மாம்பலத்தில் ஓர் மகான்

சென்ற சில நாட்களாக மாம்பலத்தில் சிவ விஷ்ணு ஆலயத்தில் திரள் திரளாகக் கூட்டம். அப்படி என்ன விசேஷம் அங்கே? பெரிய பண்டிதர் யாராவது தம் கல்வியின் வல்லமையைக் காண்பிக்கின்றாரா? இன்னிசையில் மாந்தரை மயக்கும் கானம் நடைபெறுகிறதா? இல்லை, புராணத்தைச் சிங்கம்போல் கர்ஜனை செய்கின்றனரா? என்னவென்று தெரிந்து கொள்ளவாவது நாமும் சென்று வருவோம்.

ஆலயத்துக்குப் பின் பாகத்தில் ஒரு பெரிய கொட்டகை. அதற்குப் பக்கத்தில் குத்துவிளக்கு, கண்ணன் விக்கிரகம், புஷ்ப அலங்காரம், சுவரில் அவதாரப் படங்கள், விளக்கைச் சுற்றி ஒருவர் தம்புராச் சுருதியுடன் "ஹரே ராம ஹரேராம, ராம ராம ஹரே ஹரே, ஹரேகிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண, கிருஷ்ண ஹரே ஹரே" என்று சொல்லிக் கொண்டு வலம் வருகிறார். அவருடன் வந்தவர்களும் சுற்றுகின்றனர். அல்லும் பகலும் ஓயாமல், ஒருவர் மாறி ஒருவர் இந்த அகண்ட நாம பாராயணம் செய்து வருகிறார்கள். இவ்வாறு மூன்று வாரமாகப் பக்தி உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த வைபவம் யாருடைய தலைமையின் கீழ் நடைபெறுகிறது? ஸ்ரீ சுவாமி அபேதாநந்தர் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர். ஜயதேவர், சைதன்யர், ராமதாஸ், துக்காராம் முதலிய தொண்டரோடு எண்ணப்பட வேண்டியவர்.

மனம் கசிந்து, கண்ணீர் மல்கி மெய் சிலிர்த்துப் பரவசமாய்ப் பாடுகிறார். கூடவே திரளாக வந்து வீற்றிருக்கும் ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் பாடுகின்றனர். ஆண்டவனின் நாமங்களைத் தவிர வேறு பாட்டு இல்லை. அதைச் சொல்வதில்தான் எத்தனை விதம்? தெவிட்டாத திருநாமங்களைப் பாடுவதில் சென்னைவாசிகளுக்கு இவ்வளவு ஊக்கமும் பக்தியும் பொங்கி நிற்கின்றன என்றால் யாராவது நம்புவார்களா? ஆனால் அதுவே உண்மை.

படிப்பினால் "நான்" என்ற வேகம் குன்றாது. சர்ச்சையினால் பாபங்கள் அகல மாட்டா. தன்னை மறந்து பரமனின் பேர்களைப் பாடுவதுதான் பக்திக்கு இன்றியமையாத கருவி என்பதை சுவாமிகள் தம் செயலால் காண்பித்து மற்றவரையும் செய்யும்படி செய்கிறார்.

ஆங்காங்கு கதை சொல்கிறார். பக்தர்களின் வரலாற்றை வர்ணிக்கிறார். மீராவின் வாக்கும், பட்டினத்தார் பாடலும், இதையும் அவர் பேச்சில் பொன்னில் இழைத்த கல்லென ஒளி வீசுகின்றன.



ஸ்ரீ அபேதானந்த சுவாமிகள்

சில நாட்களுக்கு முன் சுவாமிகள் திருவனந்தபுரத்தில் ஒரு கோடி அர்ச்சனை செய்வதாகத் தெரிவித்தார்கள். அப்பொழுது சில நண்பர்கள் "அந்தப் பாக்கியம் எங்களுக்கு வேண்டும். அர்ச்சனையைச் சென்னையிலேயே வைத்துக் கொள்ளுங்கள்" என்று அவரை வேண்டிக் கொண்டனர். புது வருஷம், ஜனவரி 12, 13, 14-ம் தேதிகளில் விசேஷ முறையில் அர்ச்சனை நடைபெறும்.

இம்மாபெரும் முயற்சியை நன்றாக நடத்துவது பொது மக்களின் பொறுப்பு. நகருக்கே அது பெரும் கௌரவம்.


அழகு எழிலோங்க
"'ஹாஸலின்' ஸ்னோ" தினமும் உபயோகித்
தீர்களானால், உங்களுடைய சருமம் மிருதுவாகவும்
மழமழப்பாகவும், அழகாகவும் விளங்குகிறது.
சருமத்தினுள்ளே ஊடுருவிச் செல்லும் அதன்
சக்தி, சருமத்திற்கு கெடுதி வராமல் தடுப்பது
மல்லாமல் பவுடர் தடவிக்கொள்ள சிறந்த
ஆதாரமாகவும் உபயோகிக்கப்படுகிறது.
ஏமாற்றம் செய்யமுடியாத அதன் பாக்கிங்
இதனுடைய தூய்மையை உறுதியாக்குகிறது.
"'HAZELINE' SNOW"
"'ஹாஸெலின்' ஸ்னோ"
டிரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு
BWY-5


மேலும் மலிவானது!
குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்
PROTEX All Purpose TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லட் பவுடர்
ஜயன்ட்சைஸ் அழகிய டப்புடன் கிடைக்கும்!


பித்தளை மற்றும் தாமிர சாமான்களை பாலிஷ் செய்ய பிராஸோவிற்கு நிகர் ஒன்றுமில்லை. பிராஸோ சுத்தம் செய்வதுடன் பளபளப்பாகவும் செய்கிறது — அதுவும் விரைவாக, எளிதாக, மிருதுவாக.
“பிராஸோ கொண்டு பாலிஷ் செய்வதற்கு முன்னால், பித்தளை இவ்வளவு பளபளப்பாக இருக்கும் என்று எனக்குத் தெரியாது”
BRASSO
திரவம் அல்லது பசை
பிராஸோ
மெட்டல் பாலிஷ்
உங்கள் வீட்டிற்குப் பிரகாசத்தைக் கொண்டுவருகிறது
அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது)

# இப்படியும் நடந்து விட்டால்!

கோமதி சுப்பிரமணியம்

‘ஒத்தையா, இரட்டையா?’ விளையாடும் குழந்தையின் உள்ளத்தைப் போல் பதில் சொல்ல முடியாமல் தவித்தார் காந்திமதிநாதம் பிள்ளை. எதிரே இருந்தன இரண்டு ஜாதகங்கள்.

ஒன்று மாதம் இருநூறு ரூபாய் சம்பாதிக்கும் பெரிய இடத்துப் பிள்ளை. மற்றொன்று நாற்பது ரூபாய் சம்பாதிக்கும் பள்ளிக்கூட உபாத்தியாயர்.

பத்தாயிரம் ரூபாய் ரொக்கம் உண்டானால் பெரிய இடத்துப் பிள்ளையை நெருங்கலாம்.

கையிலிருக்கும் பணத்தைக் கொண்டு உபாத்தியாயரைச் சுலபமாய் மணம் முடித்து விடலாம்.

கண்ணுக்குக் கண்ணான மகள் பெரிய இடத்தில் வாழ விரும்பிய பெற்றவனின் மனம் அதைத்தான் நாடியது. கடன் வாங்கியாவது காரியத்தை முடித்துவிட்டால் பின்னர் அவர் உயிருள்ளவரையில் முயன்று கடனை அடைத்து விடுவார். ஆனால் கடன் கொடுப்பார் யார்?

இந்தக் கேள்விதான் கண் முன்னால் விரிந்து நின்றது.

எதிரே எழும்பி நிற்கும் நீண்ட மதில் சுவரைத் தாண்டி விட்டால் அப்பால் ஓடுவது பாலாறுதான். ஆசைதீர அள்ளி அள்ளிப் பருகலாம். ஆனால் அந்த மதிலைத் தாண்டும் சக்தி தான் அவருக்கு இல்லையே!

மீண்டும் அவரது கண்கள் இரண்டு ஜாதகங்களையும் ஆராய்ந்தன. பத்துப் பதினைந்து ஜாதகங்கள் அலசிப் பொறுக்கியதில் பொருத்தம் நிறைந்தவை அந்த இரண்டும்தான்.

எதைத் தள்ளுவது? எதைக் கொள்வது? அரைகுறையாய் நரைத்திருந்த தம் தலையை ஒரு தடவை தடவி விட்டுக் கொண்டார் காந்திமதிநாதம். ஒரு வேளை அப்போதுதான் யோசனைகள் பிறக்குமோ, என்னவோ!

அவருக்கு யோசனை பிறந்ததோ இல்லையோ, அவர் மனைவி செல்லத்துக்கு யோசனை பிறந்தது.

அவள் கேட்டாள்:

"பணம், பணம் என்று ஏன் இப்படிக் குமைகிறீர்கள்? உங்கள் அண்ணாவைக் கேட்பதுதானே!"

இந்த யோசனை அவருக்கும் தோன்றாமலில்லை. ஆனால், ‘அவரிடம் எப்படிக் கேட்பது?’ என்றுதான் அந்த யோசனையைக் கைவிட்டிருந்தார்.

இப்பொழுது செல்லத்தின் தூண்டுதலால் மீண்டும் அந் நினைவு வேர்விட்டது.



"சொல்லப் போனால் உங்களுக்கும் அவர் சொத்தில் பங்கு உண்டு. உங்கள் அண்ணா இப்பொழுது அமோகமாக நடத்துகிறாரே வியாபாரம், அதற்கு ‘முதல்’ போட்டுத் துவக்கி வைத்தவர் அவருக்கு மட்டும்தான் தாத்தாவா? உங்களுக்கும் தாத்தா இல்லையா?"

கேள்வி நியாயமானதுதான். ஆனால் பலன்தான் எப்படியோ...?

மனைவி தொடுத்த கேள்வியைக் கொண்டே மனம் இதுவரையில் கடந்து


சென்ற காலப் பாதையைத் தேடிக் கொண்டு வெகு வேகமாக ஓடியது.

காந்திமதிநாதனின் தந்தை இறந்த போது, நாதத்தின் வயது மூன்று. அவர் அண்ணன் சொக்கலிங்கத்தின் வயது ஐந்து. நல்ல வேளையாக அவர்கள் தாயார் அமிர்தம் சற்றுச் செல்வாக்கான குடும்பத்தில் பிறந்திருந்தாள். சின்ன வயதில் கைம்மைக் கோலம் பூண்டாலும் அவளுக்கும், அவள் குழந்தைகள் இரண்டுக்கும் வயிறு வாடாமல் காத்துக் கொள்வதற்கு அமிர்தத்தின் தந்தை இருந்தார்.

சொக்குவுக்குச் சின்னஞ் சிறு வயதிலிருந்தே தாத்தாவின் பலசரக்குக் கடையில் ஒரு கண். அவரும் சொக்குவை நம்பிக் கல்லாப் பெட்டியில் உட்கார வைத்து விட்டு வெளியே எங்கேயாவது போய் விடுவார். அத்தனை பொறுப்புள்ள பிள்ளை அவன்.

சொக்குவின் கவனமெல்லாம் வியாபாரத்தில் புகுந்து விட்டதால் படிப்பு அப்படிக் கப்படித்தான் இருந்தது.

இளையவன் காந்திமதி இதற்கு நேர் எதிர். அவருக்கு வியாபாரம் என்றால் என்ன வென்பதே தெரியாது. அத்தனைக்கத்தனை அவர் படிப்பில் குடிகை.



மனப்போக்கை அனுசரித்து வளர்க்க விரும்பிய பாட்டனார் சொக்குவின் படிப்பை எட்டாவது வகுப்போடு திறுத்தி விட்டுத் தம்முடன் வியாபாரத்தில் சேர்த்துக் கொண்டார்.

நாதம் படித்தார். படித்துப் பட்டமும் பெற்றார். நூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் உத்தியோகமும் கிடைத்தது. ஆரம்பத்தில் அதுவே அவருக்குப் பெரிய தொகையாகத் தோன்றியது.

கல்யாணமாகிக் குழந்தைகள் பிறக்கத் தொடங்கியபோது பற்றுக்குறை விழுந்தது. பெண் கல்யாணத்துக்கு நின்ற போதுதான் உத்தியோகத்தை நம்பிய தம் தவறை நினைத்து வருந்தினார்.

பாட்டனாரோடு வியாபாரத்தில் புகுந்த சொக்கலிங்கம் அவர் இறந்த பின்பும் தொடர்ந்து வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டார். அவரது திறமையோ, அல்லது அதிர்ஷ்டமோ இன்று அந்த நகரத்துக்கே பெரும் புள்ளியாகி விட்டார்.

தாம் படிக்காத குறையைப் பிள்ளையைப் படிக்க வைப்பதில் தீர்த்துக் கொண்டார் சொக்கலிங்கம். அவர் மகன் சந்திரசேகரன் ஐ. ஏ. எஸ். பாஸ் செய்து வடக்கே கலெக்டர் பதவி வகிக்கிறான். மகனின் பெருமையைப் பேசிப் பேசிப் புகழ்வதே அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அந்த ஒரே மகனுக்குச் செல்வம் சேகரிப்ப தொன்றே சொக்கலிங்கத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

தாயார் அமிர்தம்மாள் உயிரோடு இருந்த வரையில் ஏதோ அண்ணன் தம்பி உறவு ஒப்பாக நெருங்கியிருந்தது. பெற்றவள் மறைவுக்குப் பின் நெருங்கிய உறவென்பதில்லை. எப்பொழுதாவது சந்தித்துக் கொள்வார்கள். இருவருக்குள்ளும் சண்டை யென்பதுமில்லை. கண்ட நேரம்மட்டும் அன்பு. காணு விட்டால் அவரவர் நலன் அவரவர் என்ற மட்டிலேயே வாழ்ந்து விட்டார்கள்.

'இந்த நிலையிலுள்ள அண்ணனைக் கண்டு பணம் கேட்பதா! கேட்டால் கொடுப்பாரா?...' என்று மிகவும் தயங்கியது காந்திமதி நாதம் பிள்ளையின் மனம்.

கணவனின் பார்வையிலே குழப்பத்தைக் கண்ட செல்லம் மேலும் பல சப்பைக் கட்டுக்கள் கட்டிக் கணவனை அவர் அண்ணன் சொக்குவின் வீட்டுக்குச் சென்று வரும்படி ஏவினாள்.

* * *

நாலடுக்கு மாடி வீட்டின் முன்னே கால் நடையாக வந்து சேர்ந்தார் காந்திமதி நாதம். அந்நிலையில் வேறு யாராவது வந்திருந்தால் கூர்க்காவின் வழிமறிப்புக்குப் பயந்து வீடு திரும்பியிருக்க வேண்டும். காந்திமதிநாதம் தன் முதலாளியின் தம்பி என்பது அந்தக் காவலாளிக்குத் தெரியுமாதலால் அவருக்கு வழிவிட்டு விலகி நின்றான்.

விடுவிடென்று உள்ளே போகாமல் பார்வையாளர்கள் தங்கும் அறையில் பத்துப் பேரோடு பதினோராவது நபராக வந்து அமர்ந்தார் காந்திமதிநாதம்.

சலவைக்கல் மாளிகையிலே ரத்தினக் கம்பளம் கீழே விரிபட, அலங்காரப் பொருள்கள் நிறைந்த அந்த ஹாலிலே உயர்தரமான சோபா ஒன்றின்மீது அமர்ந்து சுற்றிலும் ஒருமுறை கண்ணோட்டம் விட்டார் காந்திமதிநாதம்.

அண்ணனின் பார்வையாளராக வந்திருந்த எல்லோருமே அநேகமாகப் பெரும் பதவிக்காரர்களாகவே காணப்

பட்டார்கள். அவர்கள் பேசிக்கொண்ட 'உடைந்த' ஆங்கிலத்தைக் கண்டு பட்டதாரியான நாதத்துக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

நல்லவேளையாக வெகுநேரம் அவர்கள் பேச்சைச் சகிக்கும் தொல்லையில்லாமல் வேலைக்காரன் வந்து அழைத்தான்.

"ஐயா அழைத்து வரச் சொன்னார்" என்று அவரை அழைக்கவே, கர்வத்துடன் எழுந்தார் காந்திமதிநாதம். அத்தனை பேருக்கும் கிடைக்காத சலுகை தமக்குக் கிடைத்து விட்டதிலுள்ள பெருமையை அதிக நேரம் சுவைக்க முடியவில்லை. கூடியிருந்தவர்களின் பார்வையிலுள்ள ஏளனம், அவர்கள் ஒருவருக்கொருவர் நயன பாஷையில் பரிமாறிக் கொண்ட நையாண்டி...இவற்றையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தவில்லை காந்திமதிநாதம்.

அண்ணனின் அறைக்குச் சென்ற போது அங்கே அண்ணன் மட்டுமில்லை; அண்ணியும் காத்திருந்தாள்.

"என்னப்பா இது, நாதன்! எல்லோருக்கும் நடுவே நீயும் போய் உட்கார்ந்து கொள்வதா? வந்தவன் விடுவிடென்று என் அறைக்கு வரவேண்டாமோ...?" என்று கேட்டார் சொக்கலிங்கம்.



காந்திமதிநாதத்தின் மனம் பின்னியது. ஒருவேளை உயர்ந்தோர்கள் முன்னே இப்படி அநாகரிகமாக ஏழைமையில் நின்றதனால், அண்ணன் தன் கௌரவம் குறைந்து விட்டதாக நினைக்கிறாரா? அல்லது உள்ளன்போடு உடன்பிறந்த உரிமையோடு தான் அப்படிச் சொன்னாரா என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறினார்.

அவர் எண்ணம் முடிவடைவதற்குள் டிபன் தட்டோடு வேலைக்காரன் அறைக்குள் நுழைந்தான்.

"முதலில் அவர் டிபன் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் இருவரும் சாவகாசமாகப் பேசிக் கொண்டிருக்கலாம்" என்று சொன்ன அண்ணி எழுந்து பரிமாறத் தலைப்பட்டாள்.

சுவை நிறைந்த பலகாரத்தை அண்ணனும் அண்ணியும் அன்போடு குழைத்து உண்ண வைத்தனர். நாதத்தின் வயிறும் மனமும் நிறைந்தன.

"வந்த விஷயம் மிகவும் முக்கியமானது, அண்ணா! குழந்தை உமாவின் கல்யாணம் உன் கையில்தானிருக்கிறது!"

இதைக் கேட்டதும் ஏனோ மலர்ந்த அவரது வதனம் சிறிது சிறிதாகச் சுருங்க ஆரம்பித்தது. தம்முடைய நிலையை விளக்கமாக எடுத்துச் சொல்லி விட்டு, அண்ணனின் தயவை வேண்டி நின்றார் காந்திமதிநாதம்.

"கொடுக்க வேண்டியதுதான். நீ கேட்பது ஒரு நல்ல காரியத்துக்குத்தான்" என்று இழுத்தாற்போல் கூறி மோவாயைத் தடவி விட்டுக் கொண்டார் சொக்கலிங்கம்.

காந்திமதி நாதத்தின் மனத்திலே நம்பிக்கை பிறந்தது.

"எல்லாம் உங்கள் தயவுதான், அண்ணா! எனக்கு நீங்கள் இல்லாமல் வேறு யார்?" பரிதாபமாக அண்ணனின் முகத்தை உற்று நோக்கினார்.

"வருத்தப்பட்டுக் கொள்ளாதே, தம்பி! நிலைமை நெருக்கடியான சமயம். கல்கத்தாவில் புதிய பிராஞ்சு தொடங்கப் போவது பற்றி உனக்குத் தெரிந்திருக்காது. அதற்காக ஒதுக்கி வைத்த பணம் ஐம்பதினாயிரம் என்கையில்தானிருக்கிறது. ஆனால் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன்!"

"அப்படிச் சொல்லாதீர்கள், அண்ணா! குழந்தையின் நல்வாழ்வு உங்கள்கையில் அண்ணா!"

"அவரவர்கள் கஷ்டம் அவரவர்களுக்கு!" என்று அண்ணன் இதைச் சொன்னதும் நாதத்தின் மனத்தில் சூடேறியது.

"உங்களை ஒன்றும் யாசகம் கேட்கவில்லை, அண்ணா! தாத்தா விட்டுச் சென்ற ரூபாய் பத்தாயிரத்தில் என் பங்கு ஐயாயிரம் உண்டல்லவா?"

"பங்கு கேட்கவரும் பெரிய மனுஷன் உழைப்பிலும் பங்கு பெற வேண்டுமல்லவா? தம்பி! இன்று நீ கேட்பதால் சொல்லுகிறேன். உன் தாத்தா வைத்திருந்த 'முதல்' அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே அழிந்து விட்டது. நான் உழைத்து அந்த நஷ்டத்தை ஈடு செய்து தாத்தாவின் கௌரவத்தைக் காப்பாற்றினேன். உன் தாத்தாவின் பணமாக இருந்தால் அவராகவே உனக்குப் பங்கு எழுதி வைத்திருக்க மாட்டாரா?"

நாதத்தால் மேலே பேச முடியவில்லை. நயந்தும் பயந்தும் பணம் பெற முடியாது வெறுங்கையுடன் திரும்பினார்.

காந்திமதிநாதத்தின் வாதத்தைச் செல்லம் ஏற்கத் தயாராக இல்லை.

"உங்கள் அன்று ஜோடித்த சப்பைக் கட்டுகளை நம்பிக் கலவரமாய் வந்து விட்டீர்களே? அவர் உங்களிடம் சொன்னதைக் கோர்ட்டில் வந்து பேசட்டுமே. சொல்லி விட்டு வருவதுதானே?"

"உலகம் தெரியாதவள் செல்லம் நீ! கோர்ட்டுக்குச் செலவிடும் பணம் இருந்தால் என் செல்வக் குழந்தையின் கல்யாணத்தைச் சிறப்பாகச் செய்து பார்த்து விடலாமே?" என்றார் நாதம்.

காந்திமதி நாதத்தின் பெரும் முயற்சிக்கும் விவாதத்துக்கும் பின்னர் செல்லமும் அவர் முடிவை ஒப்புக் கொண்டாள்.

பெண்ணின் தலையெழுத்து அவ்வளவுதான் என்று விதியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு வாத்தியார் பையனுக்கே சம்மதம் தெரிவித்துக் கடிதம் எழுதி விட்டார் காந்திமதி நாதம் பிள்ளை.

மணம் ஒவ்வாத கல்யாணந்தான். அதற்காகச் செய்ய வேண்டிய வேலைகள் பாக்கி நிற்குமா? ஓடியாடித் திரிந்து கொண்டிருந்த சமயம் அண்ணன் வீட்டிலிருந்து ஆள் வந்தது.

'சேகர் ஐ. ஏ. எஸ் இறந்து விட்டதாகத் தந்தி வந்திருக்கிறது' என்ற செய்தியைக் கேட்டு அலறித் துடித்தார் காந்திமதி நாதம். பொங்கும் துயரத்துடன் அண்ணன் வீட்டை நோக்கி ஓடினார். அரை உயிரால் மயங்கிக் கிடந்த அண்ணனைக் கட்டிக் கொண்டு கதறினார். தம்பியைக் கண்டதும் குமுறிப் பெருகிய துக்கம் மடை இறந்த வெள்ளமாய்ப் பாய்ந்தது. "அடா, என் தம்பி!...சேகர் என் தலையிலே நெருப்பை அள்ளிக் கொட்டி விட்டானடா...நான் பாவி... மகாபாவி... சேகர் வேறு உமா வேறு என்று நினைத்த என் பாவத்துக்குத்தான் பகவான் இந்தத் தண்டனையைக் கொடுத்து விட்டார்."

நாதத்தின் நெஞ்சம் எரிமலையாய்க் குமுறியது. "அதையெல்லாம் பேச இதுதானா, அண்ணா சமயம்? காரை எடுக்கச் சொல்லுங்கள். நம் செல்வனின் சடலத்தையாவது எடுத்து வந்து விடலாம்...." என்று துடித்தார்.

"நீ என்ன செய்வாயோ, இனி எல்லாமே நீதான். பகவான் எனக்குச் சரியான பாடம் கற்பித்தாரடா...கற்பித்தார்.." என்று அலறினார் சொக்கலிங்கம்.

மகன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதுமே மயங்கி விழுந்த அண்ணிக்குச் சிகிச்சை செய்ய டாக்டருக்கு போன் செய்து, பின்னர் சீக்கிரம் கார் எடுக்கும்படி டிரைவருக்குச் சொன்னார் நாதம்.

**வா**சலில் கார் வந்து நின்றது. டிரைவர்தான் காரைக் கொண்டு வந்திருப்பான் என்று அண்ணனை அழைத்துவர வீட்டினுள் திரும்பியபோது, 'சித்தப்பா!' என்ற பழக்கப்பட்ட குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார். சிரித்த முகத்துடன் காரிலிருந்து இறங்கினான் சேகர்.

செத்தவன் உயிரோடு திரும்பிய அதிசயத்தைக் காணச் சுற்றுக்கெல்லாம் கூட்டம் கூடிவிட்டது.

"படுபாவி....உன்னுடைய விரோதி யாரோ இப்படிப் பொய்யாகத் தந்தி கொடுத்து விட்டான்....அதனால் ஏற்பட்ட குழப்பம்தான் இதெல்லாம்..." என்றார் காந்திமதிநாதம்.

"நானேதான் அப்படித் தந்தி கொடுத்தேன்" என்று சேகர் கூறியதும் பல குரல்கள் ஆச்சரியத்தால் எழுந்தன.

"என்ன சேகர் இது. விளையாட்டுக்கும் ஒரு எல்லை இல்லையா?" என்று அம்மா கடிந்து கொண்டாள்.

"நான் விளையாடவில்லை, அம்மா! வாழ்வின் அநித்தியத்தை அப்பாவின் மனம் உணரவேண்டு மென்பதற்காகத் தான் அப்படித் தந்தி கொடுத்தேன். தன் குழந்தை வேறு, தம்பி குழந்தை வேறு என்று அப்பா பிரித்துக் காட்டினார்களே! என் வாழ்வு ஒன்றே அவர்கள் லட்சியம் என்று நடந்து கொண்டார்களே! 'இப்படி நடந்து விட்டால்?..' அப்பா சேர்த்து வைக்கும் பணம் யாருக்குச் சேர வேண்டும்?' என்ற உரிமையைச் சுட்டிக் காட்டவே அப்படியொரு பொய்த் தந்தியைக் கொடுத்தேன்."

அனைவரும் ஆச்சரியத்தால் அதிசயித்து நின்றனர். சொக்கலிங்கம் தம் தவறை உணர்ந்து தம்பியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

"காந்திமதிநாதம்! நீ பார்த்து முடிவு செய்து வைத்திருக்கும் பெரிய இடத்துப் பிள்ளையையே முடித்து விடலாம். இனி உமா என் குழந்தை. அவள் வேறு, சேகர் வேறு என்ற எண்ணம் என்னிடமிருந்து மறைந்துவிட்டது...."

"என் தங்கை உமாவுக்குப் பணத்தை மட்டும் குறியாகப் பேசும் அந்தப் பெரிய இடம் வேண்டாம், அப்பா! நம்முடைய காரியதரிசி சுந்தரராஜனுக்கே உமாவை முடித்து விடலாம். அவர்தாம் இங்கு நடந்த விவரங்களை யெல்லாம் அவ்வப்போது எனக்கு எழுதி உமாவுக்கு ஏதாவது உதவி செய்யும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். அவரைப் பற்றி உங்களுக்கு நான் சொல்ல வேண்டிய தில்லை" என்று கூறிக்கொண்டிருக்கும் போதே காரியதரிசி சுந்தரராஜன் மெல்ல அவ்விடம் விட்டு நழுவினார்.

உமா-சுந்தரராஜன் திருமணம் கலெக்டர் சேகரின் முன்னிலையில் சிறப்பாக நடந்ததென்பதைச் சொல்லவேண்டுமா?

அன்று ஸோமேஷ் கம்பீரமே உருவாகக் காட்சி அளித்தான். மற்ற நாட்களைப் போல் அவன் முகத்தில் குறுகுறுப்பையோ, இள நகையையோ காணோம். அருகில் சென்றவன் வாய் திறவாமல் ஊமையென உட்கார்ந்து விட்டேன். கடைசியில் அங்கே நிலவியிருந்த மௌனத்தை நானே தான் கலைக்கும்படியாயிற்று. "இன்றையப் பத்திரிகையில் ஒரு வேடிக்கையைப் பார்த்தாயா?" என்று கேட்டவாறே பத்திரிகையின் இரண்டாவது பக்கத்தைப் பிரித்து அவன் பக்கம் நீட்டினேன்.


"இது விளம்பரப் பக்கமாயிற்றே! இதில் என்ன வேடிக்கையைக் கண்டாய் நீ?" என்று வேண்டா விருப்பாக என்னைக் கேட்டு வைத்தான் அவன்.

"நீ பார்க்கவில்லை? 'பையனைக்காணோம்!' என்ற தலைப்பின் கீழ் ஏக காலத்தில் ஏழு விளம்பரங்கள் வெளியாகியிருக்கின்றனவே!" என்றேன் நான்.

ஆனால் ஸோமேஷ் 'க்கு அந்தப் பேச்சில் எல்லாம் பிடிமானம் இருப்பதாகத் தோன்றவில்லை. அதற்கேற்றாற்போல் அவன் பேசாமலே சிகரெட்டைப் பற்றவைத்துப் புகைக்கலானான்.

நான் அவனை விடவில்லை. "இந்த விளம்பரங்களைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன? நானென்ன முடிவுக்கு வந்திருக்கிறேன், தெரியுமா? இதையெல்லாம் வேடிக்கை, வெறும் கேலிக்கூத்தான காரியங்கள் என்றே எண்ணுகிறேன். பெரும்பாலும் நடக்கின்ற விஷயங்கள் என்னவென்று நினைக்கிறாய்? பிள்ளையாண்டானுக்குத் தீராத சினிமாப் பைத்தியம் பிடித்திருக்கும். அதனால் இரண்டாவது ஆட்டத்தையும் விடாமல் பார்த்து முடித்து விட்டு இரவு வெகு நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்புவான். அவன் அப்பாவுக்கு அது பிடித்திராது. அவர் உணவு அருந்தும் பொழுது மனைவியிடம், 'இரவு இத்தனை நேரமாகியும் உன் பிள்ளையைக் காணோமே! எங்கே போயிருக்கிறான்?' என்று விசாரிப்பார். கணவரின் வார்த்தைகளுக்குப் பதில் பேசாமல் செவிமடுத்து விட்டுப் பிள்ளையாண்டான் வந்ததும் புத்திமதி கூறுவாள் மனைவி. ஆனால் பிள்ளைக்கு அம்மாவின் வார்த்தைகளில் ஒரு சிரத்தை ஏற்படாது. கடைசியில் ஒரு நாள் குமைந்து கொண்டிருந்த தந்தைக்கு ஆத்திரம் வந்து விடும். 'பார்த்துக் கொண்டேயிரு. உன் பிள்ளை ஒரு நாள் நம் எல்லோரையுமே வெளியே தலைக்காட்ட முடியாமல் அடித்துவிடப் போகிறான். போன வருஷம் பரீக்ஷையில் 'பெயில்' ஆனான்; இந்த வருஷமும் ஆகப் போகிறான். நான் எழுதி வேண்டுமானாலும் தருகிறேன்!' என்று தொடங்குவார்.

"இந்தச் சமயம் பார்த்தா ஊர் சுற்றி விட்டுத் திரும்பவேண்டும் பிள்ளையாண்டான்? அவனைக் கண்டதும் தந்தையின் கோபம் எல்லையைக் கடந்து விடும்.




'எனக்கு வேண்டாம் இம்மாதிரிப் பிள்ளை! போ, போய்விடு. என் கண் முன் நில்லாதே. என் வீட்டுக் குத்துக்கல் ஏறாதே!' என்றெல்லாம் இரையத் தொடங்கிவிடுவார். கடுசொல் தாளாத பிள்ளையாண்டான் வந்தவழியே திரும்பி விடுவான். அதைக் கண்டு அம்மா கதறுவாள், 'டேய் கேளடா, கேட்டு விட்டுப் போடா!' என்று! ஆனால் இளம் ரத்தத் துடிப்பிலே அவமானத்தைச் சகிக்கத் தோன்றாத பிள்ளையாண்டான் திரும்பியே பார்க்க மாட்டான். அம்மா தன் கணவனின் மீது கோபத்தைக் கொட்டுவாள். 'வீட்டுக்குள் எப்பொழுது நுழையப் போகிறான் என்று பார்த்துக் கொண்டு இப்பொழுதுதான் இதையெல்லாம் சொல்ல நல்லவேளை பார்த்தீர்களா? நாளைக் காலையில் எழுந்தபின் சொல்லக் கூடாதா? அதற்குள் என்ன கெட்டு விடுமாம்? பாவம், பட்டினியோடு திரும்பி விட்டான். இந்தக் குளிரில் ராத்திரி எங்கெல்லாம் சுற்றி எப்படி யெல்லாம் தவிக்கப் போகிறானோ!' என்று அங்கலாய்ப்பாள்.

"இரவு கழிந்து பொழுது விடிந்து விடும். அப்பாவுக்கும் தூக்கம் வந்திராது. அம்மாவும் கண் இமைத்திருக்க மாட்டாள். ஏன், அன்று இரவு உபவாசம் தான். சோற்றைக் கண்ணால் கூடப் பார்த்திருக்கமாட்டாள். பொழுது விடிந்ததும் பிள்ளையாண்டான் திரும்பி வந்து விடுவான் என்று எதிர்பார்ப்பார்கள். ஆனால் எதிர்பார்த்ததற்கு எதிராக முடிந்திருக்கும்; ஏமாற்றமே எஞ்சியிருக்கும். மாலையில் வீடு திரும்பும் தந்தை, பையன் இன்னும் வீடு திரும்பவில்லை என்னும் செய்தியைக் கேட்டு, சகதர்மிணி படுத்த படுக்கையாகி விட்டதைக் கண்டு உள்ளம் அதிர்ந்து உடைந்து போவார். உடனே பிள்ளையாண்டானை எப்பாடுபட்டாவது தேடி அழைத்து வருவதாக மனைவிக்கு ஆறுதல் கூறிவிட்டு வெளியே புறப்படுவார். தவப் புதல்வனின் ஐந்தாறு நண்பர்களைச் சந்தித்து விசாரிப்பார். எவரும் உதட்டைப் பிதுக்கவே அவரது நிலைமை மோசமாகி விடும்; வருத்தம் பன்மடங்காகப் பெருகி விடும். மனைவி உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளாள் என்பது நினைவுக்கு வந்ததும், ஒரு தினத்தாளின் காரியாலயத்துக்குச் சென்று 'பையனைக் காணோம்!' என்ற தலைப்பில் விளம்பரம் கொடுத்து வருவார். வீட்டுக்குத் திரும்பி வந்து பார்த்தால் பிள்ளையாண்டான் வீட்டுக்குத் திரும்பிவந்திருப்பான். வீட்டிலேயே தங்கும் நோக்கத்துடன் இராது. தன் புத்தகங்களை எடுத்துப் போவதற்காக வந்திருப்பான். கணவனும் மனைவியும் சேர்ந்து பிள்ளையாண்டானை வேண்டிக் கொள்வார்கள்; சமாதானப்படுத்துவார்கள். பிள்ளையாண்டானின் கோபத்தைச் சமனப்படுத்தப் பல யுக்திகளைக் கையாண்டு வெற்றி பெறுவார்கள். இம்மாதிரித்தான் பெரும்பாலான 'பையனைக் காணோம்' நடைபெற்றிருக்கும். சொல், உன் அபிப்பிராயம் என்ன?" என்று காரண காரியங்களுடன் விளக்கிக் கேட்டேன்.


ஜ்லாமேஷ் இதற்குள் பற்ற வைத்த சிகரெட்டைப் புகைத்துத் தீர்த்திருந்தான். மிகுந்திருந்த சிறு துண்டை 'ஆஷ் டிரே'யில் போட்டான். அப்பொழுதும் அவன் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. என் பேச்சை இதுவரை அவன் கேட்கவே இல்லையோ என்று எனக்குத் தோன்றியது. எனவே, சிறிது கோபமுற்று, "என்ன அப்பா சமாசாரம்? நான் ஏதோ சொல்லிக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறேன். நீ பேசாமல் ஊமையாட்டம் உட்கார்ந்திருக்கிறாயே!" என்றேன்.

அவன் இந்தத் தடவை வாயைத் திறந்தான்: "எல்லா நோய்க்கும் ஒரே மருந்து செல்லாது, நண்பா! சில விஷயங்கள் நீ சொல்வது போலவும் நடந்திருக்கலாம். ஆனால் எல்லாமே அப்படி நடக்க வேண்டும் என்பதில்லையல்லவா? எத்தனை வீடுகள், எத்தனை மனிதர்கள் இப்படி நடந்து அழிந்து ஒழிந்து போயிருக்கிறார்கள். உனக்குத் தெரியுமா? இதே போன்ற ஒரு சமாசாரம் எனக்கு ரொம்ப ரொம்ப நன்றாகத் தெரியும். அந்தக் காரியத்தில் என்னவாயிருந்தது என்னவாகி விட்டது, தெரியுமா?" என்று கூறி 'உஸ், அப்பாடா!' என்று நீண்ட துயர மூச்சு விட்டான்.

என் ஆர்வம் இயல்பாகவே விழித்து எழுந்தது. நான் அவன் முகத்தில் என் பார்வையைப் பதித்தேன். அவன் சொல்ல ஆரம்பித்தான்:

"பல வருஷங்களுக்கு முன் நடந்த விஷயம். ஒரு ஜமீன்தாரின் மகன் வீட்டிலிருந்து ஓடிவிட்டான். ஒரே பிள்ளை அவன். அதனால் தாய் தந்தையர் அடைந்த துயரத்தைப் பற்றி என்னவென்பது? அந்தப் பையனின் பெயர் ஜோவேன் என்பது.

"ஜோவேன் வீட்டை விட்டுச் சென்ற ஒரு வாரம்வரை, உற்றார் உறவினர்களை விசாரித்தார்கள். பிறகு பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தார்கள். அந்த விளம்பரத்தில், அவனை வீட்டுக்கு வருமாறு வேண்டிக் கொண்டதோடு, அவன் அன்னை நீர் ஆகாரம் அருந்துவதை விட்டு விட்டதாகவும், சோகத்தில்



படுத்த படுக்கையாகி விட்டதாகவும் வேறு குறிப்பிட்டிருந்தார்கள். அப்புறம் இன்னொரு விளம்பரம் வெளியாகியது. அதில் அன்னையின் நிலை வரவர மோசமாகிக் கொண்டிருக்கிறது என்றும் உடனே புறப்பட்டு வருமாறும் வேண்டுகோள் விடுக்கப் பட்டிருந்தது. ஆனால் அதற்கும் பலன் ஏற்படவில்லை. எனவே, 'சீக்கிரம் வீடு திரும்ப வில்லையென்றால் தாயாரைப் பார்க்க முடியாது' என்ற குறிப்புடன் மீண்டும் விளம்பரம் வெளியாகியது. இவ்வளவுக்கும் ஜோவேனின் இதயம் இரங்கவில்லை; கசியவில்லை. தாய்தந்தையருக்கு ஏமாற்றத்தைத் தவிர வேறு எதுவும் கிட்டவில்லை.

''விளம்பரத்தில் ஜோவேனைத் திரும்பி வருமாறு கேட்டுக் கொண்டதை நிறுத்தி விட்டு, அவன் விலாசத்தைத் தருவோருக்கோ அல்லது அவனை வீட்டுக்குக்கொண்டு வந்து சேர்ப்பிப்பவருக்கோ பரிசு வழங்கப்படும் என்ற ஆசை வார்த்தை காட்டப் பட்டிருந்தது. அதோடு அந்த விளம்பரத்தில், 'வயது பதினாறு, ஒல்லியான உடல், காதுக்குக் கீழே காயம் பட்ட வடு, சிவந்த மேனி' என்று அங்க அடையாளங்களும் விவரமாகத் தரப் பட்டிருந்தன. ஆனால் அதற்கும் பலன் ஏற்படவில்லை. பரிசுத் தொகையை இரண்டு மடங்காக்கி விளம்பரம் கொடுத்தார்கள். இதுபோல் நீண்ட காலம் வரையில் ஜோவேன் காணாமற் போய் விட்டான் என்னும் செய்தி விளம்பரமாகப் பத்திரிகையை அலங்கரித்துக் கொண்டிருந்தது.''

ஜோமேஷ் சிறிது நிறுத்தினான். பிறகு மீண்டும் தானாகவே ஆரம்பித்தான்:

''எனக்கு ஜோவேனை நன்றாகத் தெரியும். ஏதோ கஷ்டம் ஏற்பட்டு விட்டதனால் அவன் வீட்டை விட்டு ஓடி விட்டான் என்று கூற முடியாது. அவன் மனம் சிறிது காலமாகவே வைராக்கியப் பாதையை நாடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் அந்த வைராக்கிய வெறி மிஞ்சி விடவே, யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல், வீட்டை விட்டு வெளியேறிவிட்டான். வீட்டை விட்டு வெளியேறிய பின்னரும், வைராக்கிய விசாரம் அவன் மனத்திலே நிலைபெற்று நின்றது. அதனால்தான் எந்த விளம்பரமும் எத்தனை முயன்றும் அவன் மனத்தைக் கரைக்க வில்லை; இளக்கவில்லை.

''ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் சென்ற பின்னர், திடீரென்று ஒரு நாள் ஜோவேன் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். ஒரு வேளை உலகத்தில் அடிபட்டு இடிபட்டு அவனது வைராக்கிய வெறி தணிந்து விட்டதோ, என்னமோ? மறுபடியும் உலகச் சுழலில் சிக்கித் தவிக்கத் தூண்டக் கூடிய என்ன என்ன சிரமங்கள் அவன் வாழ்வில் நேர்ந்தனவோ? அவன் வீட்டுக்கு வந்து விட்டான். இரண்டு வருஷ காலத்துக்குள் அவனிடம் எத்தனையோ மாறுதல்கள் உண்டாகியிருந்தன. ஆயினும் அவனது தந்தையின் வேலைக்காரர்கள் கூட அவனைப் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று அவன் எண்ணவே இல்லை. அவன் வீட்டுக்குள் நுழைய முற்பட்டபொழுது, வேலையாள் தடுத்து நிறுத்தி விட்டான். 'என்ன வேண்டும்? யாரைப் பார்க்க விரும்புகிறீர்கள்?' என்று அதிகார தோரணையில் கேட்கவும் செய்தான்.

''ஜோவேன் இலேசாகச் சிரித்துக் கொண்டு, 'நான் உள்ளே போகத்தான் விரும்புகிறேன்!' என்றான்.


''அவன் பதிலைக் கேட்ட வேலையாள் அவனைக் கூர்ந்து ஒரு முறை கவனித்தான். பிறகு சிறிது விஷமச் சிரிப்புடன், 'அது சரி! அதற்கு இவ்வளவு அவசரப் படுவானேன்? சற்று வாசல் வராந்தாவில் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டு போகலாமே!' என்றான்.

''அதைக் கேட்டு ஜோவேனுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது 'ஏன், என்ன விஷயம்?' என்று கேட்டான்.

'' 'விஷயம் என்ன பிரமாதமாக இருந்து விடப் போகிறது? ஒன்றும் இல்லீங்க!' என்றான் வேலையாள்.

'' 'என் அம்மா சௌக்கியந்தானே?' ஜோவேன் ஆவலுடன் கேட்டான்.

''வேலையாளின் இதழ்க் கடைகளிலே ஒரு குறும்புப் புன்னகை இழையோடி,



யது. ஆனாலும் தன் குரலை அடக்கிக் கொண்டு, 'சௌக்கியமாயிருக்கிறார்கள், வாருங்கள். இப்படி வந்து அமருங்கள்!' என்று அழுத்தமாக அழைத்தான்.

"லோவேனுக்குக் கோபம் வந்து விட்டது. 'அங்கே வருவானேன்? இங்கே நான் இருப்பேன். இப்படியே உள்ளே நான் போவேன்' என்று கூறினான்.

" 'அங்கு போகக் கூடாது. வாருங்கள் இங்கே!' வேலைக்காரன் குரலில் அதிகாரம் தொனிக்க அதட்டினான். லோவேனின் முகம் களையிழந்து தொங்கி விட்டது. வேலையாளுடன் அவன் பின்னாலேயே சென்றான். வாசற்புறத்தில் ஒரு பக்கத்து ஹாலில் ஜமீன்தாரின் காரியாலயம் இருந்தது. வேலைக்காரன் அங்கே லோவேனை அழைத்துச் சென்றான்.



இரண்டு ஆண்டுகளிலே காரியாலயத்தின் உருவம் கூடக் கொஞ்சம் மாறிப் போயிருந்தது. பழைய குமாஸ்தா வேலையை விட்டுப் போயிருந்தார். அவருக்குப் பதிலாகப் புதிதாக வந்த இரண்டு பேர் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தனர். ஆனால் காஷியர் மட்டும் அதே பழைய ஆசாமிதான். அவரைப் பார்த்ததும் லோவேனுக்கு ஏனோ தெரியவில்லை, சொல்ல முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

"காரியாலய அறைக்குள் சென்ற பிறகு, வேலையாள் லோவேனை உட்காரச் சொல்லி விட்டுக் காஷியரிடம் போய், 'இவர் உள்ளே போக விரும்புகிறார்' என்றான். காஷியர் தமது மூக்குக் கண்ணாடியை உயரத் தூக்கி லோவேனைக் கூர்ந்து கவனித்தார். பிறகு வேலையாளைப் பார்த்து, 'இவர் இப்பொழுதுதான் வந்திருக்கிறாரா?' என்று கேட்டார். வேலையாள் தலையசைத்து 'ஆம்' என்று பதில் அளித்தான்.

"லோவேனுக்கு இதெல்லாம் வேடிக்கையாகத் தோன்றியது. ஏதோ மர்மம் நிறைந்ததாகவும் பட்டது. அதனால் பொறுமையிழந்து, 'விளக்கமாகச் சொல்லுங்களேன்! என் அம்மா உடம்பு ஒன்றும் இல்லாமல் சௌக்கியமாயிருக்கிறாளா? அப்பா சௌகரியமாயிருக்கிறாரா?' என்று கேட்டான்.

"வேலையாள் பதில் கூறினான். 'எல்லோரும் சௌக்கியமாயிருக்கிறார்கள். கவலைப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் நீங்கள் அவர்களை இப்பொழுது சந்திக்க முடியாது!' என்றான் தீர்மானமாக.

" 'என்ன? நான் சந்திக்க முடியாதா? ஏன் சந்திக்க முடியாது? உங்கள் மூளை சரியாகத்தானே இருக்கிறது? நான் இப்பொழுதே போய்ப் பார்க்கப் போகிறேன். யார் என்னைத் தடுத்து நிறுத்துவதற்கு? ஒரு கை பார்த்து விடுகிறேன்!'

"லோவேன் பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டு எழுந்து நின்றான். ஆனால் அப்பொழுதே வேலையாள் மிகவும் மரியாதையாக, 'இதோ பாருங்கள்! வீணில் குழப்பத்தை உண்டு பண்ணுகிறீர்கள். கடைசியில் இது உங்களுக்குத் தான் கெடுதலாக முடியும்' என்றான்.

"அப்பொழுது லோவேனுக்கு மனத்தில் ஒரு சந்தேகக் கேள்வி எழுந்தது. ஒருவேளை இவர்கள் நம்மைப் புரிந்து கொள்ளவில்லையோ அதனால்தான் இப்படிப் பேசுகிறார்களோ? இப்படி எண்ணியவன், 'நீங்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லையா? என்ன? நான் தான் லோவேன். லோவேனைத் தெரியவில்லையா உங்களுக்கு?' என்றான்.

"ஆனால் இதற்கு ஒரு பதிலும் கூறாமல் வேலையாள் ஒரு மேஜையண்டை போனான். அதன் டிராயரைத் திறந்து ஒரு படத்தை எடுத்து வந்தான். அந்தப் படம் லோவேனுடையது தான். பல ஆண்டுகளுக்கு முன்பே எடுக்கப்பட்டது.

படத்தை ஸோவேனின் கையில் கொடுத்து வேலையாள், 'இந்தப்படத்தை அடையாளம் தெரிகிறதா?' என்று கேட்டான். அந்தப் படத்தைப் பார்த்ததும், 'ஏன் இது என்னுடைய படம்தான்!' என்று உற்சாகமாகக் கூறினான்.

" 'ஆமாம், ஆமாம். அசப்பிலே பார்த்தால் உங்களோடு கொஞ்சம் ஒத்துத்தான் இருக்கிறது. ஆனால் உங்களுக்கு முன்னால் வந்த இருநபர்களுடைய முகங் கூட இந்தப் படத்தோடு ஒத்துத்தான் இருந்தது. அவர்களுடைய காதுக்குக் கீழேயும் காயம்பட்ட வடு இருந்தது. அது கிடக்கட்டும். எது எப்படிப் போனாலும், 'ஸோவேன்' என்று யார் சொல்லிக் கொண்டுவந்தாலும், அவர்களோடு நாம் சண்டை பிடிக்கக் கூடாது. சமாதானமாக அவர்களைத் திருப்பி யனுப்பிவிட வேண்டும் என்பது எங்கள் எசமானர் எங்களுக்கு இட்டிருக்கும் கட்டளை. அதனால், தங்களிடமும் நாங்கள் அப்படியே வேண்டிக் கொள்கிறோம்!'' என்றான்.

" 'ஆனால் நான் என் தாய் தந்தையரைச் சந்திக்காமல் இங்கிருந்து போக மாட்டேன்' என்று தனது உறுதியான சங்கல்பத்தைக் கூறினான் ஸோவேன்.

" 'இதைக் கேளுங்கள். தாங்கள் எடுப்பது வீண் முயற்சி. ஸோவேன் பாபு இறந்து விட்டார். ஒரு காரில் அறைபட்டு அவர் மரித்து விட்டார். அந்த விபத்தைப் பார்த்தவர்கள் இப்படியே தான் சொன்னார்கள். சவப் பரீட்சை செய்த டாக்டர்களும் அவர்கள்சொல்லை ஆமோதித்தார்கள். நாங்கள் சொன்ன அங்க அடையாளங்கள் யாவும் அப்படியே இம்மிகூடப் பிசகாமல் இருப்பதாக ஒப்புக் கொண்டார்கள். எனவே, இனிமேல் துளிக்கூடச் சந்தேகத்துக்கு இடம் இல்லை!'

"அதைக் கேட்டு ஸோவேனின் நிலை மிக விசித்திரமானதாகி விட்டது. இன்னும் சிறிது நேரம் தங்கினால் மூளை பிறழ்ந்து பைத்தியம் பிடித்து விடுமோ என்றே அவனுக்குத் தோன்றியது. அவன் சிறைச் சுவரை ஏறிக் குதித்துத் தாண்டிய கைதியைப்போல ஓடினான். ஒரே ஓட்டத்தில் யாருடைய கையிலும் பிடிபடாமல் வீட்டுக்குள்ளே நுழைந்து விட்டான். ஓடியவன் நேரே தன் தந்தையின் அறையை அடைந்து உரத்த குரலில், 'அப்பா!' என்று கூவினான்.

"அறைக்குள் அமர்ந்திருந்த வயோதிகர் ஸோவேனைக் கூர்ந்து நோக்கினார். பிறகு விரக்தி தோய்ந்த குரலில், 'யார் நீ?' என்று வினவினார்.

" 'உங்களுக்கும் கூடத் தெரியவில்லையா, அப்பா?' ஸோவேன் துயரம் தொண்டை யடைக்கக் கேட்டான்.

"அதே சமயம் பின்னாலேயே ஓடி வந்த வேலையாள் ஸோவேனின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

" 'அவனை விட்டுவிடு. ஒன்றும் சொல்லாதே. அவனாகவே போய் விடுவான்!' என்று கூறி வயோதிகர் எழுந்து நின்றார். பிறகு ஸோவேனை ஒருமுறை உற்றுக் கவனித்து விட்டு வெளியே சென்றார். பிறகு வெளியிலிருந்தவண்ணமே வேலையாளைக் கூப்பிட்டுத் தம்மிடம் அழைத்துக் கொண்டார். ஸோவேன் ஒன்றும் தோன்றாமல் பிரமைபிடித்தவன் போலப் பேசாமல் நின்றான். பற்பல சிந்தனைகள் பேரலைகளாக எழும்பி அவன் உள்ளத்தை அலைத்தன. தன் சொந்த வீட்டிலேயே அவன் இன்று வேற்றாளாக நிற்க வேண்டிவந்து விட்டதே! என்ன காலக் கோளாறு! கிரகக் கோளாறு!


"சில நிமிஷங்களுக்குப் பிறகு வேலையாள் கையில் கற்றை நோட்டுக்களுடன் உள்ளே நுழைந்தான். ஸோவேனைப் பார்த்து, 'இதோ பாருங்கள்! ஸோவேன் பாபுவின் அம்மா சாகும் தறுவாயில் இருக்கிறார்கள். இன்னும் ஒருநாள் அவர் உயிர் பிழைத்திருந்தால் பெரிது. ஸோவேன் பாபு விபத்தில் சிக்கி இறந்து விட்டார் என்னும் செய்தி இதுவரை அவருக்குச் சொல்லப்படவில்லை. அவர் அமைதியாகக் கண் மூடவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அதனால் இந்த ரூபாயைப் பெற்றுக் கொள்ளுங்கள். அவரிடம் வாருங்கள். சாகும்தறுவாயில் இருக்கும் அவர்கள் தமது உண்மையான மகனையும் உங்களையும் பிரித்து அடையாளம் கண்டு கொண்டுவிட முடியாது. நீங்கள் அவர் அருகில் வந்து நின்றால், சாகும்பொழுது தமது மகன் தமது அருகிலேயே நின்றான் என்ற நிம்மதியாவது அவர்களுக்கு ஏற்படும். வாருங்கள்!' என்று கூறிய வேலையாள் திரும்பி நடந்தான்.

"ஸோவேனால் அதற்கு ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. யந்திரப் பதுமை போல, பொங்கும் உள்ளத்துடனும் நீர் வழியும் கண்களுடனும் வேலையாளுக்குப் பின்னே நடந்தான்!"

இத்தனை தூரம் கதையைக் கூறி முடித்த ஸோமேஷ் சில விநாடிகளுக்கு நிறுத்தினான். நான் அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். "ஸோமேஷ்! காதுக்குக் கீழே காயம்பட்ட வடு உன் முகத்திலும் இருக்கிறதே!" என்றேன்.

ஸோமேஷின் முகத்தில் இரக்கத்தை வருவிக்கும் ஒரு புன்னகை மின்னியது. "அதனால்தானே இவ்வளவு விஸ்தாரமாக இந்தக் கதையைக் கூற என்னால் முடிந்தது!" என்றான்.

[ஸ்ரீ பிரேமேந்திர மித்ரரின் வங்காளிக் கதை]



# விற்கப்படும் வெண்ணெய் களில் மிகச் சிறந்தது

புத்தம் புதிய வெண்ணெயின் நிகரற்ற சுவையைக் கொண்ட அமுல் வெண்ணெயை நீங்கள் ஒரு முறை சுவைத்த பிறகு வேறொன்றை நாடமாட்டீர்கள். எல்லா காலங்களிலும் புதிய சுத்தமான, சுவை மிகுந்த பால் ஆடையிலிருந்து இந்தியாவில் உள்ள ஒரே ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட வெண்ணெய் தொழிற்சாலையில் தயாரிக்கப் படுவது அமுல் வெண்ணெய், அமுல் என்ற பெயர் மாறுபடா தரம், உண்மையான மதிப்பு, உத்திரவாதத்துடன் கூடிய பரிசுத்தத் தன்மை இவற்றின் சின்னமாக விளங்குகிறது.

அமுல் வெண்ணெய் உலகிலேயே சிறந்த வெண்ணெய்க்கு ஈடானது என்று வெளி நாட்டு பால் பண்ணை நிபுணர்கள், மதிப்பிட்டிருப்பதில் வியப் பொன்றுமில்லை




## அமுல்


என்ற பெயரைக் குறிப்பிட்டுக் கேளுங்கள்

8 அவுன்ஸ், 1 பவுண்டு பாக்கட்டுகளில் கிடைக்கும் உங்களுடைய வசதிக்கேற்ற 8 அவுன்ஸ். 1 பவுண்டு டின்களிலும் கிடைக்கும்



கெய்ரா டிஸ்டிரிக்ட் கோவாபரேடிவ் மில்க் புரொடியூஸர்ஸ் யூனியன் லி.
ஆனந்து (வெஸ்டர்ன் ரெயில்வே)

PSKMP-1 A-33 TAM.



# பட்டமரம் தழைத்தது

"அகாடு காலமாகத் தமிழகத்தில் ஓ வளர்ந்து கப்புங் கிளையுமாகப் பரவித் தழைத்து, தேமினிய குயில்களுக்கும் கிளிகளுக்கும் அடைக்கலம் தந்து மக்களுக்கு இனிய நிழல் அளித்து வந்தது நாடகக்கலை என்னும் பழைமையான மரம். சிலகாலமாக அந்த மரத்தில் இலைகள் காய்ந்து கருகிப் பட்டுப் போய் வந்தது. மரம் மொட்டைமரமாக நிற்கத் தொடங்கியது. கலைஞர்கள்—ரஸிகர்களின் உள்ளங்கள் அதைப் பார்த்துப் பரிதவித்தன.

அந்த நாடகக் கலை என்னும் விருட்சத்தில் இப்போது சிலகாலமாக மறுபடியும் தளிர்கள் விடுவதைக் காண்கிறோம். இது ஒருவேளை அந்திய காலத்தில் ஏற்படும் செழிப்போ அல்லது உண்மையான புத்துயிர்தானோ என்று இப்போது சொல்ல முடியவில்லை. ஆயினும் இப்போதைக்குப் புதிய தளிர்களைக் காணும்போது நம்முடைய உள்ளம் மகிழ்கின்றது. பட்டமரம் தளிர்த்து உண்மையாகவே புத்துயிர் பெற்று வருகிறது என்று நம்புவதற்கு ஆசை உண்டாகிறது.'' —'கல்கி'

* * *

சென்ற மாதம் இருபதாம் தேதி 'கல்கி பைன் ஆர்ட்ஸ் கிளப்' அங்கத்தினர்கள் பேராசிரியர் கல்கி நினைவு நாளை அடையாறு ஆர்ட்ஸ் அகாடமி திறந்த வெளி அரங்கில் கொண்டாடினார்கள்.

அமரகவி பாரதியாரின் 'பாஞ்சாலி சபத'த்தைக் கவிதை நாடகமாகவே நடத்தினார்கள். மிகுந்த துணிச்சலோடும் தைரியத்தோடும் நடத்தி வெற்றி பெற முயன்றார்கள். திரைக்குப் பின்னால் திரு டி. கே. ஷண்முகம் அந்த இளைஞர்களை வாழ்த்தியதுபோல் அந்தத் துணிச்சலும் முயற்சியுமே பாராட்டுக்குரியன.

சாதாரணமாக, நாடகங்களில் யாரேனும் ஒருவர் அல்லது இரண்டு பேர்கள் முக்கிய கதாபாத்திரங்களாக இருப்பார்கள். மற்றவர்கள் அவர்களுக்குத் துணையாக நின்று நடிப்பார்களேயன்றி நாடகத்தின் ஜீவனாக இருக்க மாட்டார்கள். ஆனால் இது சாதாரண நாடகம் இல்லையே? அமரகவி பாரதியாரின் நாடகமாயிற்றே? பாஞ்சாலி முதல் தேர்ப்பாகன் வரையில் அனைவருமே உயிர்த் துடிப்பு மிக்க, உணர்ச்சிகள் நிறைந்த அற்புதப் படைப்புகள் அல்லவா? அப்படிப்பட்ட நாடகத்தை நடிப்பது எவ்வளவு கடினமான காரியம்? நாடகக் கலையில் உள்ள ஆர்வத்தால் அந்தக் கடினமான காரியத்தையும் செய்ய முற்பட்டதன் மூலம் பின்னால் இன்னும் அனுபவம் மிக்க புகழ்பெற்ற நடிகர்கள் ஏற்று நடிக்க முன்னோடியாக அமைந்து விட்டது.

கவிதை நாடகத்தைச் சமீப காலத்தில் யாரேனும் ஏற்று நடிப்பது என்பது இது தான் முதல் தடவை என்று கேள்விப்படுகிறோம். காட்சி ஜோடனைகள் ஒன்றுமே இல்லாமல் (பாரதியின் நாடகத்துக்குக் காட்சி ஜோடனைகள் எதற்கு?) வேஷப் பொருத்தம் மட்டும் பார்த்துக் கொண்டு வந்து பாரதியின் வசனங்களைக் 'கணீர் கணீர்' என்று பேசியபோது பல இடங்களில் உடல் சிலிர்த்தது. துரியோதனனாகத் தோன்றிய வி. சீதாராமன், சகுனியாக வந்த என். வி. நடராஜன், இருவரின் நடிப்பும் உயர்தரமாக இருந்தது. மற்றவர்களில் யாருடைய நடிப்புமே சோடை போகவில்லை. கூடுமான வரையில் நன்றாகவே நடித்தார்கள். பீமனாக நடித்தவருக்கு மட்டும் உருவப் பொருத்தம் இல்லை என்று தோன்றியது. சாதாரணமாகப் பெண் வேஷத்தில் தோன்றும் திரு குமார் இந் நாடகத்தில் தருமன் பாகத்தை ஏற்றுக் கொண்டு நடித்திருக்கிறார்.

பின்னணி இசையை ஸ்ரீமதி மீனலோசனி ராமஸ்வாமி ஏற்றுக் கொண்டு நன்றாகப் பாடினார்.

பாஞ்சாலி சபதத்தைப் பார்க்க வருபவர்கள் ஒரு முறையாவது அதைப் படித்து அனுபவித்திருக்க வேண்டும். இல்லையானால் நாடகத்தைப் பார்த்தும் கேட்டும் ரசிப்பது கொஞ்சம் கஷ்டமாகச் சிலருக்குத் தோன்றலாம். சிறிய நாடகமாதலால் ஏதாவது விழாக்களில் பொதுக்கூட்டம் முடிந்த பிறகு கலை நிகழ்ச்சியாக நடத்துவதற்கு மிகவும் சௌகரியமாக அமைந்துள்ளது.

* * *

இப்போதெல்லாம் தமிழ் நாட்டிலும், குறிப்பாக, சென்னை நகரிலும் மூலைக்கு மூலை 'அமெச்சூர்' நாடகங்கள் நடப்பதைப் பார்க்கிறோம். உத்தியோகத்தில் இருப்பவர்களும், கல்லூரி மாணவர்களும் ஓய்வு நேரங்களை நாடகக் கலையின் வளர்ச்சியில் பயன்படுத்தி வருவதைப் பார்க்கும்போது மகிழ்ச்சி யுண்டாகிறது.

இன்னும் சில நாட்களில் 'அமெச்சூர் தியேட்டர் பெடரேஷன்' ஆதரவில் ரஸிக ரஞ்சனி சபையில் நாடகவிழாவே நடக்கவிருக்கிறது. பொது மக்களுக்கு நன்கு அறிமுகமான சுமார் இருபத்தைந்து அமெச்சூர் நாடகக் குழுவினர் இந்த நாடக விழாவிலே பங்கெடுத்துக் கொள்ளப் போகிறார்கள்.

இதையெல்லாம் பார்க்கும்போது, பேராசிரியர் கல்கி அவர்களுடைய ஆசை பரிபூரணமாக நிறைவேறிவிட்டது என்றும், பட்ட மரம் தளிர்த்ததோடல்லாமல் ஆலமரமாகத் தழைத்து வளர்ந்து அசைக்க முடியாதபடி பல விழுதுகளை ஊன்றி யிருப்பதாகவும் நமக்குத் தோன்றுகிறதல்லவா?

### பதினெட்டாம் அத்தியாயம்

## பயங்கர இரவு


காற்று சூறாவளியாக வீசித் தான் செல்லும் வழியில் கிடந்த பொருள்களையெல்லாம் தன்னிடத்தே சிக்கிச் சுழலச் செய்தது.

வெண்ணிலவைப் பொழிந்த முழு மதியைக் கருமேகங்கள் மூடிக் கொண்டன. கண்களைக் குருடாக்கும் ஒளிக் கீற்றுக்கள் அங்கிருந்து எழுந்து வானைப் பிளந்தன. அதனால் ஏற்பட்ட ஓசை உடலை நடுங்க வைத்தது.

வானம் பிளந்து தேங்கி நின்ற நீரையெல்லாம் கொட்டித் தீர்த்தது.

ஜன்னல் வழியாக வீசிய 'சில்'லென்ற காற்றிலே மேலேயிருந்து தொங்கிய மின்சார விளக்கு மூலைக்கு மூலை பாயவே, அதனால் சுகுமாரனுடைய நிழலும் பயங்கரப் பேயாக ஆடி அசைந்தது. ஒரு கணம் மல்லிகாவின் மீது விழுந்து சுகுமாரனுடைய கண்ணெதிரே அவளை மங்கச் செய்வதும், அடுத்த கணம் அப்பால் நகர்ந்து போய் அவளைத் தெளிவாகக் காட்டுவதுமாக இருந்தது.

# பொங்கிவரும் பெருநிலவு



சுகுமாரனுக்கு அப்படி ஆடி அசைந்தது தன்னுடைய நிழலாகத் தோன்றவில்லை. பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னால் தான் அரிவாளால் வெட்டிக் கொன்று விட்ட ஒரு மனிதன், ஆவி வடிவத்திலே தன்னைச் சதாசர்வகாலமும் பின்தொடர்ந்து வந்துகொண்டேயிருப்பது போலவும், இன்றைய இரவினைக் கண்டு அந்த ஆவி ஆனந்தமாகப் பேயாட்டம் ஆடி மகிழ்வதாகவும் தோன்றியது.


மல்லிகா அவரை மருண்ட விழிகளோடு பார்த்தாள். சற்று முன்னால் அவள் சொன்ன வார்த்தைகள் எப்போதோ கூறியவை போல் அவருக்கு நினைவு வந்தன. 'நீங்களா என்னைப் பெற்ற தகப்பன்? என்னைப் பெற்றவர் இறந்து போய்ப் பதின்மூன்று வருஷங்களாகி விட்டன!'

'அப்படியானால்...... இவளுக்குத் தெரியுமா? இவளைப் பெற்றவனைக் கொன்று குழிவெட்டி மூடிய பாதகன் நான் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறாளா? இத்தனை நாட்களாகக்

கண்ணப்பனின் நினைவு என்னைத் துன்புறுத்தியது போதாது என்று இவன் வேறு சேர்ந்து கொண்டு என்னைக் கொடுமைப்படுத்தப் போகிறாளா?

கம்பீரமான சுகுமாரனின் உருவம், கூனிக் குறுகிக் கொண்டு கனலாகச் சிவந்திருக்கும் கண்களால் தன்னையே வெறித்து வெறித்து ஆடாமல் அசையாமல் நின்று பார்ப்பதைக் கண்ட மல்லிகா, "அப்பா!" என்றாள்.

சுகுமாரன் திடுக்கிட்டவராக அவளை வியப்புடன் மறுபடியும் உற்றுப் பார்த்தார். "மல்லிகா! நீ தானா 'அப்பா' என்று கூப்பிடுகிறாய்? அப்படியானால் உனக்கு ஒன்றுமே தெரியாதா? ஆனால் சற்று முன்னால் எல்லாம் தெரிந்தவள் போல் பேசினாயே! என்னைப் பெற்றவர் இறந்து போய்ப் பதின்மூன்று வருஷங்களாகி விட்டன என்று நீதானே சொன்னாய்? அதற்கு



என்ன பொருள்? உனக்கு எல்லா விவரங்களும் தெரியும் என்றுதானே?"

"ஆமாம், அப்பா! எனக்கு எல்லாம் தெரியும். ஆனால் இத்தனை வருஷங்களாக என்னைப் பெற்ற தகப்பனைப் போலவே ஆதரவு காட்டி வந்திருக்கிறீர்களே, அதை மறந்துவிடமுடியுமா? அப்பா என்று அழைக்காமல் வேறு எப்படிக் கூப்பிடுவது?"

"மல்லிகா! வேண்டாம், இந்தக் கொலைபாதகனை இனி அப்படிக் கூப்பிடாதே! இத்தனை நாட்களாக அந்தப்பேய் என்னை வாட்டி வதைத்தது. இனிமேல் நீயே அந்தக் கைங்கரி



யத்தை ஏற்றுக்கொள்ளப் போகிறாய். 'அப்பா! அப்பா!' என்று அழைத்தே என்னைச் சித்திரவதை செய்து துன்புறுத்தப் போகிறாய்!"

அவருடைய மனவேதனையை உணர்ந்த மல்லிகாவின் கண்களில் நீர் முட்டியது.

"அப்பா! உங்கள் மனத்துக்கு வேதனையளிக்கும் என்று தெரிந்துதான் இத்தனை வருஷங்களாக அதை என் இதய அந்தரங்கத்திலேயே பூட்டி வைத்திருந்தேன். ஆனால் இன்று என் பொறுமையை அளவுக்கு மீறி நீங்கள் சோதித்துவிட்டீர்கள். சேகரை நான் கல்யாணம் செய்துகொள்ளும்படி செய்ய என்னென்னவோ யுக்திகளைக் கையாண்டீர்கள். அதட்டியும், பயமுறுத்தியும், கெஞ்சியும், அழுதும் உங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்ளப் பார்த்தீர்கள். இன்று வீட்டுக்குள் நுழைந்தபோது எவ்வளவோ சந்தோஷமாக வந்தேன். நீங்கள் எனக்காகக் காத்திருப்பீர்கள், உங்களிடம் என் காதல் பூரணத்துவம் அடைந்துவிட்டது என்பதைச் சொல்லி உங்கள் ஆசியைப் பெற ஆவலுடன் வந்தேன்.

ஆனால் நான் கண்டது நேர் விரோதமாக இருந்தது. நீங்கள் வற்புறுத்த வற்புறுத்த என் பொறுமையும் குறைந்து கொண்டே வந்தது. கடைசியில் என்னையும் மீறி அந்த வார்த்தைகள் வெளிப்பட்டு விட்டன. அப்பா! இது வரையில் உங்களை என் சொந்தத் தகப்பனாராகவேதான் பாவித்து நடந்து வந்திருக்கிறேன். இனிமேலும் அப்படியே இருப்போம். இன்று நடந்ததை மறந்து விடுவோம்."

"மறக்கமுடியாது, மல்லிகா! இந்த இரவை என்னால் மறக்க முடியாது.



இதே போன்று இடியும் மின்னலும் பேய்க்காற்றும் நிறைந்த மற்றொரு இரவையும் என்னால் மறக்கவே முடியாது. மறக்க முடியாத அந்த இரவைப் பற்றிச் சொல்கிறேன். உனக்குக் கேட்க விருப்பமில்லையானாலும் நான் சொல்லியே தீர வேண்டும்.

"மல்லிகா! உன் தகப்பன் அன்று என்னைத் தேடிக் கொண்டு வந்த போதே கோபமாக இருந்தான். 'திருமயிலத்துக்குப் போய் இரண்டு மொந்தை போட்டால்தான் நான் மறுபடியும் பழைய கண்ணப்பனாக மாறுவேன்' என்று சொன்னான். போகும் வழியெல்லாம் உன் அம்மாளைத் திட்டிக் கொண்டே வந்தான். 'வீட்டில் நிம்மதியே இல்லை, சந்தோஷமே இல்லை' என்று ஒரேயடியாகக் குறைப்பட்டுக் கொண்டான்.

"திருமயிலத்தை நாங்கள் அடைந்த போது விளக்கு வைக்கும் நேரமாகி விட்டது. கள்ளுக் கடைக்கு என் ஆசை நாயகி பங்கஜத்தின் வீட்டு வழியாகத்தான் போக வேண்டும். எனக்கு அவளைப் பார்க்காமல் போக மனமில்லை. கண்ணப்பனிடம் என் விருப்பத்தைச் சொன்னேன். அவன் முதலில் மறுத்தான். 'தாகமெடுக்கிறது' என்றான். பிறகு என் வற்புறுத்தலுக்கு இணங்கி 'ஐந்து நிமிஷம் பேசி விட்டு வந்து விடு' என்றான்.

"உள்ளே போனபிறகு எதற்காக இவனை அழைத்துக் கொண்டு இங்கே நுழைந்தோம் என்றாகி விட்டது எனக்கு. 'நேராக அவன் விருப்பப்படி கள்ளுக்கடைக்கே போயிருக்

கக் கூடாதா?' என்று எண்ணமிடலானேன். அப்படிப் பங்கஜத்தைக் கண்கொட்டாமல் வெறித்துப் பார்த்தான். அவன் மனத்தில் எழுந்த கீழ்த்தரமான எண்ணங்களைக் கண்கள் பிரதிபலிப்பதைக் கண்டேன்.

''கடைசியில் அவனை நான் துரிதப்படுத்தி அழைத்துக் கொண்டு போக வேண்டியதாயிற்று. அன்று எனக்கு அவனுடைய உபசாரம் பலமாயிருந்தது. மேலே மேலே வாங்கிக் கொடுத்துக் கொண்டேயிருந்தான். நானும் சளைக்காமல் போட்டுக் கொண்டேயிருந்தேன். சிந்திக்கும் திறனை நான் அடியோடு இழக்கும் வரை அவன் காத்திருக்கவில்லை. அரை மயக்கத்தில் நான் திரும்பிப் பார்த்தபோது, அவனைக் காணாமல் திடுக்கிட்டேன். தன் மனைவியை அவன் திட்டிக் கொண்டே வந்ததும் பங்கஜத்தை வெறித்துப் பார்த்ததும் கள்ளுக் கடையில் எனக்கு உபசரிப்பு பலமா



யிருந்ததும் ஒன்றோடொன்றுசேர்ந்து எனக்கு உண்மையை விளக்கின. மறுபடியும் நான் பங்கஜத்தின் வீட்டுக்குச் சென்றேன்.

''எனக்கு முன்பே அங்கு போயிருந்த கண்ணப்பன் என்னைக் கண்டதும் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான். என் முகத்திலே தாண்டவமாடிய குடி வெறியைக் கண்டு பயந்து போய் வீட்டின் பின்பக்கமாக ஓட ஆரம்பித்தான். ஏனோ எனக்கு அந்த வெட்கங் கெட்டவள் மீது கோபம் வரவில்லை. கண்ணப்பன் மீதுதான் ஆத்திரம் மூண்டது.

''நான் அவனைத் துரத்த ஆரம்பித்தேன். குறுக்கே நின்று தடுத்த பங்கஜத்தைப் பிடித்து ஒரு மூலையில் தள்ளினேன். சாளரத்தில் இருந்த அரிவாள் என் கண்ணில் பட்டது. அதை எடுத்துக் கொண்டேன்.

''அன்று இரவும் இன்று போலவே தான் திடீரென்று பயங்கரமாக மாறியது. அந்த இடியும் மின்னலும் மழையும் என்னைப் பாதிக்கவில்லை. குடி போதையும், கோபமும் சூழ்நிலையைப் பற்றி நினைக்கக்கூட விடவில்லை.

''ஆனால் அவனை அரிவாளுடன் நான் பின்பற்றுகிறேன் என்ற எண்ணம் கண்ணப்பனுடைய உள்ளத்திலே பீதியை உண்டாக்கியிருக்க வேண்டும். ஊருக்கு வெளியே ஒரு புளியந் தோப்பு. அதற்குள் புகுந்து செல்வது தான் செண்பகபுரத்துக்குக் குறுக்கு வழி. கண்ணப்பன் அதற்குள் புகுந்து ஓட்டமெடுத்தான். நானும் ஓடினேன். அவன் நிச்சயம் என்னிடமிருந்து தப்பிப் பிழைத்திருப்பான்.

''ஆனால் பாழாய்ப் போன புளிய மரம் ஒன்று புயலிலே பெயர்ந்து விழுந்திருந்தது. அதில் கால் தடுக்கி விழுந்தான் கண்ணப்பன்.

''நூறு சூரியன்களின் பிரகாசத்துடன் இருளைக் கிழித்துக் கொண்டு தோன்றித் தோன்றி மறையும் மின்னல்களும் அண்டத்தை அதிர வைக்கும் இடியோசையும், ஆளையே தூக்கி எறிந்து விடக்கூடிய சூறாவளிக் காற்றும், முகத்தை நிமிர விடாமல் செய்த பலத்த மழையும் நிறைந்த அந்தப் பயங்கரமான இரவில் அதைவிடப் பயங்கரமானதொரு காரியத்தை நான் செய்தேன்.

''அதைச் செய்து முடித்தபிறகு என் வெறி அடங்கி விட்டது. குடி போதையில் இருந்தவன் உடனே சுய உணர்வு பெற்று விட்டேன். என்னைப் பயம் ஆட்கொண்டது. நாலாபுறமும் போலீஸார் என்னைச் சூழ்ந்து கொள்வது போல் பிரமை உண்டாயிற்று. கையில் இருந்த இரத்தம் தோய்ந்த அரிவாளைப் பார்த்ததும் உடல் வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்தது. என் எதிரே தூக்குமேடையும் சுருக்குக் கயிறும் தோன்ற ஆரம்பித்தன.

''அரிவாளைக் கீழே போட்டு விட்டு மண்டையில் 'படார் படார்' என்று போட்டுக் கொண்டேன். அழுது புலம்பித் தீர்த்தேன். ஒரு புளிய மரத்தில் கைகளை ஊன்றி மண்டையை அதில் முட்டிக் கொண்டேன். என்ன செய்து என்ன பயன்? நடந்தது நடந்து விட்டது.


''யாருக்கும் தெரியாமல் வீட்டுக்குப் போய் மண்வெட்டியும் கடப்பாரையும் எடுத்து வந்தேன். இரவோடு இரவாக அசுரவேகத்துடன் ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில், யாரும் நட

# முன்னறிவிப்பு...



புதிய மர்பி ரேடியோ மாடல் 0724 மற்ற இதர ரேடியோக்களைவிட மிகவும் போற்றப்படும். ஏனெனில்,

- மிக அழகிய பெட்டியில் அமைக்கப்பட்டுள்ளது
- பல்லாண்டுகளுக்கு மிகச் சிறந்த முறையில் சேவை அளிக்கும்.




**மாடல் 0724**


- 6 - வால்வ்
- ஆல் - வேவ்
- 8 பாண்ட், முழுதும் பாண்ட்ஸ்பிரெட்
- ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)
- நிகர விலை ரூ. 495/-: உள்ளூர் வரிகள் தனி

## murphy radio

பல ஆண்டுகளுக்கு உங்களை மகிழ்விக்கும்!

தென் இந்தியாவுக்கு சோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
முகமது இப்ராஹிம் & கோ பிரைவேட் லிட்., சென்னை-பெங்களூர்-ஹைதராபாத்

சென்னை: ஸ்ரீ_கிருஷ்ணா, வெலிங்டன் & ராக்ஸி
மற்றும் தென்னாடெங்கும்




L. R. SWAMI

மாடாத பகுதியில் குழி பறித்தேன். கண்ணப்பனை அதில் அடக்கம் செய்ததோடு அரிவாளையும் புதைத்தேன். மழை பெய்திருந்ததால் என் வேலை சுலபமாக முடிந்து விட்டது. கண்ணப்பன் சடலத்தை யாரும் கண்டு பிடிக்காத வரையில் கவலையில்லை என்று எனக்குத் தெரிந்தது. அத்துடன் நானும் மறைந்து போனால் இருவருமாகச் சேர்ந்து ஊரை விட்டுப் போய் விட்டார்கள் என்று பேசுவார்களே யன்றிக் கொலை நடந்ததாகவே சந்தேகம் எழாது என்று நம்பினேன். வீட்டுக்குப் போய்க் கடப்பாரையையும் மண்வெட்டியையும் போட்டு விட்டு நான் சேர்த்து வைத்திருந்த கொஞ்சம் பணத்தையும் எடுத்துக் கொண்டு கிளம்பினேன். விடிய விடிய நடந்து சென்று ரயிலேறி ஒரு வழியாகச் சென்னைக்கு வந்து சேர்ந்தேன்.

"அதற்கு அப்புறம் நான் கள்ளக் கடத்தலிலும் சூதாட்டத்திலும் பணம் சேர்த்தது உனக்குத் தெரிந்ததுதான். மல்லிகா! இதையெல்லாம் ஏன் உன்னிடம் விவரமாகச் சொல்கிறேன் தெரிகிறதா? உன் உள்ளத்தின் ஆழத்தில் நிச்சயமாக என்னிடம் வெறுப்பு குடிகொண்டிருக்கும். நீ அதை மறுத்துக் கூறினாலும் நான் ஒப்புக் கொள்ளவோ நம்பவோமாட்டேன். நான் செய்தது மகாபாதகமான செயல்தான். ஆனாலும் அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று நான் குடிபோதையில் இருந்தது. மற்றொன்று என்னுடைய கோப வெறிக்கு ஆளாகும் வகையில் கண்ணப்பன் நடந்து கொண்டது. என்னிடம் நீ கொண்டிருக்கும் வெறுப்பு நீங்க வழியில்லை, மல்லிகா! ஆனால் இதையெல்லாம் தெரிந்து கொள்வதால் அந்த வெறுப்பு ஓரளவுக்குக் குறைய வழியுண்டாகுமானால் நான் மகிழ்ச்சி யடைவேன்" என்று கூறி முடித்தார் சுகுமாரன்.

## பத்தொன்பதாம் அத்தியாயம்

# இரும்புப் பிடி!

எப்போதோ பல வருஷங்களுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவத்தை நேற்று நடந்ததுபோல விவரித்தார் சுகுமாரன். அனுதாபத்துடன் கேட்டாள் மல்லிகா. அந்தப் பெண் உள்ளத்தில் கொஞ்சநஞ்சம் பாக்கியிருந்த வெறுப்பும் நிஜமாகவே அகன்று விட்டது.

"அப்பா! உங்களிடம் எனக்குக் கொஞ்சம்கூட வெறுப்பு கிடையாது, அப்பா! நீங்களாகவே எதற்கு எதை எதையோ நினைத்துக் கொண்டு சிரமப்படுகிறீர்கள்? அந்தக் காரியத்தை நீங்கள் செய்யவில்லை என்றும், உங்களை ஆட்கொண்டிருந்த மது அரக்கன்தான் செய்தான் என்றும் எனக்குத் தெரியும். எனக்கு எவ்வளவோ உதவிகள் செய்து என் ஆசைகளை யெல்லாம் பூர்த்தி செய்துள்ள உங்களிடம் எனக்கு ஏன் வெறுப்பு ஏற்படப் போகிறது?"

"ஆமாம், மல்லிகா! அதுவும் உண்மைதான். நான் செய்துவிட்ட தீச்செயலுக்குப் பிராயச்சித்தமாக உனக்கும் தங்கை சரஸ்வதிக்கும் அன்புடன் உதவியளிக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். உன்னை என்னிடமே கொண்டு வந்து சேர்த்த விதியை நினைத்து நினைத்து மகிழ்ந்து போகிறேன். செண்பகபுரம் கிராமப் பக்கம் தலைகாட்டவோ, உங்களுக்குக் கடிதங்கள் எழுதவோ பயந்து கொண்டிருந்த நான் சென்னையிலேயே உன்னைக் கண்டதும் ஆனந்தமடைந்தேன். முதன் முதலாக மணிசேகரன் உன் படத்தை என்னிடம் காட்டியதும் எனக்கு உடனே கண்ணப்பன் ஞாபகம்தான் வந்தது. அவன் முகச் சாயலை உன் படத்தில் பார்த்தேன்.

"சிறு வயதில் உன்னையும் பார்த்திருந்ததால் எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. உன்னை நேரில் பார்த்துப் பேசிக் கண்ணப்பனுடைய மகள் தான் என்று நிச்சயம் செய்து கொண்டேன். உனக்கு ஆதரவாக இருக்க உன் சொந்தத் தகப்பன் கண்ணப்பனாகவே நடித்தேன். இந்தச் சமயத்தில்தான் சேகர் வந்து சேர்ந்தான். முதலில் நீ என்னை 'அப்பா' என்று கூப்பிடுவது கேட்டு, அவனும் என்னைக் கண்ணப்பன் என்றே நினைத்திருக்கிறான். பின்னால் அவனிடம் இருக்கும் புகைப்படத்தையும் என்னையும் ஒப்பிட்டுப் பார்த்து விஷயத்தைப் புரிந்து கொண்டிருக்கிறான். உன்னுடைய தகப்பனாக நான் வேஷம் போடுவதை உன்னிடம் சொல்லக்கூடாது என்பதற்காகவே அவனுக்குப் பல முறை நான் பணம் கொடுத்திருக்கிறேன்.

ஆனால் நீயோ முன்பே எல்லாவற்றையும் தெரிந்து கொண்டிருக்கிறாய்."

"அப்பா! இதைக் கூடவா நான் புரிந்துகொள்ள முடியாது? சொந்தத் தகப்பனுக்கும் வேற்று மனிதனுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய் விடுமா, அப்பா? உங்கள் இருவருக்கும் இடையே சண்டை மூண்டிருக்கிறது என்ற வதந்தி கிராமத்தில் பரவியிருந்தது. அதற்குக் காரணம் திருமயிலத்தில் இருந்த பங்கஜமாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் சண்டை என்றுதான் 'தெரியுமே ஒழிய, யார் மடிந்தார்கள், யார் ஓடிப் போனார்கள் என்று ஒருவருக்கும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் எனக்கென்னவோ என் அப்பா இறந்து விட்டார் என்றுதான் தோன்றிக் கொண்டேயிருந்தது. திருமயிலத்துக்குக்கூட ஒரு முறை சென்று பங்கஜத்தை விசாரித்தேன். 'இன்று இரண்டிலொன்று தீர்த்து விடுகிறேன்' என்று சொல்லி விட்டு அரிவாளையும் எடுத்துக் கொண்டு நீங்கள் போனதாகச் சொன்னாள் அவள். அப்போது என் எண்ணம் உறுதிப்பட்டது. மறுபடியும் சென்னையில் உங்கள் அன்பைக் கண்டு முதலில் என் சொந்த அப்பாதானோ என்றுகூட யோசித்தேன். ஆனால் உங்களுடன் பழகிய இரண்டொரு நாட்களிலேயே உண்மை எனக்குச் சந்தேகமில்லாமல் தெரிந்து விட்டது.

"சென்னைக்கு வந்த பிறகு, நீங்கள் புது மனிதனைக் கல்யாணம் செய்து கொண்டு மனைவிமக்களுடன் வாழ்ந்து வந்தீர்கள். அவர்களுடன் சேர்த்து, என்னை ஒரே வீட்டில் வைக்க நீங்கள் விரும்பவில்லை. உங்கள் மனம் அதற்கு இடம் தரவில்லை. உங்கள் ஆதரவு எனக்கு அச்சமயம் தேவைப்பட்டது. முழு மனத்தோடு உதவக் கூடியவர்கள் யாருமற்ற நிலையில் இருந்த நான், சினிமா நட்சத்திரமாக வேண்டும் என்ற என் ஆசையை நீங்கள் பூர்த்தி செய்ய முடியும் என்று உணர்ந்து கொண்டேன். உங்களுக்கு எங்களிடம் இருந்த பரிவு உணர்ச்சியை என் அபிலாஷைகள் நிறைவேறப் பயன்படுத்திக் கொண்டேன். என் தங்கை சரஸ்வதிக்குத் தாயாகவும் தமக்கையாகவும் ஒரே சமயத்தில் நான் இருந்து வந்த போதிலும் தகப்பன் ஸ்தானத்தில் யாரேனும் இருக்க வேண்டியது அவசியமாயிருந்தது.

"இவை யெல்லாவற்றையும் உத்தேசித்து உங்களுடைய நடிப்பில் நான் ஏமாந்துவிட்டதாக நடித்தேன். என்னை ஏமாற்றி வருவதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் உண்மையில் நான்தான் உங்களை ஏமாற்றி வந்திருக்கிறேன்."

"மல்லிகா, நீ உத்தமி! தகப்பனைக் கொன்ற ஒருவனைக் காட்டிக் கொடுக்காமல் இருந்ததோடு அவனையே தகப்பனாகவும் பாவித்து வந்திருக்கிறாய்!"

"இனிமேலும் அப்படியே இருந்து வருவோம், அப்பா! உங்களை வணங்குகிறேன். அவரைக் கல்யாணம் செய்துகொள்ளச் சந்தோஷமாகச் சம்மதம் தாருங்கள். உங்களைத் தாத்தாவென்று அழைக்க, பேரன் பிறக்க வேண்டும் என்று தந்தையாக இருந்து மகளை ஆசீர்வாதம் செய்யுங்கள்."

மல்லிகா அவரை நமஸ்கரித்தாள்.

அவள் தோள்களைப் பற்றி எழுப்பித் தலையை அன்புடன் வருடினார் சுகுமாரன். "அம்மா! உன் இஷ்டப்படியே தந்தையின் ஸ்தானத்திலிருந்து இன்று ஆசீர்வதிக்கிறேன். ஆனால் நாளை முதல் எனக்கு அந்த ஸ்தானத்திலிருந்து விடுதலை கொடு."

"என்ன சொன்னீர்கள்?"

"உனக்கு நல்லதைத்தான் சொல்கிறேன், குழந்தாய்! கல்யாணம் செய்து கொண்டு புருஷன் வீட்டில் நீ சந்தோஷமாக இரு. உனக்கு நான் இனி செய்யக் கூடிய உதவி ஏதும் இல்லை. நான் செய்த அல்லது செய்யப் போகிற எந்தக் காரியத்தாலும் உனக்குக் கெட்ட பெயர் வர வேண்டாம். அது உன் புருஷனையும் பாதிக்கும். உங்கள் வாழ்க்கையே வீணாகிப் போகும். நான் உன் அப்பன் இல்லை என்பதை நடராஜனிடமும் அவன் தாயாரிடமும் சொல்லி விடு. நாளையிலிருந்து நீ யாரோ, நான் யாரோ!"

"அப்பா! செய்யப் போகும் காரியம் என்று எதைச் சொல்கிறீர்கள்?"

"அதையெல்லாம் என்னைக் கேட்காதே, மல்லிகா! நீ தெரிந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது."

சட்டென்று மல்லிகாவுக்கு ஒரு விஷயம் தோன்றியது. "அப்பா, சேகர் இருக்கும் வரை உங்களுக்கு மன நிம்மதி கிடையாது என்று எண்ணுகிறீர்கள் இல்லையா?" என்று கேட்டாள்.

"ஆமாம், மல்லிகா! எத்தனை நாட்களுக்குத்தான் அவன் என்ன செய்வானோ என்று பயந்து பயந்து சாக முடியும்? எவ்வளவுதான் அவனுக்குப் பணம் கொடுக்க முடியும்?"

"அப்பா! ஒரு கொலை புரிந்தது போதும். மறுபடியும் அதே குற்

றத்தைச் செய்யாதீர்கள். முன்பு நடந்ததைக் குடிபோதையில் செய்தீர்கள் என்று மறப்பேன், மன்னிப்பேன். ஆனால்இப்போது மனமறிந்து குற்றம் புரிந்தால் மன்னிக்கவே முடியாது.''

'' அதற்காகத்தான் சொன்னேன், 'நீ என் வாழ்க்கையிலிருந்தே விலகிக் கொள்' என்று. என்னைப் பற்றிய எல்லா விவரங்களும் உனக்குத் தெரிந்திருப்பதால் என் மனநிலையை உன்னால் ஊகிக்க முடிந்தது. நீ பேசாமல் இருந்து விட்டால் வேறு யாருமே சந்தேகிக்க மாட்டார்கள். அப்படி யாருக்கேனும் தெரிந்து போனாலும் அதனால் உண்டாகும் அவப் பெயர் என்னோடு போகட்டும். உன்னையும் உன் கணவனையும் சூழ வேண்டாம்.''

சேகருடைய இரும்புப் பிடியிலிருந்து தப்ப இரண்டுவழிகள் தோன்றின சுகுமாரனுக்கு. அவற்றில் முதல் யோசனையை மல்லிகா ஏற்றுக் கொள்ள மறுத்தாள். நடராஜனையும் அவனிடம் ஆசீர்வதிக்கச் சொன்னான். அப்படியானால் இரண்டாவது வழியைப் பின்பற்ற வேண்டியதுதான். வேறு விதமாக இந்த இக்கட்டான நிலையிலிருந்து மீள முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்படவில்லை.

அதைப் புரிந்து கொண்டாள் மல்லிகா. ''அப்பா! என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள். சுகுமாரன் தயங்குவதைக் கண்டு, ''எப்படியிருந்தாலும் உங்கள் காரியம் முடிந்த பிறகு எனக்குத் தெரியத்தானே போகிறது?'' என்றாள்.

''கதிர்வேலனுக்கு நடக்கவிருந்த விபத்து சேகருக்கும் நேரப் போகிறது, மல்லிகா!'' என்றார் சுகுமாரன்.

மல்லிகாவின் மனம் பதைபதைத்தது. உடல் உறைந்து விட்டது போல் செயலற்று நின்றாலும் அறிவு செயல்பட்டது. சேகருக்கு அந்த முடிவு ஏற்படுவதைத் தடுக்க வேண்டும், அவருக்கு எச்சரிக்கை செய்து தப்புவிக்க வேண்டும் என்று உறுதி பூண்டது. சுகுமாரன் மீண்டும் இத்தகைய பயங்கரமான காரியத்தைச் செய்ய அனுமதிக்கக் கூடாது என்று நிச்சயம் செய்து கொண்டது. அதற்காக ஒரு சிறிய நாடகமே நடத்தத் தீர்மானித்தாள்.

''அப்பா! நீங்கள் சொன்னது போலவே சேகரைச் சுண்டு விரலால் ஆட்டுவிக்க முயற்சி செய்கிறேன், அவரைக் கல்யாணம் செய்துகொள்ளவும் முயற்சி எடுத்துக்கொள்கிறேன்.''

சுகுமாரன் அவளை ஏற இறங்கப் பார்த்தார். ''மல்லிகா! நிஜமாகவே பேசுகிறாயா? நான் ஒரு பாதகத்தைச் செய்யாமல் தடுக்க நடராஜனிடம் நீ கொண்டிருக்கும் காதலைத் துறந்துவிடப் போகிறாயா? எனக்காக அவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்வாயா? வேண்டாம் மல்லிகா! வேண்டாம்! நீ முன்பு சொன்னது போல் என் சுயநலத்துக்காகப் பாடுபட்டது போதும். நான் எப்படியாவது போகிறேன். நீ சௌக்கியமாக இரு.''


''இல்லை, அப்பா! நானே என் மனத்தை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. சேகரிடம் செண்பகபுரம் கிராமத்திலே நான் கொண்ட காதலை மறக்க முடியவில்லை. யோசிக்க யோசிக்க அந்த எண்ணம் உறுதிப்படுகிறது'' என்று சொல்லிக்



கொண்டே டெலிபோனை எடுத்துச் சுகுமாரனுக்கு எதிரிலேயே சேகருடன் குழைந்து குழைந்து பேசினாள்.

பேசி முடிந்ததும் சுகுமாரனிடம், ''நாளை மாலை இங்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார். மறுபடி சினிமா நட்சத்திரமாக மாறுகிறேன் என்று கூறிக் கல்யாணத்துக்கும் சம்மதிக்கச் செய்கிறேன். அதுவரை பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

சுகுமாரனுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. மல்லிகாவின் பதற்றமும் தன்னை நம்ப வைக்க அவள் எடுத்துக் கொண்ட சிரத்தையும் அவசரமுமே அவளைக் காட்டிக் கொடுத்து உண்மையை விளக்கின. 'நடிப்புக் கலையில் இவள் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது' என்று எண்ணியவர், நாளை இரவு வரையில் காத்திருப்பதால் தவறில்லை என்ற முடிவுக்கு வந்தார். 'அவனைத் தீர்த்துக் கட்டுவதில் நான் எவ்வளவு



சென்னை பென்சில் தொழிற்சாலை, 'தேசா அண்டு கம்பெனி' இவற்றின் அதிபர் திரு வி. எம்பெருமானார் செட்டியார் இந்த வருடத்துக்குச் சென்னை நகர ஷெரீப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

தீவிரமாக இருக்கிறேன் என்பதைச் சேகர் மல்லிகா மூலமாக உணர்ந்து கொண்டால் ஒருவேளை அந்தப் படத்தையும் கடிதங்களையும் திருப்பிக் கொடுத்து விடலாமல்லவா?' என்று நினைத்தவராக, "சரி, மல்லிகா! நாளை இரவு வருகிறேன், சேகரின் முடிவைத் தெரிந்து கொள்" என்றார்.

"அப்பா! அவரைப் பித்தனாக அடிக்க முயல்கிறேன். ஆனால் அவர் அதற்குக் கட்டுப்படவேண்டுமே?"

"நீ முழு மனத்துடன் முயன்றால் வெற்றி கிட்டாமல் போகாது, மல்லிகா! கல்யாணமான பிறகு தன் மனைவியின் தகப்பன் கொலையுண்டு இறந்துபோன பழைய கதையைக் கிளற மாட்டான்."

"என்னால் இயன்றவரை முயல்கிறேன், அப்பா!" என்றாள் மல்லிகா.

* * *

மறுநாள் மாலை சேகர் வந்தபோது மல்லிகா காதலைப் பற்றியும் கல்யாணத்தைப் பற்றியும் பேசவில்லை. அவனுடைய உயிருக்கே ஆபத்து வந்து விட்டது என்பதை அவன் மனத்தில் பதியவைக்க அரும்பாடு பட்டாள். அந்த முயற்சி சிறிதும் பயனளிக்கவில்லை.

"இதே போலத்தான் ஊட்டியிலும் பயமுறுத்தினாய். எனக்கு என்ன நேர்ந்து விட்டது?" என்றான் அவன் அலட்சியமாக.

நேரத்தை வீணாக்காமல் முதல் நாள் இரவு நடந்தவற்றையெல்லாம் ஆதியோடந்தமாகச் சொன்னாள் மல்லிகா. "உங்களைச் சுண்டு விரலால் ஆட்டுவிக்கவேண்டும் என்கிறார் அப்பா. அதற்கு எனக்கு விருப்பமில்லை. அதில் நீங்கள் கட்டுப்படவும் மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அந்தப் புகைப் படத்தையும் கடிதங்களையும் திருப்பிக் கொடுக்காவிட்டால் நிச்சயமாகச் செத்துப் போவீர்கள்."

சேகர் சிரித்தான். "இந்தப் பயமுறுத்தலெல்லாம் என்னிடம் பலிக்காது, மல்லிகா! செண்பகபுரத்தில் கொலை செய்து விட்டுத் தப்பித்து விடலாம். சென்னையில் முடியாது."

"இல்லை. சத்தியமாகச் சொல்கிறேன். அவர் எதற்கும் துணிந்தவர். ஒரு கொலை புரிந்தாலும் இரண்டு கொலையானாலும் தண்டனை ஒன்று தானே? ஆகவே ஒரு முறை கொலை செய்தவன் மறுபடியும் அக்குற்றத்தைச் செய்ய அஞ்சவே மாட்டான். ஆனால் இரண்டாவதாகச் செய்யும் காரியத்தின் மூலம் எல்லாவற்றையுமே மூடி மறைத்து விட்டு நிம்மதியாக வாழமுடியும் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறது."

"மல்லிகா! உடம்பை அனாவசியமாக அலட்டிக் கொள்ளாதே! எல்லாம் வீண் முயற்சி" என்று சொன்ன சேகர் ஏளனமாகச் சிரித்துக் கொண்டே வாசலுக்கு நகர்ந்தான்.

மல்லிகா ஓடிச் சென்று அவனுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துத் தடுத்து நிறுத்தினாள். அவனைச் சூழ்ந்துள்ள அபாயத்தை எப்படியாவது உணரச் செய்ய வேண்டுமே என்ற கவலை அவளுக்கு.

ஆனால் அதே சமயத்தில் இன்னொரு அபாயம் உருவாகிக் கொண்டிருந்தது. மாலைப் பொழுதை மல்லிகாவுடன் சேர்ந்து இன்பமாகக் கழிக்க எண்ணி ஆவலோடு வந்த நடராஜன் சேகருடைய சிரிப்பொலியைக் கேட்டான். வாசலில் மல்லிகா சேகருடைய கரங்களைப் பற்றி இழுப்பதைப் பார்த்தான். மனக் கசப்பும் வெறுப்பும் ஒரே விநாடியில் விசுவரூபம் எடுக்க ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்காமல் திரும்பி நடந்து காரில் ஏறிக் கொண்டான். சண்டமாருதத்தில் உள்ளம் சிக்கித் தவிக்கக் காரை அதிவேகமாகச் செலுத்தத்தொடங்கினான். (தொடரும்)


பிரபல ஹிந்தி நாவலாசிரியர்
சுதர்சன்
எழுதிய
வானக்காமலர
தமிழாக்கம்
ரா.வீ.
ஜனவரி
18
கல்கி
பொங்கல் இதழில் ஆரம்பமாகிறது




# அன்னை திறந்த கண்கள்

கார்த்திகைபாலன்

'வடபழனி ஆண்டவர் மளிகை' என்னும் விளம்பரப் பலகையின் எழிலும் ஏற்றமும் அந்தக் கடையின் தொழிலிலும் தோற்றத்திலும் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. கடை முதலாளியின் பெயர் வேணுகோபால் முதலியார்.

முதலியார் என்றால் கடைச் சிப்பந்திகளுக்கு ஒரு நடுக்கம். வியாபாரத்தில் ரொம்பவும் கறார்ப் பேர்வழி; பணியாற்றுவோரிடம் கண்டிப்பு மிகுந்தவர். சிறு வயசு. அவர் தந்தையைக் கூப்பிட்டுப் பழகியவர்கள் தந்தைக்குப் பின் 'கல்லா' வில் வந்து அமர்ந்த தனயனையும் செல்லமாக முதலியார் என்றே அழைத்தார்கள். அவர் பார்வை தம்முடைய இருப்பிடத்துக்கு அருகில் இருந்த டெலிபோன் கருவியில் நின்று நிலைத்தது.

'காலணா அரையணாவுக்கு உப்புப் புளி மிளகாய் வியாபாரம் செய்ய ஆரம்பித்த அந்த நாளை நினைச்சால் எல்லாமே கனவாட்டந்தான் தோணுது; கனவென்ன, கனவு? அது வள்ளி மணவாளன் கருணை!' என்பதாக எண்ணக் கயிறு முறுக்கேறியது. இன்றைக்கு வியாபாரம் ரூபாய்க் கணக்கில், மூட்டைக் கணக்கில், மணங்குக் கணக்கில்!

''தம்பி! அரையணாவுக்கு உப்பு குடு!'' குடுகுடு கிழவி துட்டை நீட்டினாள்.

எடுபிடி ஆள் ஞானப்பிரகாசம் அரையணா வியாபாரத்தைக் கவனித்த பிறகு ஐம்பது ரூபாய் வரவுக்கான வழியில் சிந்தையைச் செலுத்தினார். ஆதனக் கோட்டை முந்திரிப் பருப்பு பெரிய டின் ஒன்றைத் தூக்கி விலாசமிட்டு வெளியே அனுப்பினார்; பணம் உள்ளே அடியெடுத்து வைத்தது.

வாய் பேசாமல், இதயத்தை மட்டிலும் பேச விடும் டெலிபோன் அழைத்தது; வேணு முதலியார் கருவியைக் காதுடன் பொருத்தினார்: ''யாரு, மாமாவா?.....மயிலாப்பூரிலே இருந்தா பேசறீங்க? அப்பிடியா? இப்பவே அனுப்பிடறேன்! ஆயிரந்தானே? சரிங்க!''

''முத்துசாமி!'' என்று குரல் கொடுத்தார் முதலாளி முதலியார்.

''அவரு இன்னிக்கு லீவுங்க!'' என்றான் ஞானப்பிரகாசம்.

நாணயம் புழங்க வேண்டிய கட்டத்துக்கு முதன் முதலில் அவர் நெஞ்சடியிலிருந்து கிளம்புவது முத்துசாமியின் பெயர்தான். எட்டு ஒன்பது வருஷங்களாக அவர் நிழல்தான் அவனுக்கு வாழ்வு, வளம் அனைத்துமா யிருந்தது.

'மாமாவுக்குஇப்பவே ஆயிரம் ரூபாய் அனுப்ப வேண்டுமே! யாரிடத்தில் அனுப்புவது?'

தீபாவளிக்கு ஜவுளி எடுத்த வகையில் உடனே கட்ட வேண்டுமாம்! காப்பி சாப்பிட வந்த கையுடன் 'போனை'யும் கையில் எடுத்தாராம்!

இருபது வயசை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த ஞானப்பிரகாசம் என்ற ஏவலாள் முதலியாரின் நினைவிலிருந்து நெஞ்சுக்குள் பிரவேசித்தான். சமயத்துக்கு ஒன்றிரண்டு முறை முத்துசாமியின் அலுவல்களை - நாணயத் தொடர்புள்ள வேலைகளைச் செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறான் ஞானப்பிரகாசம். நாலு வருஷங்களாக அவன் அங்கே பணி புரிந்து வருகிறான். கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை யெல்லாம் அவன் நாணயமாகவே நிறைவேற்றி யிருக்கிறான். இந்து, பத்து என்றாலும் நாணயம் 'நாணய'ந்தானே?

முதலாளியின் விழிகள் வெளிக் கடையைத் தாண்டி உள்ளே நுழைந்தன.

''ஞானப்பிரகாசம்....!''

ஞானப்பிரகாசம் வந்தான்; வந்தவனிடம் நூறு ரூபாய் நோட்டுக்கள் பத்து எண்ணிக் கொடுக்கப்பட்டன. போக வேண்டிய இடம் குறிக்கப்பட்டது. ''ஓ, தெரியுங்க, எசமான்!'' என்றான் அவன்.

அவன் சைக்கிளை எடுத்துத் தள்ளிக் கொண்டு புறப்படப் போனான்.

''ஞானப்பிரகாசம்! உங்க அம்மா வைத் தவிர வேறே யாரும் உனக்கு இல்லையா?''

''இல்லீங்க, ஐயா! எங்க அம்மாதான் எனக்குச் சகலமும்! அவங்கதான் என் தெய்வமுங்க!''

ஞானப்பிரகாசத்தின் கண்ணீர் வேணு கோபால் முதலியாரின் நெஞ்சிலிருந்து நல்ல மூச்சை தெட்டித் தள்ளியது.

''ஏய்! பணம் பத்திரம்!...போனதும் வந்ததுமா ஓடி வரணும்! ஆமாம்!''

ஞானப்பிரகாசத்தை வேலைக்கு வைத்துக் கொள்ளும்படி கண்ணீரும் கம்பலையுமாக வேண்டிய அவனது அன்னைவடிவம் நிழலாடியது. 'முருகா!' - அன்பான அழைப்பினிடையே முருகன் கலந்தான்!

ஆயிரம்! ரூபாய் ஆயிரம்! நாறு ரூபாய்த் தாள்கள்-பச்சை நோட்டுக்கள் பத்து!

ஞானப்பிரகாசத்தின் கண்கள் இடுப்பில் செருகப்பட்டிருந்த பணத்தைக்



கற்பனை செய்தன; மறுகணம் அத்தனை ரூபாய் நோட்டுக்களும் அவன் கைக்கு இடம் மாறின. மண்ணடி மாறி, பிராட்வே பிரிந்து, பிடாரியார் கோவில் தெரு முனையில் இருந்த பழைய பட்ட மரத்தடியில் சைக்கிளும் கையுமாக நின்றான் அவன். நூறு அடி தள்ளிச் சென்றால், அவனுடைய வாசஸ்தலம்!

ஒருகணம், அவனது உள்ளம் முதலாளியின் மளிகைக் கடையைச் சுற்றியது. காலையில் கடைக்குப் போய் ஒரு மணி நேரம் கழித்து, வீட்டுச் செலவுக்குக் கொஞ்சம் பணம் வேண்டுமென்று உரிமையாளரிடம் வேண்டினான் ஞானப் பிரகாசம்.

''இடைநடுவிலே காலணாக்கூடத் தர முடியாது. சம்பளம் ஏழாந்தேதி கொடுப்பதுடன் சரி!'' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிவிட்டார் முதலியார். இந்நிகழ்ச்சியை எண்ணியபோது, அவனையும் அறியாது பற்கள் 'நறநற'வென்று ஒலி எழுப்பின. கையிலிருந்த ரூபாய் நோட்டுக்களையே வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான் அவன். ஆயிரம் ரூபாய் பின்னணியிலே அழகானதொரு சொர்க்கலோகம் உருவாயிற்று. உடம்பை மூடிக் கொண்டிருந்த கந்தலும், கிழிசலும் பறிபோயின. வறுமை யிருள் திரையிட்டு மூடப்பெற்ற பொலிவிழந்த வதனத்தில் வனப்பும் வளமும் அணியலாயின. நடந்தான்; வீட்டு வாசல் வந்தது. சைக்கிளை 'ஸ்டாண்ட்' போட்டு நிறுத்தினான்; வெளித் திண்ணையில் குந்தினான் அவன்.

'தங்கம்...!'

உந்திக் கமலத்திலிருந்து உதயமான இந்தப் பெயர் எதிரொலி பரப்பி அடங்குவதற்குள், அவன் தஞ்சை மண்ணுக்குச் சொந்தமான வல்லத்துக்கு ஓடித் திரும்பி விட்டான். 'அத்தான்! நீங்களும் நாலு பேரைப்போல் கையிலே நூறு அம்பது பணம் சேர்த்துக்கிட்டுத் திரும்புகிறபோது தான் என்னை உங்க கையிலே ஒப்படைப்பாங்க என் அப்பா!' என்று சொன்னாளே தங்கம்!

ஞானப்பிரகாசத்தின் ஊனக் கண்கள் இரண்டினையும் மூடி மூடித் திறந்தான் தங்கம். அவளுடைய உடற் கட்டழகும், கண்களின் மின்வெட்டும், நமட்டுச் சிரிப்பும் அவனது சிந்தையைக் கலக்கின. கொய்யாப்பழத்தை மறைத்தாலும் அதன் மணத்தை மறைக்க முடியாதல்லவா? அதுபோலத்தான் அவன் இதயத்தில் மறைந்திருந்த அவள் மணம் தந்து மனத்தில் இறக்கம் வளர்த்தான். மீண்டும் யோசனை! 'ஆமாம்; இப்பவே புறப்பட வேண்டியதுதான்! தங்கத்தைப் பார்த்தால்தான் மனம் ஆறும்!'

பணத்தைச் சட்டைப்பையில் திணித்துக் கொண்டு சைக்கிளை வீட்டு வாசலில் சாய்த்து வைத்து விட்டுப் புறப்பட்டான் அவன். இரவு ஏழரை மணி ரயில் அவனையும் சுமந்து பறந்தது.

'அம்மாவுக்குத் தெரிஞ்சா - பணத்தைக் கையாடின சேதி அவங்க காதுக்கு எட்டினு, என்னை உசிரோடு வைச்சுக் கொளுத்திப்பிடுமே!' என்ற திடில் உணர்வு பெற்றவனின் கண்களுக்கு மறைவாகப் பிரிந்து வந்ததற்கு ஆறுதல் மொழி விடுத்தது. மனம் ஒரு வானவில். பல வண்ணம் காட்டுமே...!

''தங்கம்!''

''அத்தான்!''

பொங்கும் காவிரியின் சீதனமான கிளைக் கால்வாயின் திட்டொன்றில் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தனர்.

"தங்கம்! நான் பட்டணத்துக்குப் புறப்படுகையில் நீ கொடுத்து அனுப்பிய எச்சரிக்கை எனக்குள்ளே வைராக்கியத்தை வளர்த்தது. பணமும் கையுமாக வந்திருக்கிறேன்!"

"அத்தை வரலீங்களா?"

"அவங்க பட்டணத்திலே வெத்திலே பாக்குக் கடை நடத்துறாங்க. என்னைச் சேதி சொல்ல இங்கே அனுப்பினாங்க. உனக்கு நகை நட்டு செஞ்சாகணும். அது முடிஞ்சதும் தந்தி கொடுத்து அம்மாவை அழைச்சுக்குவேன்!" என்றான் ஞானப்பிரகாசம்.

பணம் பத்தரை மாற்றுப் பசும்பொன்னாக உருகிப் பத்துபடிடம் அடைக்கலம் புகுந்தது; தங்கத் தாலி உருவானது; பரிசம் போடவும், முகூர்த்தம் வைக்கவும் தேதி குறிக்கப்பட்டது.

அதுசமயந்தான், அவன் தலையில் பேரிடி ஒன்று விழுந்தது. பட்டணத்துக்குச் சென்று திரும்பிய ஊர்க்காரர் ஒருவர் அவனிடம் வந்தார்: "தம்பி! என்ன காரியம் செஞ்சிட்டே? நீ வேலை செஞ்ச முதலாளி யார்கிட்டயோ கொண்டுபோய்க் கொடுக்கச் சொன்ன ஆயிரம் ரூபாயை நீ எடுத்துக்கிட்டு வந்திட்டியாமே! நீ செஞ்ச தப்புக்காக உன் அம்மாவை ஜெயிலிலே போட்டு அடைச்சிட்டாராம் உங்க முதலாளி" என்றார்.

ஞானப்பிரகாசத்தின் முன்னர் உலகம் ஆலவட்டம் சுற்றியது.

'எசமான்! எனக்கு எங்க அம்மா தானுங்க தெய்வம்!' என்று அன்றொரு நாள் முதலாளியிடம் கண்ணீருடன் சொன்ன வாசகம் நினைவுக்குள் நின்றது. 'அம்மா! உன்னை நான் காணவே முடியாதா? ஐயோ! எப்படி நான் இனிமேல் பட்டணத்துக்குள்ளே அடியெடுத்து வைக்க இயலும்?...நான் திருடினதுக்காக என் தாயார் தண்டனை அனுபவிக்கிறதா? கூடாது! பாக்கியிருக்கிற எண்ணூறு ரூபாயைக் கொண்டுபோய் எசமானர் கையிலே கொடுத்து, அவர் காலிலே விழுந்து கெஞ்சி மன்னிப்புக் கேட்கணும்.'

"ஏ, ஞானப்பிரகாசம்!"

வழிந்த வியர்வையைத் துடைக்கக் கூட உணர்வின்றி ஏறிட்டுப் பார்த்தான் ஞானப்பிரகாசம்.

பேச நா எழவில்லை. குனிந்து சட்டையைப் பார்த்தான். பணத்தைக் காணோம்! 'அப்படியானால், நான் கண்டது அத்தனையும் நிஜமாகவே கனவில்லையா?....மெய்தானா.....?'

ஞானப்பிரகாசம் அழுதான். "அம்மா! நான் தப்பு செய்ய நெனைச்ச குற்றத்துக்குப் பகவான் எனக்குத் தண்டனை கொடுத்திட்டார் அம்மா!... முதலாளி அவங்க மாமனார் கையில் சேர்க்கச் சொல்லி அனுப்பிய ஆயிரம் ரூபாய்ப் பணத்தையும் பையிலே வைச்சிருந்தேன். அதை எடுத்துக்கிட்டு உங்கிட்டே கூடச் சொல்லாமல் தங்கத்தைக் காண ஓடிப் போயிடணும்னு நெனைச்சேன். அந்தத் தப்புக்குத் தண்டனை கிடைச்சுட்டது. யாரோ பணத்தைக் களவாடிட்டாங்க!"

மகா துர்க்கை'யென மாறினாள் கோசலை அம்மாள். "ஐயோ...! பாவி நீ...! உன்னை நம்பினவங்களுக்கு நீ துரோகம் செஞ்சியா?"

வீறுகொண்டு அவனைக் கன்னத்தில் அறைந்தாள் அவள்.

அப்பொழுது, ரிக்ஷா ஒன்று வீட்டு வாசலில் வந்து நின்றது.

"கோசலை அம்மா....!"

கோசலை அம்மாள் கண்களைச் சேலைத் தலைப்பினால் துடைத்தபடி தலை நிமிர்ந்தாள். வேணு முதலியார் நீறும் நகையுமாக நின்றார். அவர் கண்கள் ஞானப்பிரகாசத்தின் முகத்தைச் சுற்றின. கைத் தழும்பு பதிந்த ரேகைகள் பளிச்சிட்டன.

"எசமான்! என்னைக் காப்பாத்துங்க, எசமான்!" என்று ஞானப்பிரகாசம் எஜமானரின் கால்களிலே விழுந்தான்.

"என்னம்மா இது..? நீங்கதான் உங்க மகனை இப்படி அறைஞ்சீங்களா? ஏம்மா?"

"ஆமாங்க! நான் பெற்ற மகனை நானேதான் அறைஞ்சேனுங்க. நீங்க என் வார்த்தைக்கு நம்பிக்கை வைச்சுத் தானுங்களே என் மகனை வேலைக்கு வைச்சுக்கிட்டீங்க....? அந்த நாணயத்தைக் காப்பாத்த வேண்டியதுதானுங்களே இவன் கடமை....!"

"ஞானப்பிரகாசம்......! எழுந்திரு. உன்னை எனக்கு முந்தி உன் அம்மாவே காப்பாற்றிவிட்டாங்க. நான் கொடுத்த ஆயிரம் ரூபாயைச் சட்டைப் பையில் வைத்துத் தூங்கும்போது, 'தங்கம்.... தங்கம்'னு புலம்பினதைக் கேட்ட உன் அம்மா உன் மனசிலே ஓடின கெட்ட எண்ணத்தை யூகிச்சு, பயந்து போய் அந்தப் பணத்தை எடுத்தாந்து என் கையிலே ஒப்படைச்சிட்டாங்க. 'அகத்திலே இருக்கிறது முகத்திலே தெரியும்'னு சொல்கிற வாக்கை எண்ணிப் பார்த்து, முன் ஜாக்கிரதையாக நடந்துக்கிட்டாங்க. உன்கிட்டே நான் ஆயிரம் ரூபாயைக் கொடுத்தனுப்புகிறபோது, உன்னை நான்கூடச் சந்தேகப்பட்டேன். பணத்தை உன் கையில் தந்தவுடன், நான் உன்கிட்டே உங்கம்மாவைப் பற்றிக் கேட்ட கேள்விக்கு 'எங்கம்மாதான் எனக்குத் தெய்வம்!'னு நீ கண்ணீருடன் சொன்ன அந்தப் பதில்தான் என் மனசில் உன்னைப் பற்றி நன்னம்பிக்கையை உண்டாக்கியது. அதன் பிறகுதான் நானும் முருகனை நம்பி நிம்மதியானேன். எப்படியும் என் பணம் பிழைத்தது. நீயும் பிழைத்தாய்....! இந்தா பத்து ரூபாய்....! செலவுக்கு வேணும்னு காலையிலே கேட்டியே....? அதைக் கொடுத்திட்டுப் போகவும், உன்னை மறுபடியும் வேலைக்கு அழைச்சுப் போகவும்தான் வந்தேன். இந்தப் பத்துரூபாய் என் அன்பளிப்பு....! ம்...!" என்றார் வேணு.

கோசலை அம்மாள் குறுக்கிட்டாள்: "எசமான்! பத்து ரூபாயை நீங்களே வைச்சுக்கிடுங்க. எங்க வயிற்றிலே நீங்க போடுகிற சோறுதான் நித்தமும் அன்பளிப்பாகக் கிடைக்குதுங்களே....!"

அருமை மகனின் கண்களைத் திறந்து கண்ணீரைத் துடைத்த அன்னை ஆண்டவனை நோக்கி, "தெய்வமே! என் பிள்ளைக்கு எப்போதும் நல்ல மனசையும், நல்ல நினைப்பையும், நல்ல செய்கையையும் கொடு. வேறு சொத்து வேண்டாம்!" என்று வேண்டினாள்!



அமிர்தாஞ்சனம்
வலிகளை
அறவே
போக்கிவிடுகிறது
மிகச் சக்தி வாய்ந்த வலி நிவாரணியென, 65 வருடங்களுக்கு மேலாக நற்பெயர் பெற்றுள்ளது அமிர்தாஞ்சனம் எல்லா விதமான தசைவலிகள், களுக்கு, இடுப்புவாத நோய், தலைவலி, ஜலதோஷம், முதுகுவலி, பல்வலி எல்லாவற்றிலிருந்தும் உடனடி நிவாரணம் அளிக்கிறது. வலியாற்றிய பிறகு எவ்வித வினையும் விளைவிக்காது: காரணம், வலிகண்ட இடத்தில் மட்டுமே உபயோகிக்கப்படுகிறது.
பரீட்சித்துப் பாருங்களேன்.
முதல் மருந்தாக உபயோகித்துப் பாருங்கள். 9 இல் 7 வகை வலிகளை அது அறவே போக்கிவிடுகிறது.
அமிர்தாஞ்சன் லிமிடெட் சென்னை-4
மற்றும் பம்பாய் 1, கல்கத்தா 1
அமிர்தாஞ்சனம் இன்ஹேலர் ஜலதோஷத்தையும் மூக்கடைப்பையும் அகற்றுகிறது
AL-58 4C TAM.




இருமல்!
இருமலிக்கும்
நிரந்தரமான குணத்திற்கு
COUGH SYRUP
பி. ஐ. காப் ஸிரப்
பெங்கால் இம்யூனிடி

# குதூகலம் நிறைந்த குடும்பம் திட்டத்தின் ஒரு அம்சம்

திறமையான குடும்ப நிர்வாகம் அதன் நலத்திற்கு உதவுவதுடன் நாடு முன்னேறவும் வகை செய்கிறது.

- எதையும்—முக்கியமாக உணவுப் பொருள்களை — வீணாக்க வேண்டாம்.
- புழக்கடையில் காய்கறி பயிரிடுங்கள். இதனால் தட்டுப்பாட்டைத் தவிர்க்கலாம்
- அனாவசியமான எந்தப் பொருளையும் வாங்காதீர்கள்.
- ஓய்வு நேரங்களில் பின்னல் அல்லது தையல் வேலையில் ஈடுபடுங்கள்.
- குடும்பக் கட்டுப்பாடு குதூகலத்திற்கு உதவுகிறது.
- உங்கள் குழந்தைகள் உன்னத பிரஜைகளாவதற்கு உகந்த பயிற்சி அளியுங்கள்.
- அதிகம் சேமித்து இந்திய அரசாங்க சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யுங்கள்.

## திட்டத்திற்கு உதவுவது உங்களுக்கு உதவுவதாகும்






## 85. நேயர்கள் கடிதம்

(மெச்ச வேண்டிய விஷயம்)

அரிய குணங்களைப் பெற்றவரைப் பற்றி மெச்சிப் பேசும்போது, "இந்த மாதிரி குணசாலி நூற்றில் ஒருவன் தேற மாட்டான்" என்பது வழக்கம்.

"சேச்சே! ஆயிரத்தில் ஒருவன் என்று சொல்லு" என்று ஒரு திருத்தத்தைச் செருகுவார் ஆமோதிப்பவர்.

கடிதம் 1252/2-ல் பாலக்காடு நண்பர் எழுதுவதைப் பார்த்தால் ஆயிரத்தில் ஒருவர் என்பதும் சரியல்ல, 1252 ல் ஒருவர் என்று சொல்வதுதான் சரியென்று எண்ணத் தோன்றுகிறது.

பலாச்வகந்தாதி தைலத்தைச் செய்யும் முறையை விளக்கி எழுதும்படி கடிதம் 767/2-ல் இவர் கேட்டிருந்தார். 'இதை எழுதுவது கட்டுரையாகுமே! கடிதத்துக்குப் பதிலாகாதே!' என்று பதில் எழுதியிருக்க வேணுமென்று கணிக்கிறேன். இதைத் தொடர்ந்து நண்பர் எழுதியுள்ளார்.

"தங்கள் கடிதம் எண் (767/2)னில் பலாச்வகந்தாதி தைலம் உண்டாக்கும் முறையைக் கடிதம் மூலம் எழுதுவது சாத்தியமில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். இவ்விடம் பலாச்வகந்தாதியின் விலை அவுன்ஸ் ஒன்றுக்கு அணா ஐந்து. தினமும் 2 அவுன்ஸ் வீதம் உடம்புக்குத் தேவையாகிறது. அப்படியானால் தினமும் இதை உபயோகிக்கக் கட்டுப்படியாகுமா? தாங்கள் இப்போது "சரீர புஷ்டியை" (புல் தடுக்கி)ப் பற்றிக் 'கல்கி'யில் எழுதுகிறீர்கள். அத்துடன் பலாச்வகந்தாதி தைலத்தைச் செய்யும் முறையை விளக்கினால் எல்லோருக்கும் ரொம்பவும் நன்மையாகும். இத்தைலம் செய்யும் முறையைத் தாங்கள் இதுவரையில் 'கல்கி'யில் எழுதவில்லை."

மெச்ச வேண்டிய கடிதந்தான். உடல் மெலிந்தவர் தினசரி எண்ணெய்க் குளி செய்வதால் பருமனாகும் என்று எழுதியது உண்மை. இதற்கு உடம்புக்குத் தேய்த்துக் குளிக்கப் பலாச்வகந்தாதி தைலம் மிகவும் விரும்பத் தக்கது என்பதும் உண்மை. 'புல்தடுக்கி'க் கட்டுரையின் கீழ் இத் தைலத்தைச் செய்யும் முறையை விளக்கி எழுதுவது பொருத்தமானதாகும்; சந்தேகமில்லை. இதற்கு முன் எழுதாத விஷயமானதால் இதை இந்தச் சந்தர்ப்பத்தில் கட்டாயம் எழுதுவதுதான் முறையாகும்.

பலாச்வகந்தாதி தைலம்:-- பெருந்தூளாக இடித்தெடுத்த நாட்டு அமுக்கிராங்கிழங்கு முக்கால் வீசை [90 தோலா இரண்டே கால் ராத்தல்] அவ்விதமே பெருந்தூளாக இடித்த சிற்றாமுட்டியின் வேர் முக்கால் வீசை. இவற்றைப் பத்து [பட்டணம்] படி ஜலத்திலிட்டுக் கொதிக்க வைத்து, மூன்று படி கஷாயமாகக் காய்ச்சி மருந்துகளைக் கசக்கிப் பிழிந்து களைந்து கஷாயத்தை வடிகட்டிக் கொள்ளவும்.

கொம்பரக்கு என்னும் கடைச்சரக்கை இடித்துச் சலித்த நுண்பொடி முக்கால் வீசை. இதிலிருந்து தேயிலைக் கஷாயம் இறக்குவது போல் மூன்று படி வெந்நீரில் கஷாயம் இறக்கிக் கொள்ள வேணும். ஜலம் அதிகமாகி விட்டாலும் பாதகமில்லை. கொம்பரக்கு ஊறின பிறகு கிடைக்கும் கஷாயத்தில் செந்நிறம் [கூடுமான வரையில்] இல்லாமல் இருத்தல் அவசியம். அதுவரையில் மறுபடியும் மறுபடியும் வெந்நீர்விட்டு ஊறின பிறகு வடிகட்டிக் கொள்ளல் அவசியம்.

இவ்விரு வகைக் கஷாயங்களையும் ஒன்றாய்க் கூட்டி நாலு வீசை நல்லெண்ணெயும் நாலுபடி தயிரிலிருந்து எடுத்த ஜலமும் சேர்த்துக் கொள்ளவும்.

இத்துடன் சித்தரத்தை, சந்தனம், மஞ்சிட்டி, அருகம்புல், கோரைக்கிழங்கு, கோஷ்டம், அதிமதுரம், இச்சிலிக் கிழங்கு, நன்னாரியின் வேர் மேல்பட்டை, விளாமிச்சன் வேர், அகில் கட்டை, தேவதாரு, மஞ்சள் செங்கழுநீர்க் கிழங்கு, சதகுப்பை, தாமரை கேஸரம் ஆகியவற்றை வகைக்கு மூன்று தோலா வீதம் எடுத்து இடித்து அம்மியிலிட்டு வெண்ணெய் போல் ஜலம் விட்டு அரைத்துச் சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும்.

யாவற்றையும் ஒன்றாக்கி அடுப்பில் ஏற்றிக் காய்ச்சவும். கல்கம் [அடியில் நிற்கும் கடுவன்] மொறமொற வென்று ஆகும்போது இறக்கி வடிகட்டிக்கொள்ளவும். இது தான் பலாச்வகந்தாதி தைலம். இதைத்தான் நான் உபயோகிப்பது வழக்கம்.

கடிதம் 1270/2 ல் நெய்வேலி நண்பர் கேட்கிறார்: "...நமது நாட்டில் பச்சை குத்துதல் என்ற ஓர் பழக்கம் நெடுநாட்களாக இருந்து வருகிறது.... இந்தப் பச்சையை எடுத்து விடுவதற்கு நாட்டு

வைத்திய முறையில் சாத்தியமா என்பதும், வடு தெரியாமல் எடுக்க முடியுமா என்பதையும் தெரிந்துகொள்ள மிக்க ஆவல்....'' என்று எழுதுகிறார்.

எனக்குத் தெரிந்த சிகிச்சை எதுவுமில்லை. ஆகவே இந்தப் பச்சை விஷயமாக எனது அபிப்பிராயம் 'சும்மாயிருத்தலே சுகம்' என்பதுதான்.

கடிதம் 1283/2 ல் பூனாவிலிருந்து ஒரு சகோதரி எழுதுகிறாள். தன் கணவருக்குப் பத்து வருஷங்களுக்குமுன் தொடங்கிய சிறிய ஜலதோஷத்தைத்தொடர்ந்து அவ்வப்போது உண்டான இருமல் சளி இவை காலக்கிரமத்தில் ஆஸ்துமாவாகி இப்போது ''இனி என்ன சிகிச்சை?'' என்ற நிலைக்கு வந்துள்ளது என்று எழுதுகிறாள்.

இதனிடையில் பார்க்காத வைத்தியமில்லை; கொடுக்காத மருந்தில்லை. ''விலையுயர்ந்த மருந்துகளுடன் கூடிய மிக்ஸ''ரில் தொடங்கி, இரவில் படுக்கும் முன்பு சாப்பிட்டுப் படுக்கும் மாத்திரைகள், அட்ரினலின் இன்ஜெக்ஷன் என்றாகி, அதற்கும் சட்டை பண்ணாத நிலையில் க்ளுகோஸ்-டன் கூடிய அமினோபிலின் என்ற மருந்தை (அசுத்த ரத்தக் குழாய் மூலம்) ஊசி போடுவது என்றாயிற்று. இதை அடிக்கடி உபயோகிக்கக் கூடாது என்றார்களாம். ஆனாலும் மாதத்தில் 1--2 தரம் வேறு வழியில்லை என்ற காரணத்தால் இந்த ஊசியை ஏற்றிக் கொண்டு வந்தார். அதிகமாகி விடும் போது ஆஸ்பத்திரியில் சென்று படுத்திருந்து வருவதும், ஆஸ்பத்திரியில் பிராணவாயுவை ஏற்பதுமாக இருந்து கடைசியில் அனேக பரீட்சைகளையெல்லாம் செய்து இது சுவாஸகாசந்தான் என்று நிச்சயித்தனர். இதற்காக ஹைட்ரோகார்டிஸோன் மாத்திரை (ஒரு மாத்திரை விலை ரூபாய் இரண்டு) களைத் தினம் ஒன்றுக்கு நான்குவீதம் கொடுத்து, வரவரக் குறைத்துத் தினம் 1 மாத்திரை வீதம் சாப்பிட்டு வந்தார். அதையும் மீறி இந்த வருஷம் ஆஸ்துமா வந்து ஆஸ்பத்திரி சென்று ஆக்ஸிஜன் ஏற்றுக் கொள்ளும்படி ஆயிற்று. இப்போது டெல்டா கார்டோன் மாத்திரையும் பென்ஸிடில் என்ற மாத்திரையும் சாப்பிடுகிறார். ஆயினும் முன்பு ஏற்பட்ட அளவு குணம் கிடைப்பதில்லை. உடல் வரவர மெலிகிறது. இவ்வளவுக்கும் ரத்தத்தில் ஈஸினோபைல் 6 சதவிகிதந்தான் இருக்கிறது. ஆனாலும் இந்த ஆஸ்துமா ஏன் இப்படிக் கடுமையாக அதிகரித்துக்கொண்டே போகிறது? இனி என்ன சிகிச்சை செய்வது?'' என்று கேட்கிறார் இந்தச் சகோதரி.

சுவாஸாசய சம்பந்தமான ரோகங்களோடு போரிட்டுத் தற்காப்பளிப்பதற்காக ஈசனருளிய படைபலந்தான் நமது சரீரத்தில்---ரத்தத்தில் உள்ள ஈஸினோபைல் என்னும் வெண்ணிற ஜீவாணுக்கள். ஈஸினோபைலின் சத விகிதம் அதிகரிக்குமானால் நமது படைபலம் அதிகரிப்பதாகத் தெளிய வேண்டும். அந்தப் படைபலத்தைக் குறைக்கும் வகையில் ஈஸினோபைல்களைக் கொல்லக் கொடுக்கும் மருந்துகள் யாவும் கோட்டைக்குள் படைவெட்டுப் போல் சரீரத்தின் தற்காப்புச் சக்தியைக் குறைத்துக் குலைத்து விடுபவையாகும். இதனால் வியாதிக்குப் பலம் அதிகரிக்கும். விரைவில் மூர்த்தன்ய நிலையை அடைய வாய்ப்பும் உண்டாகும். சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கிருமிகர (Antibiotic) மருந்துகளெல்லாம் இவ்விதத்தில் சில சமயம் நமக்கே இன்னலை விளைவிக்கும் இயல்பு பெற்றவை என்று மேல்நாட்டு வைத்திய நிபுணர்களில் தலைசிறந்த உலக மேதைகள் தெரிவித்துள்ளதையும், தெரிவித்து வருவதையும் பொருட்படுத்தாமல் இந்த ஆண்டிபயாடிக் என்னும் மருந்துகளை நம்மூரில் கையாண்டு வருவதை என்னவென்பது? இவ்வகை மருந்துகளைக் கொடுக்கக் கொடுக்க---ஈஸினோபைலும் குறையக் குறைய---நமது ஆரோக்கியத்தைக் காக்கும் படைபலமும் குறைந்து கொண்டு வரும். அப்போது ரோகத்தின் பலம்?.....அது நாளொரு 'காம்ப்ளிகேஷ'னும் பொழுதொரு புதிய உபத்திரவமுமாகக் கப்பும் கிளையும் கீழ்க் கன்றுகளும் பெற்று வளரும். அடியோடு காப்புப் படைபலம் இல்லாத நிலையில் எந்த மருந்துதானாகட்டும், என்ன சாதித்துவிட முடியும்? ஒன்றை விட்டு ஒன்று பற்றிய கதையாக, இந்த 'ஆண்டிபயாடிக்' என்னும் மருந்துகளை மாற்றி மாற்றிக் கொடுப்பதால் என்ன பயன்? குறிப்பிட்ட தற்காப்புப் படைபலமாகிற ஜீவாணுக்களைக் கொன்ற பிறகு இன்னும் எதையெல்லாம் கொல்ல முடியும், என்னென்ன நாசத்தை விளைவிக்க முடியும் என்ற வகையில்தான் தொடர்ந்து கொடுக்கப்படும் இதுமாதிரியான 'ஆண்டிபயாடிக்' மருந்துகள் எல்லாம் செயல் புரிய முற்படும்.

நாட்டு வைத்திய முறைப்படி என்ன செய்யலாம் என்பதை எழுதினேன். இதை அறியாத 'கல்கி' வாசகரே இருக்க முடியாது. அவ்வளவு விஸ்தாரமாக ஆஸ்துமா - ஈஸினோபைல் ஆகியவற்றைப் பற்றி எழுதியாயிற்று. இப்போது இங்கும் எழுத வேணுமா? (தொடரும்)



அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்




மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!

# நிழல் வாழ்வு

எஸ்லார்வி

கண்ணபிரான் படபடப்புடன் உள்ளே வந்தான். "ராதா! ராதா!" என்று அவன் போட்ட கூச்சலில் அந்த வீடே அதிர்ச்சியடைந்தது. மாடியில் இருந்த ராதா வேகமாக இறங்கி வந்தாள். கணவனின் முகத் தோற்றம் அவளைக் கதிகலங்க வைத்தது. 'எதற்குக் கூப்பிட்டீர்கள்?' என்று கேட்கக் கூடத் தோன்றாமல் அவன் முகத்தையே உற்றுப் பார்த்தபடி நின்றாள். அவனும் சற்று நேரம் அவளையே வெறுத்து நோக்கினான். உடுப்புகளைக் கழற்ற வேண்டும் என்ற உணர்வுகூட அவனுக்கு ஏற்படவில்லை.

"வெள்ளிக்கிழமைமாலை நீ எங்கே போயிருந்தாய்?"

"பெரிய கோயிலுக்கு."

"பெரிய கோயிலுக்குப் போக வேண்டாம் என்று எத்தனை தடவைகள் நான் உனக்குச் சொல்லியிருக்கிறேன்? என் வார்த்தையில் உனக்கு மதிப்பு இல்லையா? ஏன் போனாய்?"

"குத்தனத்துக்கு உடம்பு குணமானதும் கற்பகவல்லி சந்நிதியில் நெய்விளக்கு ஏற்று வதாக......"

"அட சட்! மூடு வாயை! இந்தக் கதையெல்லாம் எனக்கு வேண்டாம். ஏதாவது ஒரு நொண்டிச் சாக்கை வைத்துக் கொண்டு அங்கே போவதிலேயே நீ குறியாக இருக்கிறாய் என்பது எனக்கு நன்கு தெரியும்."

"என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? தெய்வத்துக்கு நேர்ந்துகொண்ட பிரார்த்தனையை நிறைவேற்றக் கோயிலுக்குப் போவதுகூட ஒரு குற்றமா, என்ன?"

"அடாடடா! தெரியும் உன் பக்தியும், பணிவிடையும்? ஏதாவது முகாந்திரத்தை வைத்துக் கொண்டு அங்கே போக வேண்டும்; அந்தப் பிச்சைக்கார ஜனங்களைப் பார்த்து ஒரு குரல் அழுது விட்டு வர வேண்டும். அது தானே உன் நோக்கம்! எனக்கா தெரியாது!" - கண்ணபிரான் உறுமினான்.

ராதா நிலத்தை நோக்கி முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

"ஏய், இங்கே பார்! ஏன் பேசவில்லை? ஏன் வாயடைத்து நிற்கிறாய்?"

ராதா வாய் திறக்கவேயில்லை. அவன் கோபம் அதிகரித்தது. "என்னை என்னவென்று எண்ணிக் கொண்டாய்? கேட்கக் கேட்கப் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்?" என்று சீறிக் கொண்டே அவன் கழற்றி வீசியெறிந்த கோட்டு அவள் முகத்தில் மோதித் தரையில் விழுந்தது. அவள் குனிந்து அதை எடுத்துப் போய் ஸ்டாண்டில் மாட்டினாள்.

மலைக்கும் மடுவுக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ, அவ்வளவு வித்தியாசம் ராதா-கண்ணபிரான் இருவருக்கும் இடையே அந்தஸ்தில் உண்டு. மகாலிங்கம் எளிய குமாஸ்தா. மகளின் மேதாவிலாசம் அவர் மனத்தைக் கவர்ந்தது. அவளை அவர் படிக்க வைத்தார். உயர்நிலைப் பள்ளியிலிருந்து கல்லூரியையும் எட்டி விட்டாள் ராதா. ஆனால் அவளுக்குப் பின் பல காலம் கழித்துப் பிறந்த குருமூர்த்திக்கு அந்த வாய்ப்பு இல்லாது ஒழிந்தது. அவன் மூளையில் படிப்பு நன்றாக ஏறவில்லை என்பது மட்டுமே அதற்குக் காரணம் அல்ல; மகாலிங்கம் வேலையை இழந்து ஓய்வு பெற்றதும் பிறகு நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் வீழ்ந்ததும் முக்கிய காரணங்கள் ஆகும். குடும்பம் வறுமையால் சங்கடப்படத் தொடங்கியதும், ராதா படிப்பை நிறுத்தி விட்டு ஏதாவது வேலையில் ஈடுபடுவதாகச் சொன்னாள். பெற்றோர் வேறு வழியின்றி அவள் ஆலோசனையை ஏற்றனர்.

மனுப் போட்ட இடங்களில் ஒன்றிலிருந்து பேட்டிக்கு அழைப்பு வந்தது. அவள் சென்றாள். அவளுடைய தோற்றம், பார்வை, முறுவல், பேச்சு, சாதுரியம் முதலியன உதவி மானேஜரின் உள்ளத்தை ஒரேயடியாகக் கவர்ந்தன. உத்தியோகம் சம்பந்தப்பட்ட கேள்வி பதில் முதலியவற்றுக்குப் பிறகு அவர் அவளிடம் வேறு சில வார்த்தைகளும் பேச எண்ணினார். ஆனால் அதற்கு ஏற்ற இடம் அது அல்ல என்பதனால், "முடியுமானால் மாலையில் இந்த விலாசத்துக்கு வந்து என்னைப் பார்" என்று ஒரு சீட்டை அவளிடம் கொடுத்தார். விடைபெற்று அங்கிருந்து வெளியேறிய ராதா அந்தக் காரியாலயத்து வாசலிலேயே அந்தச் சீட்டைக் கிழித்துப் போட்டு விட்டு வீட்டுக்குப் போய் விட்டாள்.

"என்ன, அம்மா! ஏதாவது பலன் உண்டா?" என்று முக்கல் முனகல்களின் இடையே கேட்டார் மகாலிங்கம். "பலன் கிடைக்கும் என்று தோன்றுகிறது. ஒரு வாரத்தில் தெரியும்" என்று ராதா மையமாகப் பதில் சொன்னாள். உதவி மானேஜர் தம் வீட்டுக்கு அழைத்தார் என்று சொன்னாலோ, அதனால் தன் மனம் சஞ்சலமடைகிறது என்று காட்டிக் கொண்டாலோ தகப்பனார் வேதனைக்கு உள்ளாவார் என்பதனால் அவள் அதையெல்லாம் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. அந்த இடத்தை மறந்து வேறு இடங்களில் வேலைக்கு முயன்று கொண்டிருந்தாள்.

நாட்கள் சென்று கொண்டிருந்தன. ஒரு நாள் மேற்குறித்த உதவி மானேஜரும், ராதாவும் தற்செயலாகத் தெருவிலே சந்தித்துக் கொண்டனர். அவளைக் கண்டதும் காரை நிறுத்தி விட்டு இறங்கி வந்த அவர் மிகவும் அன்பாக அவளிடம் பேசினார்: "ஏன் நீ அன்று என் வீட்டுக்கு வரவில்லை?" என்று கேட்டார். அவரைக் கண்டதும் முதலில் தடுமாறிய ராதா ஒருவாறு சமாளித்து வணக்



"பாருங்க சார், உங்க பையன்கள் என்னை இளநீர் மண்டை என்று சொல்லிவிட்டு ஓடுகிறார்கள்!"

"அது ஒன்றுமில்லை சார். அடிக்கடி தலையில் நீர் கொள்ளுகிறது என்று சொல்றேன். அதனால்தான்.....!"

கம் செலுத்தினான். சம்பிரதாயப்படி இலேசாக முழுவதும் செய்தான். என்றாலும் என்ன காரணத்தாலோ அவரோடு நின்று பேசிக் கொண்டிருக்க அவன் மனம் இணங்கவில்லை. உடனடியாகவே போய் விடும் நோக்கத்தில் "அன்று முதல் எனக்கு உடம்பு சரியாக இல்லை" என்று சொல்லிக் கொண்டே நடந்தான். அவனுடைய அலட்சியப் பார்வையும், மிடுக்கான போக்கும் அவருக்கு வியப்பையும், சிறிது ஆத்திரத்தையும் உண்டுபண்ணின. "தவறாக எண்ணிக்கொண்டாய் போல் இருக்கிறது!" என்றார் அழுத்தம் திருத்தமாக.

'இவர் ஏன் இப்படிச் சொல்ல வேண்டும்? இவருக்கு ஏன் இப்படித் தோன்ற வேண்டும்? இவர் பெரிய மனிதராக இருந்தால் நமக்கு என்ன?' அவன் நின்றான். "சரியாகவே கணித்து விட்டீர்கள்" என்றான்.

"அநாவசியமாகச் சந்தேகப்பட்டு மனத்தைக் கெடுத்துக் கொள்ளாதே! போனால் போகிறது. எப்பொழுதும் நீ விரும்பினால் எங்கள் காரியாலயத்தில் வேறு ஒரு வேலையை உனக்கு அளிக்க என்னால் முடியும். நான் அந்தக் கம்பெனியின் உதவி மானேஜர் மட்டுமல்ல; ஒரு டைரக்டரும் கூட. மூலதனத்தில் பெருவாரியான பங்கு என்னுடையது."

"எனக்கு வேலை தேவைதான்; காரியாலயத்தில் மட்டுமே பார்த்துப் பேசி அளிப்பதாக இருந்தால்...."

அவர் சிரித்தார். "என் வீட்டுக்கு வர விருப்பம் இல்லை என்கிறாய். அதுதானே?" என்றார். அவன் 'ஆம்' என்னும் பாவனையில் தலை அசைத்தான். அவரும் மேலும் கீழுமாகத் தலையை ஆட்டினார். "என்ன செய்வது! என் மேல் பிசகில்லை. எவரோ சிலர் செய்கிற நேர்மையற்ற செயல்கள் என் போன்றவர்களையும் சந்தேகிக்கச் செய்கின்றன. ஆயினும் உன்னுடைய திடசித்தத்தையும் நேர்மையான போக்கையும் நான் மிகவும் பாராட்டுகிறேன். திங்களன்று காரியாலயத்துக்கு வந்து வேலையை ஒப்புக் கொள்" என்று கூறிவிட்டு அவர் வேகமாக நடந்து சென்று காரில் ஏறிக் கொண்டார். ராதா ஓடும் காரை உற்று நோக்கியபடி அசைவற்று அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

அன்று மாலை அவன் எங்கெங்கோ போக வேண்டும் என்று புறப்பட்டான். ஆனால் ஓர் இடத்துக்குக் கூடப் போகவில்லை. விரைவாகவே வீட்டுக்குத் திரும்பி விட்டான். இரவு முழுவதும் ஏதேதோ சிந்தனைகள். அந்த உதவி மானேஜரைப் பற்றி அவன் உள்ளம் முன்பு கொண்டிருந்த அபிப்பிராயம் சிறுகச் சிறுகக் கரையத் தொடங்கியது. 'அவர் நல்லவர்; உத்தமர்; நேர்மையான முறையில் ஏதோ பேச எண்ணித்தான் நம்மை வீட்டுக்கு அழைத்திருக்கிறார். நாம் அதைத் தவறாக எடுத்துக் கொண்டது சரியல்ல' என்று எண்ணினான். அந்த எண்ணம் வரவர வலுப் பெற்றுக் கொண்டு வந்தது.

மறுநாள் மாலை. அவன் அலங்கரித்துக் கொண்டு வெளியே கிளம்பினான்.

அன்று அந்த உதவி மானேஜர் கொடுத்த சீட்டை அவன் உடனே கிழித்தெறிந்து விட்டாலும் அதில் இருந்த விலாசத்தை அவன் பார்த்திருந்தான். எந்த ஒன்றையும், பார்த்த உடனேயே மனத்திலே பதித்துக் கொள்ளும் இயல்புடைய அவன் உள்ளத்தில் அந்த விலாசமும் நன்கு பதிந்திருந்தது. அதனால் இடத்தை விசாரித்துக் கொண்டு அதிகம் சிரமப்படாமல் அங்கே போய்ச் சேர்ந்தான்.

'கண்ணபிரான்' என்று காம்பவுண்டு வாசலில் சலவைக் கல்லில் பொறித்திருந்த பங்களா முன் அவன் போய் நிற்பதற்கும் வேறு திசையிலிருந்து அந்த உதவி மானேஜர் அங்கே காரில் வந்து இறங்குவதற்கும் நேரம் மிகவும் பொருத்தமாக இருந்தது. "வா!" என்று அவர் வாய் நிறைய அழைத்தார். அவனும் அவரை நோக்கிக் கரம் குவித்து முறுவலித்தான். இருவரும் உள்ளே சென்றார்கள். கூடத்தில் இருந்த சோபாக்களில் ஒன்றில் அவர் அமர்ந்து கொண்டார்; அவனையும் அமரச் சொன்னார்.

பணத்தினாலும், பதவியினாலும் கண்ணபிரான் பெரிய மனிதனாக விளங்கினானே அன்றி, வயதினால் இளையவன்தான். அவனிடம் கொழித்து நின்ற வாலிபத்தின் மிடுக்குத்தான் அவன் உள்ளத்தில் முன்பு அபிப்பிராயபேதத்தை உண்டுபண்ணி இருந்தது. இரண்டாவது சந்திப்பில் அவன் நடந்து கொண்ட முறை அந்த அபிப்பிராயத்தைத் துடைத்துக் கண்ணியத்தை உண்டு பண்ணி வைத்தது. அதனாலேயேதான் அவன் மறுமுறை வற்புறுத்தாமல் இருந்தும், அவன் தானாகவே அவனை நாடி வந்தான். அது மட்டும் அல்ல: அவன் ஆசனத்தில் அமர்ந்ததும், முதல் கேள்வியாக "நான் நல்லவன் என்று யாராவது சொன்னார்களோ!" என்று அவன் கேட்டதும், அவன் குனிந்தவாறு, "இல்லை. அபிப்பிராயக் குறைவை உண்டு

# ஜம்மியின் "லிவர்க்யூர்"

## குழந்தைகளின் சகல குலேக்கட்டி வியாதிகளுக்கு

## மாதாந்திர விஜயம்

எமது வாடிக்கையாளர்களின் நலனையும், சௌகரியத்தையும் முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். அப்பொழுது அவரை நேரில் கலந்து ஆலோசிக்கலாம்.

| இடம் | தேதி | நேரம் | விலாசம் |
|---|---|---|---|
| கரூர் | 1 | 9 to 11 காலை | சென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ் |
| சேலம் | 2 | 9 to 11 காலை<br>3 to 5 மாலை | சாந்திநிகேதன் (கோயமுத்தூர் வாட்ஜ், பிராஞ்சு) |
| ஈரோடு | 3 | 9 to 11 காலை | நவபவனம் வாட்ஜிங் (கோஷா ஆஸ்பத்திரிக்கு எதிரில்) |
| திருப்பூர் | 3 | 3 to 5 மாலை | ஆர். எஸ். வாசன் & கோ, கெமிஸ்ட்ஸ் |
| கோயமுத்தூர் | 4 | 9 to 11 காலை<br>3 to 5 மாலை | சல்வர் & கோ., (நாடார் மான்ஷன்) 189, ரங்கைய கவுடர் தெரு |
| பாலக்காடு | 5 | 8-30 to 11-30 காலை | நாதம் & கோ., மெடிகல் ஷாப் |
| பொள்ளாச்சி | 5 | 2-30 to 3-30 மாலை | எஸ். எஸ். மணி & கோ., மெடிகல் ஷாப் |
| உடுமலைப்பேட்டை | 5 | 4-30 to 5-30 மாலை | ராஜேந்திரா & கோ., மெடிகல் ஷாப் |
| பழனி | 5 | 6-30 to 7-30 இரவு | ஷண்முகானந்த பவன், ரயில்வே பீடர்ஸ் ரோடு |
| திண்டுக்கல் | 6 | 9 to 11 காலை | வி. ஆறுமுகம் பிள்ளை & சன்ஸ் ஜெனரல் மர்ச்சண்ட்ஸ் |
| பெரியகுளம் | 6 | 2-30 to 3-30 மாலை | யூனியன் 'மெடிகல் ஸ்டோர்ஸ், மூவிளக்கு ரோடு |
| மதுரை | 7, 8 & 23 | 9 to 11 காலை<br>3 to 5 மாலை | டி. என். வி. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ் கெமிஸ்ட்ஸ், வடக்கு சித்திரை வீதி |
| விருதுநகர் | 9 | 8 to 9 காலை | சரவணமுத்துபிள்ளை சத்திரம், மதுரை ரோடு |
| கோவில்பட்டி | 9 | 10-30 to 11-30 காலை | தனலக்ஷ்மி மெடிகல் மார்ட், கெமிஸ்ட்ஸ் |
| தூத்துக்குடி | 9 | 3 to 4 மாலை | தூத்துக்குடி மெடிகல் ஸ்டோர்ஸ் |
| திருநெல்வேலி | 10 | 9 to 11 காலை<br>3 to 5 மாலை | சந்திரவிலாஸ் ஹோட்டல் திருநெல்வேலி ஜங்ஷன் |
| நாகர்கோவில் | 11 | 9-30 to 11-30 காலை | என். திரவியம், கெமிஸ்ட்ஸ் & டிரக்கிஸ்ட்ஸ் |
| ஸ்ரீவைகுண்டம் | 11 | 4 to 5 மாலை | கோமதி நாயகம் பிள்ளை, மெடிகல் ஷாப் |
| அம்பாசமுத்திரம் | 12 | 8-30 to 10-30 காலை | கோமதி மெடிகல் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ் |
| தென்காசி | 12 | 12to2-30மாலை | எஸ். கிருஷ்ண & கோ., மெடிகல் ஸ்டோர்ஸ் |
| திருவனந்தபுரம் | 13 | 9 to 11 காலை<br>3 to 5 மாலை | எம். வி. கணபதி ஐயர் & சன்ஸ், அட்டக்குளங்கரை |
| ராஜபாளையம் | 14 | 9 to 11 காலை | வி.எஸ். திருப்பதி ராஜா, ஜெனரல் மர்ச்சன்ட் |
| ஸ்ரீவில்லிபுத்தூர் | 14 | 12-30 to 1-30 மாலை | டி.பி.வி.டி.ச. சீதாராம கோனார் & கோ., பித்தளை பாத்திரம் வியாபாரிகள் |
| காரைக்குடி | 15 | 9 to 11 காலை<br>3 to 5 மாலை | ஏ. வி. & சன்ஸ், டிராவலர்ஸ் ரெஸ்ட் ஹவுஸ் |
| சிவகங்கை | 16 | 8-30 to 9-30 காலை | மீனாட்சி & கம்பெனி., கெமிஸ்ட்ஸ் |
| தேவகோட்டை | 16 | 11 to 12 பகல் | ஸ்ரீ மீனாக்ஷி ஸ்டோர்ஸ் |
| புதுக்கோட்டை | 16 | 3 to 5 மாலை | வசந்தா வாட்ஜ் |

## ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

சென்னை · திருச்சிராப்பள்ளி · கும்பகோணம்


பண்ணிக் கொண்டதும் நான்தான், அதைப் போக்கிக் கொண்டதும் நானேதான்'' என்று உள்ளது உள்ளபடி பேசினான். தொடர்ந்து, ''அன்று நீங்கள் கொடுத்த விலாசக் குறிப்பை உங்கள் காரியாலய வாசலிலேயே விழித் தெறிந்து விட்டேன். மன்னிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள்.

''ராதா!...அதுதானே உன் பெயர்? அவ்வாறு நடந்து கொள்ளக் கூடியவள் என்று உன்னைப் பார்த்தமாத்திரத்திலேயே தெரிந்து கொண்டேன். அந்தப் பண்பு உன்னிடம் இருப்பதை ரசித்து உணர்ந்ததனால் தான் உன்னை என் வீட்டுக்கு வரும்படி அழைத்தேன். நோக்கம், உன்னைப் பற்றி அறிந்து கொள்ளலாம் என்பதுதான். முதலாவதாக உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன், உனக்குத் திருமணம் ஆகி விட்டதா?''

''இல்லை... ஏன்?'' என்றவள் தன் பார்வையை அவன் கண்களில் நிலைநிறுத்தினாள்.

''செய்து கொள்கிற உத்தேசம் உண்டா?''

அவள் கண்கள் கலங்கின. ''என் கண்முன்னே முதலிடம் பெற்றுள்ள ஏழை படுக்கையில் நோய் வாய்ப்பட்டு உழலும், தகப்பனாரின் உருவம், அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்ற நிலையில் உள்ள குடும்பத்தின் வறுமை, படிக்க வகையற்றுப் பிச்சைக்காரச் சிறுவனைப் போல் தெருவில் அலைந்து கொண்டிருக்கும் தம்பியின் எதிர்காலம் ஆகியவைதான். இந்நிலையில் திருமணம் முதலிய இனிமையான நினைவுகளுக்கோ இல்வாழ்வு முதலிய சுயநல உணர்வுகளுக்கோ என் உள்ளத்தில் இடம் ஏது?''



''நியாயம்! ஆனால் உன் குடும்ப நிலைமை உத்தியோகம் பார்த்துச் சம்பாதித்துத்தான் சீர் செய்ய வேண்டும் என்பதில்லையே?''

''பின்....?''

''நீ நல்வாழ்வில் ஈடுபடுவதன் மூலம் அதைச் செய்ய முடியாதா? தெளிவாகச் சுருக்கமாக நன்கு விளங்கும்படியாகச் சொல்கிறேன் கேள்! என்னுடைய விவரம் தெரியாத பருவத்திலேயே என் பெற்றோர் காலமாகி விட்டார்கள். என் தகப்பனாரின் நண்பர், என்னை ஆளாக்கிப் படிப்பையும் பண்பையும் புகட்டி, உரிய காலத்தில் என் சொத்துக்களை என்னிடம் அளித்தார். சமீபத்தில் அவர் மறைந்தார். தற்போது நான் ஈடுபாடுகொண்டிருக்கும் கம்பெனித் தொடர்பும் அவர் ஏற்படுத்தி வைத்ததுதான். எனக்கு ஒரே ஒரு தமக்கை இருக்கிறாள். எங்கே இருக்கிறாள் என்பது தெரியாது. ஓரளவு நல்ல நிலையில் இருக்கிறாள் என்று தெரிகிறது. என்னுடைய சொத்தில் ஓரளவு அவள் முன்பே கரைத்து விட்டாளாம். மேலும் மேலும் கரைக்க முயன்றாளாம். என் தகப்பனாரும், பிறகு தகப்பனாரின் நண்பரும் அதற்கு இடம் தரவில்லை. இரண்டொரு முறை அவளைக் காண நான் சென்றேன். அவமானமுற்று வந்தேன். இன்று அவள் எங்கே இருக்கிறாளோ? ஆகவே, என் நலனில் கருத்துடைய எவருமே இன்று இல்லை. அதனால் என் வாழ்வு முதலிய எதிர்காலத் திட்டங்களை நானே அமைத்துக் கொள்ள வேண்டியவன் ஆனேன். படிப்பும், பண்பும், அழகும், அறிவும் உடைய பெண் என்றாவது எதிர்ப்படுவாள் என்று காத்திருந்தேன். எளிய குடும்பத்தில் பிறந்த பெண்ணானாலும் பரவாயில்லை என்று தீர்மானித்திருந்தேன். அன்று முதன் முதலாக உன்னைக் கண்டதும் என் உள்ளம் மலர்ந்தது. அதனால் உன்னை வீட்டுக்கு அழைத்தேன். தெய்வத்தின் திருவருள் இருப்பதால்தான் முதலில் மறுத்தாலும் பிறகு நீயாகவே இப்பொழுது வந்திருக்கிறாய்.'' கண்ணபிரான் சற்று நிறுத்தினான்.

ராதா சிறிது நேரம் வாய் திறக்கவில்லை. அவள் உள்ளத்திலே பலவிதமான உணர்ச்சிகள் மோதுகின்றன என்பது, அவளுடைய முகத் தோற்றத்திலே நன்றாகத் தெரிந்தது. அவள் நன்கு சிந்திக்கட்டும் என்று எண்ணியவன் போல், கண்ணபிரான் உள்ளே சென்றான். சிறிது நேரத்துக்குப் பின் முதிய தோற்றம் கொண்ட ஒருவர் அங்கே வந்தார். ராதாவுக்குக் காப்பி கொடுத்தார். அவள் மறுத்தாள். அவர் நெடுநாட்கள் பழகியவர் போல் வற்புறுத்தினார். அது மட்டும் அன்று; அறிவுரை தரும்படியாகவும் சில வார்த்தைகள் சொன்னார். ''கண்ணபிரான் சொன்னதெல்லாம் என் காதிலும் விழுந்தது. அம்மா! நீ இந்த வீட்டை விளங்க வைக்கும் விளக்காக அமைய வேண்டும் என்பதுதான் தெய்வத்திடம் நான் செய்யும் பிரார்த்தனையும்'' என்று சொல்லி விட்டுக் காப்பிப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

மேலும் சிறிது நேரத்துக்குப் பின் கண்ணபிரான் அங்கே வந்தான். அவளைக் கண்ட

தும் அவள் எழுந்தாள். "போதாகிறது. நான் வரட்டுமா?" என்றாள்.

"சரி என்று விடை தருவதைத் தவிர நான் வேறு என்ன சொல்ல முடியும்?" என்றான் அவன். அவனுடைய அந்தச் சொற்கள் அவள் உள்ளத்தைக் கனிய வைத்து மனம் விட்டுப் பேசச் செய்தன.

"கனவிலும் எதிர்பாராத மலை போன்ற பிரச்னை எதிர் நின்று என்னைத் திணறச் செய்யும் என்று இங்கே வரப் புறப்படுகிறபோது என் மனத்தில் தோன்றவில்லை. அதனால் சட்டென்று எந்தப் பதிலும் சொல்லத் தோன்றவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து பயமுறுத்திக் கொண்டே இருக்கிறது. நான் நிரம்பச் சிறுகதை, நாவல் முதலியன படித்திருக்கிறேன். இம்மாதிரிக் கூட்டுறவு இறுதி வரை சம்பந்தப் பட்டவர்களை நிம்மதியான வாழ்க்கையில் அமர்ந்திருக்க விடுவதில்லை. அதை நினைக்கும்போது..."

"அதாவது, எளிய குடும்பத்துக்கும் பணக்காரக் குடும்பத்துக்கும் ஏற்படுகிற உறவு பரிமளிப்பதில்லை என்கிறாய். அதுதானே. ராதா! என்வரையில் நீ அம்மாதிரியான கவலையோ, அச்சமோ கொள்ளவே வேண்டாம். எந்த வகையில் உறுதி கேட்கிறாயோ, அந்த வகையில் உறுதி அளிக்கவும் கடைசிவரையில் அதே முறையில் நடந்து கொள்ளவும் பின் வாங்க மாட்டேன்."



ராதாவின் முகத்திலே தெளிவு தென்பட்டது. "அப்பா, அம்மாவைக் கலந்து கொண்டு முடிவு சொல்கிறேன்" என்று கூறிக் கை கூப்பி விடைபெற்றுக் கொண்டாள்.

ராதா ஏதேதோ எண்ணித் தயங்கினளே தவிர, அவள் சொன்ன செய்தியைக் கேட்டதும் அவளுடைய பெற்றோர் 'ஆ' என்று வாயைப் பிளந்தனர். "உடனே சரி என்று சொல்வதற்கு என்ன?" என்றுகூட மகளைக் கடிந்து கொண்டனர். அவள் தன்னுடைய வருங்காலத்தில் நிகழக் கூடிய சாதக பாதகங்களைப் பற்றி எவ்வளவோ எடுத்துக் கூறினாள். பெரியவர்கள் காதில் ஒன்றுமே ஏறவில்லை.

★

ராதாவும் கண்ணபிரானும் தம்பதிகள் ஆயினர். அவன் வாக்குக் கொடுத்தபடி அவள் பிறந்த வீட்டுக்குத் தேவையான தொகையை மாதந்தோறும் அளித்து வந்தான். இதனால் அந்தக் குடும்பம் பகமையாக வாழத் தொடங்கியது. குருமூர்த்தியும் மீண்டும் பள்ளியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினான். என்றாலும் மகாலிங்கத்தின் உடல் நிலை மட்டும் நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து கொண்டுதான் வந்தது.

'இறைத்த கிணறு ஊறும்' என்பது போல் கண்ணபிரான் அந்த ஏழைக் குடும்பத்துக்கு உதவத் தொடங்கினதால்தானோ அல்லது, 'ராசி' என்று குறிப்பிடுகிற முறையில் ராதா, கண்ணபிரானுக்கு மாலையிட்டதால்தானோ சில மாதங்களுக்குள் அவனுக்குக் கம்பெனி மூலம் எதிர்பாராத வகையில் ஏராளமான பொருள் வந்து சேர்ந்தது. அதைத் தொடர்ந்து மிகப் பெரிய மனிதர்கள் பலருடைய தொடர்பும் கிடைத்தது.

அந்நிலையில் ஒரு நாள்....

கண்ணபிரானின் இல்லத்துக்குப் பெரிய பெரிய சீமான்களும், சீமாட்டிகளும் விருந்தினராய் வந்திருந்தனர். ராதாவும் கண்ணபிரானும் பங்களாவின் முன்புறத்திலே பூஞ்சோலை நடுவிலே அவர்களுக்குத் தேநீர் விருந்து அளித்து அளவளாவிக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் குருமூர்த்தி தாயுடன் அங்கு வந்தான். கண்ணபிரானின் முகம் விகாரமான மாறுதலைப் பெற்றது. ராதா அதைக் கவனித்தாள்.

'பார்ட்டி' முடிந்து அனைவரும் சென்றபின் கண்ணபிரான் தன் மனைவியிடம் கோடை இடி போல் கர்ஜித்தான். "இனிமேல் இவர்கள் இங்கே வரக் கூடாது" என்றான்.

குருமூர்த்தியும் அவன் தாயும் அச்சத்துடன் அங்கிருந்து நழுவிவிட்டனர்.

ராதாவுக்கு நெஞ்சு கொதித்தது.

"இவ்வளவு சீக்கிரத்திலேயே சொன்ன சொல்லை மறந்து நீங்கள் இப்படி நடந்து கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை" என்றாள்.

கண்ணபிரான் மேலும் இரைந்தான். "சொன்ன சொல்? உடன்பிறந்த வீட்டுக்கு உதவுகிறேன் என்றேனே தவிர, அவர்களையெல்லாம் கட்டிக்கொண்டு அழுகிறேன் என்று சொல்லவில்லையே?" என்றான்.

அன்று இரவெல்லாம் அவள் குமுறிக் குமுறிக் கண்ணீர் வடித்தாள். அவனும் இரவெல்லாம் கண் மூடாமல் யோசித்தான். அவளைச் சமாதானப்படுத்தி ஏதாவது ஒரு வகையில் இந்த உறவைத் துண்டித்துவிட எண்ணினான். அதேமாதிரி அவளும் துயரம் அடங்கிய நிலையில் ஒரு சமரச நிலையை எய்தினாள். "உறவு அற்றாலும் உபகாரமாவது நீடித்தால் சரிதான்" என்று எண்ணினாள். பெரும் அளவில் ஒரு தொகையை அந்தக் குடும்பத்துக்கு அளித்து விடுவது என்பதுதான் அவன் முடிவு. அவளும் ஒருவாறு அதை ஏற்றுக் கொண்டாள். சில நாட்களுக்குப் பின் ஒருநாள் மாலை ஐயாயிரம் ரூபாயுடன் தம்பதிகள் இருவருமே மகாலிங்கத்தைக் காணச் சென்றனர். பணத்தை அளித்துப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினர்.

மறுநாள் காலையில் ராதாவுக்கு எட்டிய செய்தி! நடுநிசியில் மகாலிங்கம் உயிர் நீத்தார். அந்தத் துர்ப்பாக்கிய வேளையில், திருடர்கள் சிலர் புகுந்து தொகையைக் களவாடிச் சென்றனர்! அவள் தந்தையை நினைத்து அழுவாளா? தாய், தம்பி ஆகியோரின் துர்ப்பாக்கியத்தை எண்ணி அழுவாளா?

கண்ணபிரானும் எல்லாம் கேள்விப்பட்டான். அவன் உள்ளம் எதையுமே பொருட்படுத்தவில்லை. சில நாட்களுக்குப் பின் ராதா அவர்களுக்கு உதவி செய்வதற்கு, பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். "இங்கே கொள்ளை அடித்து யாரும் சேர்த்து வைத்திருக்கவில்லை.

இனி இங்கிருந்து செல்லாக் காசுகூட வெளியே அனுமதிக்க மாட்டேன்'' என்று கண்டித்துக் கூறிவிட்டான்.

ராதாவின் உடைந்த உள்ளம் ஒன்றுபடவில்லை. உள்ளத்தை ஒட்டி அவள் உடலும் சீர்குலைந்து விட்டது. அந்நிலையிலேயே அவள் தாய் ஆனாள். குழந்தை குந்தளம் வளர்ந்து வந்தாள். ராதா அந்த வீட்டிலே நடைப்பிணமாக நடமாடி வந்தாள்.

அன்று கண்ணபிரான் வெளியே சென்றபின், ராதாவுக்கு ஆள் வந்தது. அவள் தாய் அவளைப் பார்க்க விரும்புகிறாள் என்று. அவள் உடனே புறப்பட்டாள். சிறிது தூரம் சென்றாள். கண்ணபிரான் எதிரே காரில் வந்து கொண்டிருந்தான்.

கார் கிரீச்சிட்டு நின்றது. ''இங்கே வா!''

அவள் காரை அணுகினாள். அவன் கார் கதவைத் திறந்து கொண்டே, ''ஏறு'' என்று சைகை செய்தான். நடுத்தெருவிலே நாலுபேர்கள் பார்க்க அவனோடு விவாதம் செய்து கொண்டிருக்க மனமற்ற ராதா மௌனமாக வண்டியில் ஏறினாள். கார் கன வேகமாகப் பறந்தது. பங்களாவை அடைந்ததும், கண்ணபிரான் துள்ளிக் குதித்தான். 'இனி அந்த வீட்டுக்குப் போனால் இங்கே வரக்கூடாது' என்று கண்டிப்பாகக் கூறினான்.

ராதா தன் நகைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி அவன் எதிரே மேஜையின்மேல் வைத்தாள். மாங்கல்யம் ஒன்றுதான் பாக்கி. அந்நிலையில் அவன் நீர் மல்கிய கண்களால் அவளை நிமிர்ந்து பார்த்தான். ஏதோ சொல்வதற்கு வாயெடுத்தான். சொல் வரவில்லை. தெருவை நோக்கி நடக்கலானாள்.

சிறிது தூரம் சென்றபோது தெருவில் பள்ளிக்கூடத்துச் சிறுவர் சிறுமியர் தெருவில் செல்வதைக் கண்டாள். 'குந்தளமும் பள்ளிக்கூடம் விட்டு வீடு திரும்புவாள். தாயைக் காணாது கண் கலங்குவாள். சமையற்காரப் பாட்டி விவரம் சொன்னால் குழந்தை அழுவாள்.' இப்படி எண்ணியதும் அவளுக்கு அழுகை வந்தது. அதற்காக நிற்கவில்லை. அழுதுகொண்டே நடந்தாள். 'அன்னையின் ஆவி இந்நேரம் பிரிந்திருக்குமோ!' என்ற எண்ணம் அவள் நடையிலே வேகத்தை உண்டு பண்ணியது.

அந்தக் கிழவி அதிகநேரம் வாழ்ந்திருக்கவில்லை. இறுதிக் காலத்தில் மகள் தாய்க்கு ஆற்ற வேண்டிய பணிவிடைகளை நன்கு ஆற்ற முடிந்ததில் ராதாவுக்குத் திருப்தி.

பல காலத்துக்குப் பின் அவள் கேள்விப்பட்ட செய்தி? 'கண்ணபிரான் கோர்ட்டிலே விவாகரத்து வழக்குத் தொடரப் போகிறான்; விரைவில் வேறு பெண்ணை மணக்கப் போகிறான்' என்பதுதான்.

முதலில் துடித்தாள். பிறகு மனத்தை ஒருவாறு சமாதானம் செய்து கொண்டாள். ஆயினும் குந்தளம்? ... 'மாற்றாந்தாயின் கொடுமையில் சிக்கித் தத்தளிக்கவோ என் செல்வியை இதுவரை அருமை பெருமையாக வளர்த்தேன்!' --- இப்படி எண்ணுந்தோறும் அவள் இருதயம் பிளந்து விடும்போல் இருந்தது; இதன் விளைவால் அவள் உடல் நலிந்தாள். படுக்கையில் வீழ்ந்தாள்.

''ராதா...!''

படுக்கையின் அருகே கண்ணபிரான்! அவன் அருகே குந்தளம். தன் மகளைக் கண்டதும் உணர்ச்சிப் பெருக்கை அடக்க மாட்டாதவளாக 'விருக்'கென்று எழுந்து விட்டாள். ''குந்தளா!'' என்று குழறியபடி இரு கரங்களையும் நீட்டினாள்.

கண்ணபிரான் கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டு, ''வாசலில் வாடகைக் கார் காத்துக் கொண்டிருக்கிறது. வீட்டைப் பூட்டிக் கொண்டு குருமூர்த்தியையும் அழைத்துக்கொண்டு கிளம்பு. வருகிறபோது 'போன்' செய்து விட்டு வந்ததால் டாக்டர் அங்கே வந்து காத்துக் கொண்டிருப்பார்'' என்றான்.

ராதா வியப்பின்மேல் வியப்பை அடைந்தாள். கணவனும், மகளும் அவளைக் காண வந்தது முதல் வியப்பு; புது மாடல் கார் போய், வாடகைக் கார் ஏற்பட்டிருந்தது இரண்டாவது வியப்பு; கண்ணபிரான் என்று சலவைக்கல்லில் பொறித்த முகப்பை உடைய பங்களாமுன் அந்த வாடகைக் கார் நில்லாமல் சாதாரணமான சிறிய வீடு ஒன்றின் முன்னே நின்றது மூன்றாவது வியப்பு. அனைத்தையும் விட முக்கியமாக அவள் உள்ளத்தில் வியப்பைத் தோற்றுவித்தது அந்த வீட்டிலே மனிதர்கள் நிறைந்திருந்ததுதான். அவர்கள் யார் என்பதைப் புரிந்துகொள்ள அவளுக்கு அதிகநேரம் பிடிக்கவில்லை. அங்கிருந்த அம்மாளைக் கண்ணபிரான், ''அக்கா! அக்கா!'' என்று அடிக்கடி அழைத்ததும், அங்கே விளையாடி வந்த குழந்தைகள் அவனை, ''மாமா, மாமா'' என்று அழைத்ததும் ஆகிய செயல்கள் உண்மையை உடனடியாகவே விளக்கி வைத்தன. ஆனால், 'தமக்கை நல்ல நிலையில் இருப்பதாக இவர் சொன்னாரே!' என்று மனத்தின் ஒரு புறத்தில் கேள்வி எழுந்தது. உடனேயே அதற்கும் சமாதானம் கிடைத்து விட்டது. 'குபேர சம்பத்தில் கொழிக்கிறோம் என்ற கர்வத்தில் தலைகால் புரியாமல் துள்ளிக் குதித்த இவர் இன்று இந்நிலை மாறியிருப்பது அதிசயம் இல்லை' என்று எண்ணிக் கொண்டாள். பிறகு கண்ணபிரானே சாவதானமாக அனைத்தையும் விளக்கினான்.

விவாகரத்து, மறுமணம் என்ற நினைவுகளுக்கு அவன் ஒரு போதும் அடிமையாகவே இல்லை. அப்படி ஒரு செய்தியை எட்டவிட்டு ராதாவை மடக்கக் கருதினான். அவ்வளவுதான். கம்பெனி இருக்கிறது; அதில் அவன் உதவி மானேஜராகவும் இருக்கிறான். ஆனால் கம்பெனியின் செழுமை மட்டும் வறண்டு விட்டது. அது அவனிடமும் வறட்சியை உண்டு பண்ணி விட்டது. ஒரு நாள் கடற்கரையில் சுண்டல் விற்கும் சிறுவனைக் கண்டு, அவன் மூலம் தன் தமக்கை அதே ஊரில், பாரிச நோயுற்ற கணவரோடும் மக்களோடும் வறிய நிலையில் வாழ்கிறாள் என்று அறிந்தான். அந்தக் கணமே அவன் அறிவுக்கண் திறந்தது. சுண்டல் விற்கும் தமக்கை பிள்ளையோடு அவர்கள் இருப்பிடம் சென்றான். அவர்களைத் தன் வீட்டோடு அழைத்துக் கொண்டான்.

இப்போது அந்த மூன்று குடும்பங்களிடையேயும் அந்தஸ்தின் தராதரம் குறுக்கிடவில்லை. 'இப்போதுதான் எனக்கு நிஜ வாழ்வு கிடைத்தது' என்று ராதா அகமகிழ்ந்தாள்.

**Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10**
**Managing Editor: T. Sadasivam.**

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

